உபதேசங்கள் எச்சரிக்கை



சாது செல்லப்பா

உபதேசங்கள்

எச்சரிக்கை

ஆசிரியர்

சாது செல்லப்பா

முதலாம் பதிப்பு 2000 Copies 1992
இரண்டாம் பதிப்பு 2000 Copies 1994
மூன்றாம் பதிப்பு 2000 Copies 2001

Publishers
AGNI MINISTRIES INC.
4, Sivamipuram, 2nd Cross Street
Thiruvanmiyur, Chnnai - 600 041.
PHONE: 44 - 491 7519
Web: www.aganiministries.com
e-mail: agni©md3.vsnl.net.in

கிடைக்கும் இடம்:
சாது செல்லப்பா
4, சிவகாமிபுரம்,
2வது குறுக்குத் தெரு,
திருவான்மியூர், சென்னை - 41.

அச்சிட்டோர்:
கதிரவன் (ஆப்செட்) அச்சகம்
கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை,
(எல்.பி.ரோடு) திருவான்மியூர்,
சென்னை - 600 041.
தொலைபேசி: 491 9801 / 491 4808.

பொருளடக்கம்

1. ஏழாம் நாள் ஓய்வு நாளா? 5

2. வேதாகமத் திருச்சபை 34

3. தீர்க்கதரிசனம் 57

4. ஞானஸ்நானம் 70

5. கடைசி கால விசுவாசம் 98

6. யேகோவா சாட்சிகள் 126

ஏழாம் நாள்
ஓய்வு நாளா

1. ஏழாம் நாள் ஓய்வு நாளா?

ஏழாம் நாள் என்பது குறித்து, அசம்பிளி ஆப் காட் சபையின் முதுபெரும் போதகர் பாஸ்டர் ஆதாம் துரை அவர்கள் வெளியிட்ட ஒரு துண்டு பிரதியை முதலாவது அப்படியே வெளியிட்டு அதன் பின்பு என் கருத்தையும் எழுதுகிறேன். பாஸ்டர் ஆதாம் துரையவர்கள் இந்த ஏழாம் நாளுக்கு வைத்த பெயர்

''ஒழிந்து போன ஏழாம் நாள்''

☆ ☆ ☆

''ஒழிந்து போன ஏழாம் நாள்''

ஏழாம் நாள் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவனுக்கு கொடுக்கப்பட்ட பிரமாணமல்ல. அது பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலருக்கு மட்டும் கொடுக்கப்பட்டது.

1. தேவன் இஸ்ரவேலருக்கு கொடுத்த கட்டளை

கர்த்தர் மோசேயினிடத்தில் நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி நீங்கள் என் ஓய்வு நாட்களை ஆசரிக்க வேண்டும். உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை அறியும்படி இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும். *(யாத்.31:12,13, எசே. 20:12,20).*

2. ஓய்வு நாள் ஒரு பண்டிகை ஆசரிப்பாகும்

பத்துக் கட்டளையை, இது எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கம் என்று சொல்லாமல் ஓய்வு நாளை மட்டும் எனக்கும் உங்களுக்கும் உள்ள அடையாளமாயிருக்கும் என்று சொன்னார். ஏனென்றால், ஏழாம் நாளாகிய

ஓய்வு நாளையும் இஸ்ரவேலின் பண்டிகையாகவே வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. *(லேவி.23:1-3).*

3. சிருஷ்டிப்பிலிருந்து ஓய்வு நாள் ஆசரிப்பு இருந்ததா?

இல்லை. ஆபிரகாமுக்குப் பின் 430 வருடங்களுக்குப் பின்தான் ஓய்வு நாள் பிரமாணம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. சிருஷ்டிப்பிலிருந்து மோசேயின் காலம் வரை ஓய்வு நாளை ஒருவரும் ஆசரித்ததாக இல்லை. மனிதனுக்குக் கட்டளையாகக் கொடுக்கப்படவும் இல்லை என்பது சத்தியம். *(கலா.3:17).*

4. இயேசு கிறிஸ்து ஓய்வு நாளை ஆசரித்ததாக வேதத்தில் ஆதாரம் உண்டா?

இயேசு கிறிஸ்து ஓய்வு நாளை மீறினதாகவே குற்றம் சாட்டினார்கள். இவன் ஓய்வு நாளை கைக் கொள்ளாததினால் இவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். யோவா.9:16. இன்றும் அநேக இடங்களிலும் ஓய்வு நாளை மீறினதாகவே குற்றம் சாட்டப்பட்டார்.

(மத்.12:1-15; லூக்.13:10-17; லூக்.14:1-6; யோ.5:5,18).

5. இயேசு கிறிஸ்து ஓய்வு நாள் பிரமாணத்தை எங்கேயாவது போதித்தாரா?

ஜனக் கூட்டத்திற்கும், சீஷர்களுக்கும் எத்தனையோ விதமான போதனைகளைக் கொடுத்தார். ஒரு இடத்திலாவது ஓய்வு நாளை ஆசரிக்க போதித்ததாக வேத ஆதாரம் இல்லை. ஏன் அதைச் சொல்லவில்லை? மறந்துவிட்டாரா? இல்லை. அது அவருடைய உபதேசமும் அல்ல. அது புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவனுக்குரிய சட்டமும் அல்ல.

6. இயேசு கிறிஸ்துவும், பவுலும் ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திற்குப் போனது ஓய்வு நாளை ஆசரித்ததாகுமா?

இயேசு விருத்த சேதனம் பெற்றார். பஸ்கா ஆசரித்தார். நாமும் அப்படிச் செய்ய வேண்டுமா? சங்கரன் கோயில்

ஆடி தபசுக்கு வழக்கமாய் தவறாமல் போகிற கிறிஸ்தவ ஊழியர்கள் உண்டு. அவர்கள் போவது ஆடித்தபசு கொண் டாடவா? அல்லது அம்மன் சாமியைக் கும்பிடவா? இல்லை. ஆடித்தபசுக்குக் கூடுகிற ஜனங்களுக்கு சுவிசே ஷம் பிரசங்கிக்கவே போகிறார்கள்.

இயேசுவும், பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் ஜெப ஆலயத்திற்குப் போனபோது ஓய்வு நாளை ஆசரிக்க அல்ல, கூடி வந்த யூதர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே.

7. ஏழாம் நாள் ஓய்வு நாள், மாறிப் போகவில்லை. அது நித்திய உடன்படிக்கை என்று யாத்.31:6யைக் கொண்டு சொல்லுவார்கள்.

ஓய்வு நாளை மட்டுமல்ல; பழைய ஏற்பாட்டு அநேக நியமங்களை நித்திய உடன்படிக்கை என்றே சொல்லப்பட் டிருக்கிறது. விருத்தசேதனம் (*ஆதி.17:7,13*), ஆரோனின் ஆசாரிய ஊழியம் (*யாத்.40:15*), போஜன பலி (*எசே.46:14*), தீட்டுக் கழிக்கும் ஜலம் (*எண்.19,21,22*) இவைகள் எல்லாம் நித்திய உடன்படிக்கை என்றே சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கிறிஸ்தவன் இவைகளை எல்லாம் ஆசரிக்க வேண்டுமா?

8. சனியைக் கைக்கொண்டு ஞாயிற்றுக்கிழமையைத் தள்ள லாமா?

அப்படிச் செய்வது உமியை சாப்பிட்டு அரிசியைத் தள்ளுவதும், தோலைத் தின்று பழத்தை தூரே எறிவதும் எவ்வளவு மதியீனமோ அப்படிப்பட்ட மதியீனமாகும். புதிய ஏற்பாட்டில் நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள் (*லூக்.24:53*). அவர் கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதின மும் தரித்திருந்து வீடுகள்தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சி யோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண் ணினார்கள் (*அப்.2:46*) புதிய ஏற்பாட்டில் சனி, ஞாயிறு மட்டுமல்ல; எல்லா நாளும் கர்த்தரை ஆராதிக்க கடமைப்

பட்டுள்ளோம். ஏனென்றால் புதிய ஏற்பாட்டில் எந்த நாளும் ஓய்வு நாளல்ல. ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளாகவே ஆராதிக்கிறோம்.

9. ஞாயிற்றுக்கிழமை ஆராதனை செய்ய வேத ஆதாரம் உண்டா?

ஆம். இயேசு உயிர்த்தெழுந்து வாரத்தின் முதல் நாளில், அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார் என்கிற செய்தி தூதர்களால் அறிவிக்கப்பட்டது வாரத்தின் முதல் நாளில் *(லூக்.24:6)*.

தமது சீஷர்களுக்கு தரிசனம் அளித்ததும் வாரத்தின் முதல் நாளில் *(யோவா. 20:19)* ஆராதனையும் அப்பம் பிட்குதலும் இருந்தது - வாரத்தின் முதல் நாளில் *(அப்.20:7)*. காணிக்கை படைத்தலும் வாரத்தின் முதல் நாளில்தான் *(1 கொரி.16:2)*. ஆதி அப்போஸ்தலரும் சபையாரும் ஆராதனை நாளாக வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையையே நியமித்திருந்ததாக வேத ஆதாரமுண்டு. ஏழாம் நாள் சிருஷ்டிப்பின் பூரணத்தைக் காட்டுகிறது. வாரத்தின் முதல் நாள் மீட்பின் பூரணத்தைக் காட்டுகிறது. சிருஷ்டிப்பு அழிவிற்குரியது. மீட்பு அழியாதது. மீட்கப்பட்ட கிறிஸ்தவன் அழிவிற்குரிய நாளை அல்ல மீட்பின் நாளையே நினைவு கூற வேண்டும்.

10. நியாயப் பிரமாணமாகிய பத்துக் கட்டளையைப் பற்றி வேதம் என்ன சொல்லுகிறது?

நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட் பட்டிருக்கிறார்கள் *(கலா.3:10)*. நியாயப் பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது *(கலா.3:11)*. ஏழாம் நாளைக் கைக்கொள்ள விரும்புகிறவர்கள் தேவனுடைய கிருபையை இழந்து நஷ்டமடைவார்கள் என்பது நிச்சயம். ஆகையால் ஓய்வு நாட்களைக் குறித்து ஒருவரும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்

காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது (கொலோ.2:16,17).

பாஸ்டர் S. ஆதாம் துரை
அசம்பிளீஸ் ஆப் காட்
கோவில்பட்டி

☆ ☆ ☆

இனி என்னுடைய கருத்துக்களை எழுதுகிறேன்

வாரத்தின் கடைசி நாளாகிய சனிக்கிழமையை ஓய்வு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லுகிற ஏழாம் நாள்காரர்கள் ஓய்வு நாட்களின் பிரிவுகள் என்ன வென்று அறிவார்களா? அப்படி அறிந்திருந்தால் அதன்படி கடைப்பிடிக்கிறார்களா? வாரத்தின் ஏழாம் நாள் நாட்களின் ஓய்வு. பின்பு 7 x 7 = 49 நாட்கள் முடிந்து 50வது நாள் (பெந்தகொஸ்தே நாள்) வாரங்களின் ஓய்வு. பின்பு ஆறு ஆண்டுகள் முடிந்து ஏழாம் வருடம் (ஒரு வருடம் முழுவதும்) வருஷங்களின் ஓய்வு. பின்பு 7 x 7 = 49 ஆண்டுகள் முடிந்து 50வது ஆண்டு யூபிலி ஆண்டு ஓய்வு. இதன் பின்பு கடைசியாக ஆறாயிரம் ஆண்டுகள் முடிந்து ஏழாயிரம் ஆண்டு வந்தால் அது யூதக் கணக்கின்படி கடைசி ஆயிர வருட ஆட்சிக்காலம். ஓய்வுநாளை ஆசரிக்கும் யூதன் ஓய்வு நாட்களையும் வாரங்களின் ஓய்வையும், ஓய்வு ஆண்டையும் யூபிலி ஆண்டையும் அதின் நிபந்தனைகளையும் கண்டிப்பாக ஆசரிக்க வேண்டும். அப்படிச் சரியாக ஆசரிக்காதவன் கொலை செய்யப்பட வேண்டும். இப்போதுள்ள ஏழாம் நாள்காரர்கள் இவைகளைக் கைக்கொண்டு நடக்கிறார்களா?

மேலும் ஓய்வு நாளில் செய்ய வேண்டியவைகள், செய்யக் கூடாதவைகள் என்று இரண்டு வித பிரமாணங்கள் உண்டு. இதன்படி, ஓய்வுநாள்காரர்கள் செய்கிறார்களா?

ஓய்வுநாளில் செய்யக் கூடியவைகள்:

1. ஓய்வு நாளில் 12 அப்பங்களைப் பரிசுத்த மேசையில் இரண்டு அடுக்காக அடுக்கி வைக்க வேண்டும் (1 நாளாகமம் 9:34, லேவியராகமம் 24:5-8)

2. ஒவ்வொரு ஓய்வு நாளிலும் சர்வாங்க தகன பலி செலுத்த வேண்டும். (எண்ணாகமம் 28:10; 2 நாளாகமம் 8:13; 31:3).

3. ஓய்வு நாட்களில் விருத்தசேதனம் செய்து வந்தார்கள். (யோவான் 7:22,23)

4. ஒவ்வொரு ஓய்வு நாளிலும் மோசேயின் ஆகமங்கள் ஜெப ஆலயங்களில் வாசிக்கப்பட வேண்டும். (அப்போஸ்தலர் 13:27; 15:21).

ஓய்வு நாளில் செய்யக் கூடாதவைகள்:

1. விறகு பொறுக்கக் கூடாது. (எண்ணாகமம் 15:32-36)

2. அடுப்பில் நெருப்பு மூட்டக் கூடாது. (யாத்திராகமம் 35:3) (இந்நாட்களில் விறகுக்குப் பதிலான Gas அடுப்புகள், எண்ணெய் அடுப்புகள், மின்சார அடுப்புகள் பாவிக்கப்படுவதால் அவைகளை ஓய்வு நாளில் உபயோகிக் கூடாது. மேலும் அடுப்பில் நெருப்பு மூட்டாமல் அதற்கு முந்தின நாளிலேயே சமையல் யாவும் செய்து வைக்க வேண்டும். வீட்டில் ஓய்வு நாளில் சமையல் செய்யக் கூடாது என்பதினால் ஓட்டலில் சென்று புசிக்கவும் கூடாது.)

3. ஓய்வு நாளில் சொந்தப் பேச்சைப் பேசக் கூடாது (ஏசாயா 58:13).

4. எந்த வேலையும் செய்யக் கூடாது. (மீறி வேலை செய்தால் அப்படிப்பட்டவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் - யாத்திராகமம் 31:12,15,16)

5. விதைக்கவும் அறுக்கவும் கூடாது. *(யாத்திராகமம் 34:21)*

6. தங்கள் வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டு போகவோ, வெளியிலிருந்து உள்ளே கொண்டு வரவோ கூடாது. *(எரேமியா 17:20,23; நெகேமியா 1 13:19,20)*

7. ஓய்வு நாளில் குறிப்பிட்ட தூரத்திற்கு மேல் (சுமார் 1 கிலோ மீட்டர்) நடக்கவோ பிரயாணம் பண்ணவோ கூடாது *(அப்போஸ்தலர் 1:12)*.

இன்றைய ஏழாம் நாள்காரர்கள் மேற்கண்ட சட்ட திட்டங்களைக் கடைப்பிடித்து நடக்கிறார்களா?

அதுபோலவே, ஓய்வு ஆண்டில் செய்யக் கூடியது செய்யக் கூடாததும் யூபிலி ஓய்வு ஆண்டில் செய்யத்தக்கது செய்யத் தகாததுமாகிய காரியங்கள் யாத்திராகமம் 21, லேவியராகமம் 25 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ளன.

இஸ்ரவேலுக்கு மட்டும் ஓய்வு நாளைக் கட்டளையிடக் காரணம் என்னவென்று பார்த்தால் பாலஸ்தீன நாட்டில் இஸ்ரவேலர் ஒரே குலம், ஒரே ஜாதி, ஒரே வம்சம். அவர்களுக்கு ஒரே தேவன். ஒரே வேதம், ஒரே மதக் கட்டுப்பாடுடைய அரசாங்கம். எனவே, வாரத்தின் கடைசி நாளை ஓய்வு நாளாக ஆசரிக்க அவர்களுக்குப் போதுமான ஆதரவுகள் யாவும் கர்த்தரால் உண்டாக்கப்பட்டிருந்தன. ஜனங்களும் ராஜாக்களும் ஒரே மதக் கருத்துடையவர்களாயிருந்தனர்.

ஆனால், கிறிஸ்துவின் சுவிசேஷமோ புற ஜாதிகளுக்கும் இரட்சிப்பைக் கொடுத்து யாவையும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக்குகிறது. புறஜாதிகளிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களுள் **பௌத்தர், சமணர், ஜைனர், சீக்கியர், பார்சிகள், மலை ஜாதியினர், நாத்திகர், இந்துக்கள், இஸ்லாமியர், கிரேக்கர்** இன்னும் இதைப்போன்ற எத்தனையோ மதக்காரர்

கள் உண்டு. இவர்கள் யாவரும் பல மதங்கள், பல தெய்வங்கள் ஆகியவைகளைப் பின்பற்றுகிறவர்களின் மத்தியில் வாழ்கிறார்கள். இந்த நிலையில் இந்தியாவின் இன்றைய ஏழாம் நாள் ஓய்வுக்காரர்கள் சனிக்கிழமை வேலைக்குப் போகாமல் இருக்கிறார்களா? சொந்தப் பேச்சைப் பேசாமலிருக்கிறார்களா? சமைக்காமலிருக்கிறார்களா, அன்றைக்குப் பார்த்து வீடு தீப்பிடித்து எரிந்தால் அணைக்காமலிருப்பார்களா?

இயேசுக் கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலரும் ஏழாம் நாளைக் குறித்துப் போதிக்கவுமில்லை, எதிர்க்கவுமில்லை. ஏனெனில் அது கிறிஸ்துவுக்குரியதல்ல. ஆதிக் கிறிஸ்தவ சபை இந்த நாளை ஆசரித்ததாகப் புதிய ஏற்பாட்டில் ஒரு வசனமும் இல்லை.

புதிய ஏற்பாடு கொடுக்கும் சில விளக்கங்களை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. நியாயப் பிரமாணங்கள், கற்பனைகள், ஓய்வு நாள் ஆசரிப்பு போன்றவைகளைக் கைக் கொள்ளுகிறவர்கள் இவைகளைக் கருத்தாய் ஆராய்ந்து பாருங்கள். புதிய ஏற்பாடு சொல்லுகிறது.

1. அது நமது முற்பிதாக்களாலும் நம்மாலும் சுமக்க முடியாத நுகம் *(அப்.15:5-10)*.

2. நியாயப் பிரமாணம் மனிதனுக்கு மரணத்தைக் கொண்டு வந்தது *(ரோமர் 7:9,10)*.

3. நியாயப் பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட் பட்டிருக்கிறார்கள் *(கலா.3:9,10)*.

4. நியாயப் பிரமாணத்திலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. *(கலா 2:15)*

5. நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் *(கலா.5:4)*.

6. நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப் படுகிறதில்லையே. (கலா.2:16:, ரோமர் 3:20).

7. விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோமர் 10:3,4).

8. ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்திற்குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதின நிலைமையிலே நிலை கொண்டிருங்கள். (கலா.5:1).

இன்னும் ரோமர் 13:8-10; 9:30-32; 10:3,4; கலா.3:13; உபா.21:23, கலா.5:18; ரோமர் 1:9,14; கலா.2:4; அப்.15:24; கலா.3:1-7; ம:23-25; கொலோ.2:8 போன்ற வசனங்களையும் ஆராய்ந்து பாருங்கள்.

நியாயப் பிரமாண உபதேசம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல் அக்கிரமக்காரர்களுக்கும், அடங்காதவர்களுக்கும் ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்ற எந்த செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது. (1 தீமோ 1:7-11).

ஆகையால் நியாயப் பிரமாணமும் அதின் சட்ட திட்டங்களில் ஒன்றாகிய ஓய்வு நாள் பிரமாணமும் (யாத்.20:8-11; உபா.5:15; யாத்.31:12-18; எசே.20:12,13) புதிய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான்களாகிய கிறிஸ்தவர்களுக்குரிய சட்டமல்ல என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளதை கவனிக்க வேண்டும்.

மேலும், இதோ நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன் என்பதைக் கர்த்தர் எரேமியா எசேக்கியேல் முதலிய தீர்க்கதரிசிகளின் வாயிலாக அறிவித்ததையும்

கவனிக்க வேண்டும். (*எரே.31:31-34; எசே.11:19-20; 36:26,27*) முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால் இரண்டாம் உடன்படிக்கைக்கு அவசியம் இல்லை. புது உடன்படிக்கை என்று சொல்வதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்.

முதலாம் உடன்படிக்கையானது சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட சடங்குகள். இயேசு கிறிஸ்துவோ ஒரே தரம் தம்மைத் தாமே பலி செலுத்தி தமது இரத்தத்தினால் புது உடன்படிக்கையை ஏற்படுத்தி, தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர் ஆகிப் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். இவைகளைக் குறித்து எபிரேயர் 8,9 அதிகாரங்களில் அடங்கியிருக்கிற வசனங்களை வாசித்துப் பாருங்கள். எபி.*8:7-13; 9:1-8; 9:9-15.*

ஏழாம் நாளைக் குறித்து இயேசு எங்கேயும் யாருக்கும் உபதேசம் செய்யவில்லை. காரணம் அது கிறிஸ்தவர்களுக்குரிய உபதேசம் அல்ல. யூதனுக்குரியது. யூத மதம் வேறு, கிறிஸ்துவம் வேறு. யூத மதம் சாதிக்க இயலாததை கிறிஸ்து சிலுவையில் சாதித்து என்னைப் பின்பற்றுங்கள் என்றார். நித்ய ஜீவனைப் பெறும்படிக்குத் தன்னிடம் ஓடி வந்தவனிடம் கற்பனைகளைக் கைக் கொள் என்றார். அவனோ எவைகளை என்று கேட்டபோது, கொலை செய்யாதிருப்பாயாக, விபச்சாரம் செய்யாதிருப்பாயாக, பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக, தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக, உன்னிடத்தில் அன்பு கூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பவைகளைச் சொன்னாரே தவிர மறந்தாகிலும் ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக என்று சொல்லவில்லை. மத்தேயு *19:16-24;* மாற்கு. *10:17-27;* லூக்கா *18:18-27.*

ஆனால், ஓய்வு நாளை மீறினதற்காக இயேசு யூத மதஸ்தரால் குற்றம் சாற்றப்பட்டிருக்கிறார்.

1. சீஷர்கள் ஓய்வு நாளில் பயிர் வழியே போகையில் கதிர்களைக் கொய்து தின்றபோது (மத்தேயு 12:1-8).

2. சூம்பின கையுடையவனைக் குணமாக்கியதற்காக (மத்.12:9-14; மாற்கு.3:3:1-6; லூக்கா.6:6-14).

3. 18 ஆண்டுகள் கூனியாயிருந்த ஸ்திரியை ஓய்வு நாளன்று சுகமாக்கியதற்காக (லூக்கா. 13:10-17).

4. ஓய்வு நாளில் நீர்க்கோவை வியாதியுள்ளவளைச் சுக மாக்கியதற்காக (லூக்கா.14:1-6).

5. 38 வருடம் வியாதியாயிருந்த மனுஷனை சுகமாக்கிய தற்காக (யோவான். 5:5-18).

6. பிறவிக் குருடன் கண்களை சுகமாக்கியதற்காக (யோவான் 9:1-16).

இக்குற்றச்சாட்டுகளை இயேசு ஜெயித்தார் என்பது மிக வும் விசேஷம். ஏனெனில் இயேசு ஓய்வு நாளுக்கும் ஆண்ட வர். இயேசுக் கிறிஸ்துவன் சீடர்களும் ஓய்வு நாள் சட்டத் திற்குக் கீழ்பட்டவர்களல்ல என்பது இதினால் விளங்கும்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் ஊற் றப்பட்ட போது பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு இருத யம் குத்தப்பட்டவர்கள் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபொழுது, பேதுரு: மனந்திரும்புதல், ஞானஸ்நா னம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், மாறுபாடுள்ள சந்த தியை விட்டுப் பிரிந்து வாழ்தல், அப்படிப்பட்டவர்களுடன் அன்னியோன்ய ஐக்கியம், அப்பம் பிடுதல், ஜெபம் பண்ணு தல் ஆகிய காரியங்களை உபதேசித்தாரேயன்றி ஓய்வு நாளைக் குறித்து எவ்வித உபதேசமும் கொடுக்கவில்லை.

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் 10 கற்ப னைகளிலுள்ள ஒன்பது கற்பனைகளைக் குறித்தும் அதைக் கைக் கொள்ளாமல் மீறி நடக்கிறவன் எப்படி பாவஞ் செய்தவனாகிறான் என்றும் அப்போஸ்தலர்கள் எழுதின 21

நிருபங்களிலும் காணப்படுகின்றன. ஆனால், ஓய்வு ளை மீறுகிறவனைக் குறித்தோ அல்லது ஓய்வு நாளைக் குறித்தோ ஒரு அப்போஸ்தலராகிலும் எழுதவில்லை.

கற்பனை	பொருள் (வசனம்)	புதிய ஏற்பாட்டில் வசனம்
1.	விக்கிர ஆராதனை செய்யாதே யாத் 20:1-3	1 கொரி 6:9 1 யோவான் 5:21
2.	கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக யாத்.20:7	யூதா 8 ரோமர் 2:24
3.	ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. யாத்.20:8	
4.	தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக. யாத்.20:12	எபேசியர் 6:1-3 கொலோ. 3:20
5.	களவு செய்யாதிருப்பாயாக	எபேசியர் 4:28
6.	கொலை செய்யாதிருப்பாயாக யாத்.20:13	யாக்கோபு 2:11
7.	விபசாரம் செய்யாதிருப்பாயாக யாத்.20:14	1 கொரி. 6:9 யாக்கோபு 2:11
8.	பிறனுக்கு விரோதமாய் பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக. யாத்.20:16	1 பேதுரு 3:10

9.	பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக யாத்.20:16	1 தீமோ. 6:9,10
10.	பிறனுடைய மனைவியையும் அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக. யாத்.20:17	1 கொரி. 5:1

மேற்கண்ட அட்டவணையில் மூன்றாவது கற்பனைக்கு நேராக ஒரு வசனமும் புதிய ஏற்பாட்டில் சுட்டிக் காட்டப்படவில்லை. யாராவது புதிய ஏற்பாட்டில் கண்டுபிடித்து எழுதினால் ஏற்றுக் கொள்கிறேன். ரோமர் 14ம் அதிகாரத்தில் 5,7 ஆகிய வசனங்களில் நாட்களைக் குறித்து எழுதிய பவுல் ஓய்வு நாளைக் குறித்து எதுவும் எழுதவில்லை. ஏனெனில் ஓய்வு நாள் ஆசரிப்பு கிறிஸ்தவர்களின் பிரமாணம் அல்ல.

பழைய ஏற்பாட்டில் யூதர்களுக்காக நியமிக்கப்பட்ட விருத்த சேதனத்தைப் பற்றி, பண்டிகைகளைப் பற்றி, பலிகளைப் பற்றி, கூடாரத்தைப் பற்றி, கூடார ஊழியத்தைப் பற்றி, ஆரோனைப் பற்றி, மெல்கிசேதேக்கைப் பற்றி, திரைச் சீலை, குத்துவிளக்கு, சமூகத்து அப்பங்கள், எண்ணெய் வார்த்தல் இன்னும் பல காரியங்களைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் விளக்கம் கொடுத்த அப்போஸ்தலர்கள் ஓய்வு நாளைக் குறித்து விளக்கம் கொடுக்க மறந்து விட்டார்களா? இல்லை! இயேசுக் கிறிஸ்து ஓய்வு நாளைப் பற்றி எதுவும் சொல்லாததினாலே அவருடைய சீடர்களும் அதைக் குறித்துப் போதிக்கவில்லை.

ஏழாம் நாள்காரர்கள், நாற்பது நாள் வேதபாடம் நடத்துகிறோம், நாற்பது நாட்களும் வருகிறவர்களுக்கு பைபிள் கொடுக்கிறோம் என்பார்கள். எது எதற்கோ எவ்வளவோ

செலவு பண்ணுகிற கிறிஸ்தவர்களும் ஓசி பைபிளுக்கு ஆசைப்பட்டு அங்கே போவார்கள். அவர்கள் தீர்க்கதரிசன நிறைவேறுதல்களிலிருந்து ஆரம்பிப்பார்கள். அவையெல்லாம் அப்படியே நிறைவேறியிருப்பதினால் கேட்கிறவர்களும் அட! எத்தனை உண்மை என்று வாய் பிளந்து அதிசயிப்பார்கள். இவைகளுக்கெல்லாம் ''ஆமாம்'' ''ஆமாம்'' என்று கேட்கிறவர்கள் தலையாட்டி கொண்டிருக்கும் நேரம் பார்த்து வாரத்தின் முதல் நாள் ஞாயிறு, அப்படியானால் கடைசி நாள் எது என்பார்கள். நமது கிறிஸ்தவர்களும் சனி என்பார்கள். அத்துடன் அது அவர்களைப் பிடித்துக் கொள்ளும். பின்பு ஏதோ புதிதாகப் பெரிய சத்தியத்தைத் தெரிந்து கொண்டவர்கள்போல் சனிக்கிழமை தான் ஓய்வு நாள் என்று சாதிப்பார்கள். யார் இல்லையென்றது? யூதர்களுக்கு சனிக்கிழமைதான் வாரத்தின் கடைசி நாள். கிறிஸ்தவர்கள் யூதர்கள் அல்லவே! யூதராயினும் கிரேக்கராயினும், புறஜாதியாராயினும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாவார்கள்.

இவர்களின் தந்திரத்தினால் பிடிக்கப்படுகிறவர்களுக்கு மருத்துவ உதவி, கடன் உதவி, வெளிநாட்டில் படிக்க உதவி போன்ற உதவிகளை வாக்குப் பண்ணுவதினாலும் அனேகர் இதுவும் கிறிஸ்தவ சபைதானே என்று தங்களைச் சமாதானம் செய்து கொண்டு இவர்களின் கண்ணிகளிலே விழுகிறார்கள்.

மேலும், புதிய ஏற்பாட்டில் அனேக இடங்களில் பாவப் பட்டியல்கள் காணப்படுகின்றன. ஆனால், ஒரு இடத்திலாகிலும் ஓய்வு நாளை மீறிய பாவம் சுட்டிக் காட்டப்படவில்லை.

☆ மாற்கு 7:20-23ல் மனித இருதயத்தைத் தீட்டுப்படுத்தும் 13 பாவங்களில் ஓய்வு நாளை மீறிய பாவம் இல்லை.

☆ ரோமர் 1:29-32 வரை சொல்லப்பட்டுள்ள மரணத்திற்குப் பாத்திரமுள்ளவர்களில் (23 பாவங்கள்) ஓய்வு நாளை மீறியவர்கள் ஒருவரும் இல்லை.

☆ கலாத்தியர் 5:19-21 வரையிலுள்ள 17 பாவங்களில் ஓய்வு நாளை மீறிய பாவம் காணப்படவில்லை.

☆ எபேசியர் 5:3-7 வரையிலுள்ள தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கத் தகுதியற்ற பாவிகளில் ஓய்வு நாளை மீறிய பாவி எவருமில்லை.

☆ 2 தீமோத்தேயு 3:1-5 வரையிலுள்ள கடைசி காலக் கொடிய பாவங்களிலும் ஓய்வு நாளை மீறிய பாவம் இல்லை.

☆ வெளிப்படுத்தல் 21:8 சொல்லப்பட்ட எட்டுப் பாவங்களில் ஓய்வு நாளை மீறிய பாவம் சொல்லப்படவில்லை.

☆ வெளிப்படுத்தல் 22:15-ல் தேவராஜ்ஜியத்திற்குப் புறம்பே இருப்பவர்கள் என்று சொல்லப்பட்ட ஆறு பேர்களில் ஓய்வு நாளை ஆசரிக்காத பாவி யாருமில்லை.

மேலே சொல்லப்பட்ட பாவப் பட்டியல்களில் பத்துக் கற்பனைகளிலுள்ள (ஓய்வு நாள் ஆசரிப்பு தவிர) ஒன்பது கற்பனைகளைக் குறித்து வேதவசனம் உண்டு. இதிலிருந்து கிறிஸ்தவர்களுக்கு ஓய்வு நாள் ஆசரிப்பு என்ற கற்பனை கட்டளையிடப்படவில்லை, போதிக்கப்படவில்லை என்பது தெளிவு. காரியம் இப்படியிருக்க, இருக்கிற எல்லாவற்றையும் விட்டுவிட்டு இல்லாத ஒன்றைப் பிடித்துக் கொண்டு, 'ஆஹா கண்டேன் சத்தியம், கொண்டேன் வைராக்கியம்' என்பது போல உபதேசிக்கிறவர்களிடம் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் ஏமாந்து போகக் கூடாது.

ஏழாம் நாள் ஓய்வு நாளாகக் கட்டளையிடப்பட்டது இஸ்ரவேலருக்கு. அவர்கள் எகிப்தில் அடிமையாக இருந்து மீட்கப்பட்டபடியினால் கர்த்தர் ஏழாம் நாளை ஓய்வு நாளாக்கினார் (உபாகமம் 5:14,15; யாத். 20:9,10) நாம் எகிப்தில் அடிமைகளாக இருக்கவில்லை. பாவத்தில் அடிமைகளாக இருந்தபோது இயேசுவாகிய பஸ்கா ஆட்டுக்குட்டியினால் மீட்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியா

யிருக்கிறோம். பழையவைகள் ஒழிந்தன. எல்லாம் புதியதா யின. ஜீவனுள்ள ஆவியின் பிரமாணத்தைக் கைக்கொண்டு பாவம் மரணம் என்ற பிரமாணத்தை விட்டு விலகி ஜீவிப் போமாக.

இனி, கற்பனையின் பொருள் பற்றி இயேசுக் கிறிஸ்து வும் அவருடைய அப்போஸ்தலரும் சொன்ன கருத்து என்ன என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

நியாயப் பிரமாணத்திலே எந்த கற்பனை பிராதனமா னது? (மத்தேயு 22:36)

இயேசுக் கிறிஸ்துவின் பதில்

மத்தேயு 22:35-40
மாற்கு 12:28-34
யோவான் 13:34,35, 15:9,10; 12:14.

கற்பனையின் பொருள் - அன்பு

பவுல் சொன்னது:

1 தீமோ 1:5, 6-11
ரோமர் 13:10
1 கொரி 13:13

பேதுரு சொன்னது:

1 பேதுரு 4:8; 2:17; 1:22

யோவான் சொன்னது:

1 யோவான் 3:11, 4:8, 16

யாக்கோபு சொன்னது:

யாக்கோபு 2:8, 1:12; 2:5

யூதா சொன்னது:

யூதா 20:21

மேற்கண்ட வசனங்கள் மூலமாக அன்பு ஒன்றே பத்துக் கற்பனையின் மொத்தப் பொருள் என்றும், தேவ அன்பு நமது இருதயங்களில் ஊற்றப்பட்டிருப்பதினால் (*ரோமர் 5:5*) கற்பனையின் பொருள் நம்மில் நிறைவேறுகிறது என்றும், நியாயப் பிரமாண சடங்காச்சாரங்கள் ஒன்றும் தேவையில்லை என்றும், கண்டு கொள்ள வேண்டும். அன்பு இல்லாதவன் தேவனை அறியான். அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்.

பத்துக் கற்பனையும் - புதிய கற்பனையும்

''நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக் கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல நீங்களும் என் கற்பனைகளைக் கை கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைப்பீர்கள்''
(யோவான் 15:10)

மேற்கண்ட வசனம் இயேசுக் கிறிஸ்துவினால் போதிக்கப்பட்டது. இயேசு, பிதாவின் கற்பனைகளைக் கைக் கொண்டதுபோல, இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் இயேசுவின் கற்பனைகளைப் பின்பற்ற வேண்டும்.

பத்துக் கற்பனை	புதிய கற்பனை
1. உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே! என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். (யாத்.20:2,3).	1. பாவ அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்து இயேசு நம்மை மீட்டபடியினால் அவரையும் அவரை நமக்காக அனுப்பிய பிதாவையும் ஆராதிக்கிறோம். (1 கொரி 8:5,6; கலா 1:6-12)
2. நீ யாதொரு சொரூபத்தையாகிலும் விக்கிரகத்தையாகிலும் உண்டாக்கவோ அவைகளை நமஸ்கரிக்கவோ, சேவிக்கவோ வேண்டாம் (யாத்.20:4,5).	2. 1 கொரி 8:13; அப்.13:28; கொலோ 3:5,6; எபே.5:5,6; 1 யோ.5:21
3. உன் தேவனாகிய கர்த்தரின் நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக (யாத்.20:7).	3. வீணிலே என்பது பொய் ஆணையைக் குறிக்கும் சொல் ஆகும். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்ல வேண்டும் என்பது இயேசுவின் கற்பனை (மத்தேயு 5:37; எபே.4:25; தீத்து 3:9).
4. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக (யாத்.20:8-11).	4. எபி.12:28 இயேசு ஓய்வு நாளை நினைக்கச் சொல்லவில்லை. பிட்கப்பட்ட அவருடைய சரீரத்தையும் சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தையும் அவருடைய மரணத்தையும் நினைவுகூரச் சொன்னார் (1 கொரி 11:24,25).

பத்துக் கற்பனை	புதிய கற்பனை
5. உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக (யாத். 20:12)	5. எபே.6:1-3; கொலோ 3:20; மத்.15:4,5; மாற்.7:9-11.
6. கொலை செய்யாதிருப்பாயாக (யாத்.20:13)	6. மத்.5:21-24; 1 யோ.3:15; யாக்.2:8; 1 பேதுரு.2:17.
7. விபசாரம் செய்யாதிருப்பாயாக (யாத்.20:14)	7. எபே.4:28; தீத்து 2:10; ரோமர் 13:9; 2:21; 1 கொரி 6:10.
8. களவு செய்யாதிருப்பாயாக (யாத்.20:15)	8. எபே.4:28; தீத்து 2:10; ரோமர் 13:9; 2:21; 1 கொரி 6:10.
9. பிறனுக்கு விரோதமாய் பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக (யாத்.20:16)	9. எபே 4:25
10. பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக (யாத்.20:17)	10. ரோமர் 15:2; 1 தீமோ 6:13; எபி 13:5

சாதாரணமாக ஏழாம் நாள் ஓய்வுக்காரர்கள் கீழ்கண்ட கேள்விகளைக் கேட்கிறார்கள். அதற்குரிய பதில்களும் வேதத்தில் உண்டு.

கேள்வி 1 இயேசு ஓய்வு நாளை ஆசரித்தார். அவர் ஓய்வு நாளை மாற்றவில்லை. ஆகையால் நாமும் அப்படிச் செய்ய வேண்டுமல்லவா?

பதில்: (a) இயேசு 8-ம் நாளில் விருத்தசேதனம் செய்யப் பட்டார். நாம் அப்படிச் செய்கிறோமா?

(b) இயேசு பஸ்கா ஆசரித்தார். நாமும் அப்படி ஆசரிக்கிறோமா?

(c) இயேசுக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பே கிறிஸ்தவம் உண்டாயிற்று. இயேசு யூத வழக்கத்தின்படி ஓய்வு நாளை ஆசரித் தார். கிறிஸ்தவம் யூதமல்ல.

கேள்வி 2 அப்போஸ்தலர்கள் ஓய்வு நாட்களில் ஜெப ஆலயங்களுக்குப் போனார்களே! நாமும் போக வேண்டுமல்லவா?

பதில்: அப்போஸ்தலர்கள் அங்கு போனது தேவனை ஆராதிக்க அல்ல. அங்கு கூடி வந்த யூதர்க ளுக்குச் சுவிசேஷம் சொல்ல.

கேள்வி 3 நீங்கள் ஓடிப் போவது மாரிகாலத்திலாவது ஓய்வு நாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள் என்று இயேசு சொன்னது ஏன்?

பதில்: ஓடிப் போவதற்கு மாரிக்காலம் எப்படி தடையாய் இருக்குமோ அப்படியே ஓய்வு நாளும் இருக்கும்.

ஓய்வு நாளுக்கு முன்பே ஒலி முக வாசல் கதவு பூட்டப்படும் ஓய்வு நாளில் ஓடினாலும் ஒரு கிலோ மீட்டர் தூரம் மட்டுமே ஓட முடியும். எனவே, அப்படிச் சொன்னார்.

கேள்வி 4 *யாத்திராகமம் 31:16-படி இது நித்திய கட்டளையாயிற்றே!*

பதில்: *ஓய்வு நாளுடன் இன்னும் அனேக காரியங்களை நித்திய கட்டளை என்று பழைய கட்டளை சொல்லுகிறது.*
பலவித சடங்குகளும் சுக்திகரிப்புகளும் (எண் 19:21,22)
போஜனபலி (எ சே 46 14)
அப்பமும் பலிகளும் (லேவி 24:8, 9)
தாவீது ராஜாவின் அரசாட்சி (II சாமு 23:5, ஏசாயா 55:3)
விருத்த சேதனம் (ஆதி 17.3)
ஆரோனின் ஆசாரியத்துவம் (யாத் 40:13-15)
பினகாசின் ஆசாரிய ஊழியம் (எண் 25:3)

மேலே சொல்லப்பட்ட யாவும் சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும் செய்யப்பட்டு வந்த சடங்குகள் (எபி *9:10*) இவை நிழல் போன்றவைகள், இயேசுக் கிறிஸ்து நிஜம். நிஜம் வந்தவுடன் நிழல் ஒழிந்து போகிறது. கொலோ செயர் *2:16 17*ன்படி சிந்தியுங்கள். எபி *8:5; 9:23; 10:1*

கேள்வி 5 *ஏசாயா 66:22-23 வசனங்களின்படி ஓய்வு நாளில் தானே மோட்சத்தில் தொழுது கொள்ளப் போகிறோம்?*

பதில்: *இயேசுக் கிறிஸ்து என்றைக்கு ''முடிந்தது'' என்று சொல்லிச் சிலுவையில் வெற்றி சிறந்தாரோ அன்றைக்கே நியாயப் பிரமாண காலம் முடிவடைந்து கிருபையின் காலம் ஆரம்பமாகி விட்டது. வாரத்தின் முதல் நாளில் இயேசு உயிர்த்தெழுந்தபடியினால்*

அந்த உயிர்த்தெழுந்த ஆண்டவரை அந்நாளிலே தொழுது கொள்வதும் வழக்கமாயிற்று. இயேசுக் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் பாவ மன்னிப்புப் பெற்று மீட்கப் பட்ட சபைக்கு பழைய நியாயப் பிரமாணங்களும் சட்ட திட்டங்களும் தேவையற்றது. அது முடிந்து போன காரியம். மோசேயின் கால முதல் இயேசு மரணம் அடையும் வரையுள்ள சபைக்கு ஏழாம் நாள் ஓய்வு நாள். இயேசுவின் உயிர்த்தெழுதல் முதல் நித்திய யுகங்கள் ஆரம்பமாகும்வரை வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிறு ஆராதனை நாள். அதன் பின்பு தேவ ஒழுக்கின்படி நியமிக்கப்பட்ட ஓய்வு நாளில் ஜனங்கள் நித்திய யுகங்களில் ஆராதிப்பார்கள்.

(ஏசாயா 65:17; வெளி 21:1-7; 1 பேதுரு 3:13,14).

இனி எட்டாவது ஓய்வு நாள் பற்றியும் தெரிந்து கொள்வது நல்லது.

'ஏழு நாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக் கடவீர்கள். எட்டாம் நாள் உங்களுக்குச் சபை கூடும் பரிசுத்த நாள். அதிலே சாதாரணமாக யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். முதலாம் நாளிலும் ஓய்வு, எட்டாம் நாளிலும் ஓய்வு'' (லேவி 25:36, 39).

இந்த வசனத்தினுடைய இரகசியம் என்ன?

ஏழாம் நாள் ஓய்வு நாளானால் எட்டாம் நாளை ஏன் கர்த்தர் ஓய்வு நாள் என்று சொல்ல வேண்டும் என்று யாரும் கேட்கவில்லை. வாரத்தின் கடைசி நாளாகிய ஓய்வு நாளை ஒரு குறிப்பிட்ட காலம் வரை அனுமதித்துப் பின்பு வாரத்தின் முதல் நாளாகிய எட்டாம் நாளை ஓய்வு நாள் ஆக்கத் தேவன் கொண்டிருந்த சித்தமே

அது. இரண்டாவதை நிலை நிறுத்த முதலாவதை நீக்கிப் போடுகிறார். (எபி 10:9).

ஏழாம் நாள்காரர்கள் பதில் சொல்லுங்கள்:

1. ஒரு நாளை மட்டும் உயர்த்தக் காரணம் என்ன? கிறிஸ்துவின் உபதேச சட்டத்திற்கு உங்களால் கீழ்படியாமல் போனதற்கு காரணம் என்ன? கிறிஸ்துவுக்குக் கீழ்படியாமல் எப்படி நீங்கள் கிறிஸ்தவர்கள் ஆவீர்கள்?

2. ஏழாம் நாள் சனிக்கிழமை தான் என்று நிரூபிக்க என்ன ஆதாரம் இருக்கிறது? கர்த்தர் 4-வது நாளில் சூரியனை உண்டாக்கினார். ஆகவே, 4-வது நாளில் தான் ஞாயிற்றுக்கிழமை வருகிறது. அப்படியானால் 3-வது நாள் தானே ஓய்வு நாளாக இருக்க வேண்டும்? சரி, யோசுவா சூரியனை ஏறக்குறைய ஒரு நாள் நிறுத்தி வைத்துவிட்டபடியினால் எது ஞாயிற்றுக்கிழமை எது சனிக்கிழமை என்று குழப்பம் உண்டாகிறதே. எப்படி இதை விடுவிப்பீர்கள்?

3. லேவி 23:6-8, 15-22ன்படி இரண்டு ஓய்வு நாட்கள் ஆசரிக்கப்பட்டிருக்கின்றன. ஏழு ஆண்டுகளில் ஒரு ஆண்டு ஓய்வு ஆண்டாக அனுசரிக்கப்பட்டு வந்திருக்கிறது (லேவி 25:20) 70 ஆண்டுகள் தேசம் ஓய்ந்திருந்ததாக 2 நாளாகமம் 36:21ல் காணப்படுகிறது. பண்டிகையின் முதல் நாளையும் ஏழாம் நாளையும் ஓய்வு நாளாக ஆசரித்தனர். அப்படியானால் 20-ம் நூற்றாண்டு ஓய்வு நாள்காரர்கள் எந்த ஓய்வு நாள் பற்றிக் கூறுகிறார்கள்.

4. எபிரெயர் 4:9-10ன்படி தேவனுடைய பிள்ளைகளுக்கு இளைப்பாறும் காலம் (Sabboth) இனி வருகிறதாயிருக்கிறது என்பது உண்மையானால் இதுவரையிலும் ஆசரித்து வருகின்ற ஏழாம் நாள் ஓய்வு போலிதானே?

5. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட இஸ்ரவேலர்களுக்கு வாரத்தின் கடைசி நாளாகிய

ஓய்வு நாள் நினைவு கூறும் நாள். இந்த நாளுக்கும் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் என்ன சம்பந்தம்?

6. ஓய்வு நாளை ஆசரித்து வந்த இஸ்ரவேலர்கள் ஒவ்வொரு ஓய்வு நாளிலும் சர்வாங்க தகனபலி செலுத்தினார்கள். பிள்ளைகளுக்கு விருத்த சேதனம் செய்தார்கள். இக்கால ஏழாம் நாள் ஓய்வுக்காரர்கள் அப்படிச் செய்யாமலிருப்பது ஏன்?

7. கொலோசெயர் *2:14:17*-ன் ஓய்வு நாளை அனுசரிக்காததினால் யாரும் நம்மைக் குற்றப்படுத்தக் கூடாது. ஏழாம் நாள்காரர்கள் மற்றவர்களைக் குற்றப்படுத்துவது எதற்காக?

8. ஆறு நாள் வேலை செய்து ஏழாம் நாள் ஓய்வெடுக்க ஆண்டவர் நம்மைப் போல மனிதரா? அவருக்குச் சோர்வு உண்டாகுமா? கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்தார் என்றால் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார் என்றே பொருள். இதற்கும் சனிக்கிழமைக்கும் என்ன சம்பந்தம்? ஞாயிற்றுக்கிழமையில் வேலை ஆரம்பித்தார் என்பதற்கும் என்ன ஆதாரம்?

9. இயேசு ஐந்தாம் நாள் மரித்து 6-ம் நாள் கல்லறையில் இருந்து ஏழாம் நாள் உயிர்த்தெழுந்தார். ஏழாம் நாள் ஓய்வு நாள்காரர்கள் எந்த இயேசுவை ஆராதிக்கிறார்கள்? உயிர்த்தெழுந்த இயேசுவையா? அல்லது கல்லறையில் இருந்த இயேசுவையா?

10. விருத்த சேதனத்திற்குப் பதில் ஞானஸ்நானத்தையும் பஸ்கா பண்டிகைக்குப் பதில் திருவிருந்தையும் ஓய்வு நாள் உபசரிப்புக்குப் பதில் உயிர்த்தெழுந்த நாளையும் இயேசு ஏற்படுத்திப் பழயவைகளை ஒழித்துத் தமக்குள் எல்லாவற்றையும் புதியதாக்கினார். ஏழாம் நாள் ஓய்வுக்காரர்கள் புதிய ஏற்பாட்டில் இருக்கிறார்களா? பழைய ஏற்பாட்டில் இருக்கிறார்களா? நியாயப் பிரமா

ணம் வேறு பத்து கற்பனைகள் வேறு என்று பிரிக்கக் கூடாது. எல்லாம் சேர்ந்து மோசேயின் நியாயப் பிரமாணம் என்றே அழைக்கப்பட்டது. இது பழைய உடன்படிக்கை. கிறிஸ்துவின் பிரமாணம் புதிய உடன்படிக்கை. எதைப் பின்பற்றுவீர்கள்?

11. ஓய்வு என்பது கிறிஸ்துவுக்குள் பெறப்போகும் நித்ய ஓய்வு அல்லது பரம இளைப்பாறுதல் ஆகும். அப்படியிருக்க சனிக்கிழமை ஓய்வு தருமா? (பரம இளைப்பாறுதல்) தருமா?

12. நல்ல காரியங்களைச் செய்ய விடாமல் தடை செய்த ஓய்வு நாள் கட்டுப்பாட்டை முறியடித்து, தான் ஒரு குறிப்பிட்ட நாளுக்கு அடிமையல்ல, அந்நாளின் மேல் அதிகாரம் உடையவர் என்பதை நிரூபித்து மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார் என்று விளங்கச் செய்து விட்டார். இதிலிருந்து நாம் ஒரு குறிப்பிட்ட நாளுக்கும் சடங்குகளுக்கும் பாரம் பரியங்களுக்கும் அடிமைகளல்ல என்று விளங்குகிறது இதை மறுக்க இயலுமா?

13. ஓசியா 2:11ல் அவளுடைய ஓய்வு நாட்களை ஒழியப் பண்ணுவேன் என்றும் ஏசாயா 1:13ல் நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும் ஓய்வு நாளையும் சபைக் கூட்டத்தையும் நான் இனிச் சகிக்க மாட்டேன் என்றும் தீர்க்கதரிசிகள் மூலமாகச் சொன்ன தேவன் இவைகள் எல்லாவற்றையும் கிறிஸ்து இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலமாக ஒழித்துக் கட்டி (கொலோ 2:14-17) புதிய பிரமாணத்தையும் புதிய உடன்படிக்கையையும் ஏற்படுத்தி விட்டார். அப்படியிருக்க பழைய புளித்த மாவாகிய ஓய்வு நாள் ஆசரிப்பு இப்போது தேவையா?

14. வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில்... (அப்.20:7) என்றும்

அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் (1 கொரி 16:2) என்றும் புதிய ஏற்பாட்டில் வசனங்கள் உண்டே தவிர, வேறு எங்கேயாவது புதிய ஏற்பாட்டின் ஆதித் திருச்சபையில் வாரத்தின் கடைசி நாளில் தேவனை ஆராதிக்க வேண்டும் என்று கட்டளை உணடா?

15. ஒருவேளை ஏழாம் நாள் ஓய்வுக்காரர்கள் தங்களை யூதர்களாகவும் பழைய ஏற்பாட்டுப் பக்தர்களாகவும் நினைத்துக் கொண்டு செயல்பட்டாலும் ஒருவன் ஒரு நாளை விசேஷித்துக் கொள்கிறான். வேறொருவன் எல்லா நாட்களையும் விசேஷிக்கிறார். அவனவன் தன் மனதில் முழு நிச்சயத்தையுடையவனாயிருக்கக் கடன். நாட்களை விசேஷித்துக் கொள்கிறவன் கர்த்தருக் கென்று விசேஷித்துக் கொள்கிறான். நாட்களை விசே ஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித் துக் கொள்ளாமல் இருக்கிறான். இப்படியிருக்க உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? (ரோமர் 14:5,6,10) என்று பவுல் அப்போஸ்தலர் சொல்லியிருக்கும்போது, ஏழாம் நாள் ஓய்வுக்காரர் களே! நீங்கள் ஏன் மற்றவர்களைக் குற்றம் தீர்த்து உங்களை மெச்சிக் கொள்கிறீர்கள்? வசனத்தின் கருத்தை ஆராய்ந்து பார்த்துக் கிருபையைப் பின்பற் றுங்கள்.

☆ வாரத்தின் முதல் நாளிலே இயேசு மரணத்தை வென்று வெற்றி சிறந்தார்.

☆ வாரத்தின் முதல் நாளிலே இயேசு தமது சீடர்களுக்கு (உயிர்த்தெழுந்தபின்) காட்சியளித்தார்.

☆ ஏழு ஓய்வு நாட்கள் முடிந்த பின்பு (49 நாட்கள்) எட்டாவது வாரத்தின் முதல் நாளிலே (பெந்தே கொஸ்தே நாளிலே) பரிசுத்த ஆவியானவர் அருளப்பட் டார்.

☆ வாரத்தின் முதல் நாளிலே அப்போஸ்தலர்களும் முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களும் தேவனை ஆராதித்தனர் *(அப். 20:7)*

☆ ஏழாம் நாள் எழுத்தின் படியான நாள். எழுத்து கொல்லும், வாரத்தின் முதல் நாள் ஆவியில் நிறைந்து ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தி ஆவியோடும் உண்மையோடும் கர்த்தரை மகிமைப்படுத்தி ஆசரிக்கும் நாள். ஆவியே உயிர்ப்பிக்கும் *(எபே.5:18-20)*, *(எபிரேயர் 10:25; 13:15)*, யோவான் *(4:24)*, (ரோமர் *12:1,2)*, *(பிலி.3:3)*

இவ்வளவு தெளிவான விளக்கங்கள் வேதத்தில் இருந்தும் இதைப் புரிந்து கொள்ளாமல் பழைய நுகத்தைச் சுமக்கிற ஏழாம் நாள்காரர்கள் சிந்திப்பார்களாக.

நாம் இனி குழந்தைகளாயிராமல் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற் கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல் அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளர்ந்து கனி கொடுப்போமாக.

உச்சி வெயில் நேரத்தில் தலையில் கனமான சுமையுடன் ஒருவர் ரோட்டில் சென்று கொண்டிருந்தாராம். காரில் போன இரக்க சிந்தையுள்ள ஒருவர் அவருடைய சுமையைக் குறைத்து அவருக்கு இளைப்பாறுதல் கொடுக்க எண்ணி காரில் ஏறிக் கொள்ளச் சொன்னாராம். மனுஷன் காரில் ஏறி உட்கார்ந்த பின்பும் தலைச் சுமையை இறக்கிக் கீழே வைக்காமல் தலையிலேயே வைத்துக் கொண்டிருந்தானாம். கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொண்டும் கிறிஸ்துவின் கிருபைக்குக் கீழ்பட்டு வராமல் இன்றும் பழைய பிரமாணங்களையும் கற்பனைகளையும் தலை மேல் வைத்துக் கொண்டு போகும் ஏழாம் நாள்காரர்களுக்கு இயேசுக் கிறிஸ்துவின் மூலம் இளைப்பாறுதல் கிடைக்க ஜெபிப்போம்.

சகோதரன் P. **தங்கமணி** அவர்கள் எழுதிய ஓய்வு நாள் ஆசரிப்பு என்ற நூலிலிருந்தும் பல பகுதிகளை எடுத்துக் கையாண்டிருக்கிறேன். அவருக்கு என் நன்றி. பாஸ்டர் **ஆதாம் துரை** அவர்களுக்கும் என் நன்றி.

முடிவாக வாரத்தின் கடைசி நாள் இன்றையக் கணக்குப்படி சனிக்கிழமையானால் இது யூதர்களின் ஆசரிப்பு நாள். கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுந்த வாரத்தின் முதல் நாளில் அதாவது ஞாயிற்றுக் கிழமையில் ஆராதிக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாள் இல்லை. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை ஆராதிக்கும் நாள் அவ்வளவே!

உங்கள் சிந்தனைக்கு:

பழைய ஏற்பாட்டுக் காலத்து ஊழியத்தைக் குறித்துப் பவுல் அப்போஸ்தலருடைய கருத்து:

அது மரணத்துக்கேதுவான ஊழியம்.
அது ஒழிந்துபோகிற மகிமையுடைய ஊழியம்.
அது ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம்.
அது முக்காடு போடப்பட்ட ஊழியம்.
(2 கொரிந்தியர் 3:7,8,9,14).

வேதாகமத் திருச்சபை

2. வேதாகமத் திருச்சபை

ஒரே கர்த்தர். ஒரே இயேசு. ஒரே வேதம், ஒரே ஆவியானவர் என்றிருக்கும்போது பலவிதக் கொள்கைகளுடன் பலவிதமான சபைகளும் அச்சபைகளின் உட்பிரிவுகளும் விசுவாசிகளுக்குக் குழப்பங்களை உண்டு பண்ணுகிறபடியால் சபையைக் குறித்துச் சில காரியங்களை எழுதுவது எனக்கு நலமாகத் தோன்றியது. நான் எழுதும் இப்பகுதியை வாசிப்பவர்கள் இவைகளை மற்றக் கிறிஸ்தவர்களும் வாசிக்க உதவுங்கள். சபையைக் குறித்து நல்ல அனுபவம் பெற்றோர் இக்கட்டுரையில் சேர்க்க வேண்டிய அல்லது தவிர்க்க வேண்டியவைகளை எனக்கு எழுதியுணர்த்தும்படியும் கேட்டுக் கொள்கிறேன். எழுதும்போது அது வேத சரித்திர ஆதாரத்துடன் இருப்பது எனக்குப் பெரிய உதவியாக இருக்கும்.

சபை என்பது சபா என்ற வடமொழிச் சொல்லின் தமிழாக்கமாகும். தமிழில் இதைக் கூட்டம் என்று சொல்லலாம். ஆங்கிலத்தில் (Church) என்று சொல்லுகின்றனர். அது எக்ளேசியா (Ekclasia) என்ற இரண்டு கிரேக்க வார்த்தைகளிலிருந்து எடுக்கப்பட்டதாகும். அதினுடைய சரியான தமிழாக்கம் 'தெரிந்து கொள்ளப்பட்ட கூட்டம்' என்பதாகும்.

சர்ச் அல்லது சபை என்பது ஒரு கட்டிடத்தைக் குறிக்கும் சொல் அல்ல. இறைவன் இருக்குமிடத்தைக் கோயில் அல்லது தேவாலயம் என்று சொல்லுகிறோம். 'கோ' என்பது இறைவனையும், 'இல்' என்பது இடத்தையும் குறிக்கும். அதுபோல தேவ ஆலயம் என்பது தேவன் ஆன்மாவில் வசிப்பதால் தேவாலயம் என்றும் சொல்லுகிறோம். என்றாலும், இறைவன் ஒரு கட்டிடத்திலேயோ, குறிப்பிட்ட இடத்திலேயோ வசிப்பவர் அல்ல.

'உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாமயிரார்' (அப்.7:48) என்றும், 'உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை' (அப்.17:24) என்றும், நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்கள்' (1 கொரி 3:16) என்றும் வேதாகமம் சொல்லுகிறபடியினால் மனித சரீரமே இறைவன் வசிக்குமிடம் என்பதையும், தான் வசிக்குமிடத்தை அவ்விறைவன் தனது கைகளினாலேயே கட்டினார் என்றும் காண்கிறோம். அதே சமயத்தில், பூர்வ நாட்களில் அதே இறைவன் மோசேயைக் கொண்டு தனக்கு ஆசரிப்புக் கூடாரத்தை உண்டு பண்ணச் சொல்லியதையும் தாவீதின் மகனாகிய சாலமோனைக் கொண்டு எருசலேமில் தனக்கு ஒரு ஆலயம் கட்டச் சொன்னதையும் மறந்துவிடக் கூடாது. ஆரம்பக் காலங்களில் மனிதனுடைய ஆன்மீக அறிவு முதிர்ச்சியடையாத நிலையில் அப்படியிருந்திருக்கலாம். ஆனால், தேவன் மனிதனாக உலகில் வந்த பொழுது மலையிலும் எருசலேமிலு மாத்திரமல்ல, எங்கும், பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வருகிது. தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார். (யோவான் 4:21,24) ஆன்மீக அறிவில் வளர்ச்சியடையாதவர்கள் மலைகளுக்கும் கட்டிடங்களுக்கும் மதிப்புத் தந்து இங்கே இறைவன் இருக்கிறார் என்று நம்பித் தொழுது கொள்வார்கள். அது அவர்களுடைய பக்தியைக் குறிக்கும். ஆனால், பக்தி முக்தி அல்ல. முக்தி பெறாதவர்கள் சித்தி பெறவும் இயலாது. முக்தி என்பது ஆன்ம இரட்சிப்பு. சித்தி என்பது ஆன்ம இரட்சிப்பினால் கிடைக்கும் இறுதி மீட்பு. கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டவர்கள் (எபே.2:8). அந்த இரட்சிப்பை இழந்து போகாதபடிக்குப் பயத்தோடும் நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசமெடுத்துக் கொண

டேயிருந்தால் (பிலி 2:12) மரணமோ அல்லது கர்த்தருடைய வருகையோ ஏற்படும்போது, அந்த இரட்சிப்பின் பலனாகிய 'சித்தி'யை பரலோகத்தில் அடைய இயலும் (1 பேதுரு 1:5).

சபையில் தேவன் இருக்கிறார் என்பதை நாம் அறிவோம். நமது சரீரமே அவர் இருக்கும் இடம். எனவே, நமது சரீரமும் தேவன் இருக்கின்ற தேவ சபையாகும். சரீரமான சபை என்று எபேசியர் 1:23ல் பவுல் குறிப்பிடுகிறார். ''நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்'' (1 கொ 12:27) என்றும் 'அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்' (ரோமர் 12:5) என்று வேதம் சொல்லுகிறபடி நமது சரீரமானது தேவனுடைய சபையாய் இருக்கிறது என்று விளங்கிக் கொள்ளலாம். எனவே, நாம் ஒவ்வொருவரும் சபை. கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகளாகக் கூடி வரும்போது ஒவ்வொரு குடும்பமும் சபை. இப்படிப் பல குடும்பங்கள் சேர்ந்து தேவனை ஆராதிக்கும்போது அதுவே சபை. இப்படிப் பல குடும்பங்கள் சேர்ந்து ஆராதிக்க ஒரு பொது இடம் தேவைப்பட்டதினால் பெரிய கட்டிடங்களைக் கட்டினார்கள். பின்பு தங்கள் வசதிக்குத் தக்கபடி அதை அழகுபடுத்தவும், மற்றக் கட்டிடங்களிலிருந்து வித்தியாசப் படுத்துவதற்காகக் கோபுரங்களையும், மக்களை அழைப்பதற்காக அதில் மணிக் கூண்டுகளையும் அமைத்தார்கள். இதுவே பிற்காலத்தில் சபையாக மாறிவிட்டது. எங்கே போகிறீர் என்று ஞாயிற்றுக் கிழமை காலையில் கேட்டால் சர்ச்சுக்குப் போகிறேன் என்பார்கள். அவர்கள் நினைவில் சர்ச் என்பது ஒரு கட்டிடத்தையே குறிக்கிறது.

சபை என்பது பலவிதங்களில் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. அது:

சரீரம்	எபேசியர் 1:23
கன்னிகை	2 கொரி 11:2

மந்தை	*1 பேதுரு 5:2*
ஆலயம்	*எபேசியர் 2:21*
வீடு	*1 தீமோ 3:15, எபி 3:6*
மணவாட்டி	*வெளி 19:7, 22:17*

ஒரே சரீரத்தில் பல அவயவங்கள் இருப்பது போல், ஒரே மந்தையில் பல திறப்பட்ட ஆடுகள் இருப்பது போல், ஒரே ஆலயத்தில் பல பொருட்கள் இருப்பது போல், ஒரே வீட்டில் பல அறைகள் இருப்பது போல் தேவனுடைய சபையானது பல விசுவாசிகளைக் கொண்ட ஒரே கூட்டமாகும். அச்சபையானது கன்னிகையைப் போன்ற கற்புடனும் மணவாளனுடன் இணைந்த மனைவியுமாகவும் இருக்க வேண்டும்.

சபையானது முழுக்க முழுக்க இயேசுவுக்குச் சொந்தமானது. ஏனெனில் அவர் தமது சுய இரத்தத்தினால் சபையைச் சம்பாதித்திருக்கிறார் *(அப்.20:28)*

மோசே தேவனுக்கென்று ஆசரிப்புக் கூடாரத்தையுண்டு பண்ணியபோது, கர்த்தர் மோசேயிடம், 'மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படிச் செய்ய எச்சரிக்கையாயிரு' *(யாத். 25:40)* என்று கட்டளையிட்டார். தேவனுடைய வாசஸ்தலம் கட்டப்படுகையில் அது முற்றிலும் கர்த்தருடைய யோசனையாகவேயிருந்தது. எகிப்தில் பார்வோனுக்கு மோசே கட்டிடம் கட்டிக் கொடுத்தக் கட்டிடக் கலைஞனாயிருந்த போதிலும் தேவனுடைய ஆசரிப்புக் கூடாரம் இவ்விதமாயிருந்தால், நன்றாயிருக்குமென்று ஒரு போதாகிலும் மோசே ஆலோசனை சொன்னதில்லை. அதுபோலவே, புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ஆவியானவரால் பெந்தேகோஸ்தேயின் கடைசி நாளில் ஏற்படுத்தப்பட்ட போது இச்சபைக்குக் கர்த்தர் உபதேசங்களைக் கட்டளையிட்டார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவாலயத்தில் தொழுது கொள்ளும் யூதக் கூட்டத்தார் இருந்தனர். ஆனால்,

புதிய ஏற்பாட்டுத் திருச்சபையானது யூதர்களைக் கொண்டும் புற ஜாதிகளைக் கொண்டும் இயேசுக் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்ட புதிய சபையாகக் காட்சியளிக்கிறது. இச்சபையானது தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், இராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறது. இச்சபையானது, அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டதாயிருக்கிறது. இதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர் மேல் ஒவ்வொரு விசுவாசியும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள்.

இயேசுக் கிறிஸ்து மாம்சத்திலிருந்த நாட்களில் சபையிருக்கவில்லை. ஆனால், சபையைக் குறித்த ஒரு நிழலைக் காட்டினார்.

ஒருமுறை இயேசு தமது சீடர்களை நோக்கித் தம்மை மற்ற ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டபோது சிலர் எலியாவென்றும், சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும், சிலர் யோவான் ஸ்நானகன் என்றும் இப்படிப் பலவிதமாகப் பேசுகிறார்கள் என்றனர். அப்போது இயேசு அவர்களைப் பார்த்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது பன்னிருவருக்கும் பிரதியுத்தரமாகப் பேதுரு அவரிடம், நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று பதில் சொன்னார். இயேசு அவர்களுடைய விசுவாசத்திற்காகச் சந்தோஷப்பட்டு யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பேதுருவாயிருக்கிறாய், இந்த கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்றார்.

கத்தோலிகர் வேதாகமத்தில் இப்பகுதியில் ராய். ராயோ என்ற இரண்டு சொற்கள் இருப்பது கவனிக்கத்தக் கது. ராய் என்றால் கற்கள் என்றும் ராயோ என்றால் கல் என்றும் பொருளாகும். ராய் என்ற சொல்லை வைத்தே அவர்கள் பேதுருவுக்கு ராயப்பர் என்று பெயர் சூட்டினார் கள். நீ ராயப்பராய் இருக்கிறாய், இந்த ராயோவின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்பதே இயேசு பேதுருவிடம் சொன்ன பொருளாகும். இயேசு தம்மைக் கல் என்றும், தம்மைக் கிறிஸ்துவாக ஏற்றுக் கொள்ளும் விசுவாசிகளைக் கற்கள் என்றும் குறிப்பிட்டார். பேதுரு இதைக் குறித்துத் தமது நிருபத்தில் எழுதும்போது, ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும் ஜீவனுள்ள கற்க ளைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் பரிசுத்த ஆசாரி யக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் என்றார். *(1 பேதுரு 2:4,5)* போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயே சுக் கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. என்று *(1 கொரி 3:11)* பவுல் அப்போஸ்தலரும் இதை உறுதிப்படுத்துகிறார். மேலும் இயேசுவே சபைக்குத் தலைவர் என்பதை எபேசியர் 1.23ல் காணலாம்.

இக்காலங்களில் பலவிதமான சபைப் பிரிவுகள் உள் ளன. கத்தோலிக்க சபையென்றும், புரட்டஸ்டன்ட் சபை யென்றும் அதனுள் லுத்தரன், வெஸ்லி, மெதடிஸ்ட், பிரிஸ் பிடெரியன், ஆங்கிலிக்கன், பாப்டிஸ்ட் என்றும், பிரதரன் என்றும், பெந்தேகொஸ்தே சபையென்றும் அதற்குள் த பெந்தேகொஸ்தே, இந்தியன் பெந்தேகொஸ்தே, சென்னை பெந்தேகொஸ்தே என்றும், சர்ச் ஆப் காட், அசம்பிளி ஆப் காட் என்றும் பூரண சுவிசேஷ பெந்தேகொஸ்தேயென்றும் இப்படிப் பல பிரிவுகள் ஏற்பட்டு இவைகளில் ஒவ்வொரு வரும் தங்களுடைய கொள்கைகளே சிறந்தவையென்றும் நான் முந்தி நீ முந்தியென்றும் பல போட்டி மனப்பான்மைக ளில் இறங்கி ஒருவரையொருவர் விரோதித்துக் கொள்வ தும், இவைகளுக்கு நடுவில் முழு இரவு ஜெபக் கூட்டங்கள் உபவாசக் கூட்டங்கள் என்ற பிரிவுகளும் கிறிஸ்தவ இயக்

கங்களும் உண்டாகி சில சமயங்களில் முடியைப் பிய்த்துக் கொண்டு ஓடலாமா என்று எண்ண வைக்கின்றன. எப்ப டியோ ஒரேயொரு இயேசுவும் ஒரேயொரு பைபிளுமாக இத்தனையும் இயங்கி வருவதற்காக பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

இப்பிரிவுகள் வரக் காரணம் என்ன? ஆதித் திருச்சபை எப்படி உண்டாயிற்று? அதன் கொள்கைகள் என்ன? என் பன போன்ற கேள்விகளுக்கு விடை கண்டு கொண்டால் மேற்படி மயக்கங்கள் தீர்ந்து, இயேசு கிறிஸ்துவினுடைய மெய்யான சபை என்பது எது என்பதை விளங்கிக் கொள்ள இயலும்.

அப்போஸ்தலர் பணி புத்தகத்தின் இரண்டாம் அதிகா ரம் 47ம் வசனத்தில் ''இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்'' என்று காணலாம். எனவே, கிறிஸ்து இயேசுவின் சபையில் இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே இடம் பெறத் தகுதியுள் ளவர்கள் என்பது வெளிப்படை. அதற்கு முன்பு, வசனத் தைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்ட மூவாயிரம் பேர்கள் சபையிலே சேர்க்கப்பட்டதாகக் காணலாம் (அப்.2:41). அப்படியானால் அவர்கள் கேட்ட வார்த்தைகள் என்ன என்று ஆராயத் தோன்றுகிறது.

பெந்தேகொஸ்தே என்னும் நாளில் (ஐம்பதாவது நாள்) சீஷர்கள் யாவரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்த போது, வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியான வர் அருளப்பட்டார். அப்பொழுது பேதுரு அப்போஸ்தலர் தேவ ஆவியினால் நிறைந்து இயேசுவே மேசியா என்று பிரசங்கித்தார். அங்கு கூடியிருந்த பதினெழு பாஷைகளைப் பேசுகிற யூதர்கள் தங்கள் இருதயங்களிலே குத்தப்பட்டவர் களாகி அப்போஸ்தலர்களைப் பார்த்து சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். அப்பொழுது பேதுரு ஆவியானவருடைய வல்லமையாலும் ஏவுதலினா லும் உபதேசித்துச் சொன்னது:

1. நீங்கள் ஒவ்வொருவரும் மனம் திரும்பி,

2. பாவ மன்னிப்புக்கென்று இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று

3. பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுங்கள்.

4. மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்.

5. அப்படி வேறு பிரிக்கப்பட்ட விசுவாசிகளுடன் ஐக்கியம் கொள்ளுங்கள்.

6. அப்பம் பிடுங்கள்.

7. ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்.

என்று உபதேசித்தார். இது ஆதித் திருச்சபைக்கு ஆண்டவரா கிய இயேசுக் கிறிஸ்து அனுப்பிய பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட உபதேசச் சட்டமாகும். இதை ஆதி அப் போஸ்தலத் திருச்சபையென்று அழைக்கலாம். மற்ற சபை கள் யாவும் இதற்குப் பின்பு ஏற்பட்டவைகளே!

நீதி மொழிகளின் புத்தகம் 9-ம் அதிகாரம் முதல் வசனத்தில் ''ஞானம் தன் வீட்டை கட்டி தன் ஏழு தூண்க ளையும் சித்திரம் தீர்த்து....'' என்று காணப்படுகிறது. I கொரிந்தியர் முதலாம் அதிகாரம் 31ம் வசனத்தில் கிறிஸ்து இயேசு ஞானம் என்று காட்டப்பட்டுள்ளார். I தீமோத்தேயு 3ம் அதிகாரம் 15ம் வசனத்தில் சபையானது வீடு என்று காட்டப்பட்டுள்ளது. இந்த வீடாகிய சபையை ஞானமாகிய கிறிஸ்து ஏழு உபதேசத் தூண்களினால் அழகுபடுத்துகிறார் என்பதைக் கண்டு கொள்ளலாம். ஏழு என்பது பரிபூரணத் தைக் குறிக்கும். சபையைக் கர்த்தர் உபதேசங்களினால் பரிபூரணப்படுத்துகிறார்.

இந்த ஏழு உபதேசங்களும் எங்கெல்லாம் கடைபிடிக் கப்படுகிறதோ அவையெல்லாம் தேவனுடைய சபை என்று

ஏற்றுக் கொள்ளலாம். இந்த உபதேசங்களில் ஒருவனும் ஒன்றையும் கூட்டவும் கூடாது. குறைக்கவும் கூடாது. இந்த சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் (அவன் வானத்திலிருந்து வந்த தூதனாயினும்) அவன் சபிக்கப்பட்டவன் என்று (கலாத்தியர் 1:8,9) பவுல் எழுதியுணர்த்துகிறார். கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனையுடையவன் அல்ல. ஒருவன் உங்களிடத்திலே வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால் அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் என்று யோவான் அப்போஸ்தலர் (I யோவான் 9-11) எச்சரிக்கிறார்.

சபையின் உபதேசம் என்பது மனிதர்கள் தாங்கள் விருப்பப்படியோ தங்கள் சௌகரியத்திற்காகவோ, அமைத்துக் கொள்வது அல்ல. இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று (அப்.2-47) காண்பதினால் சபையின் ஒவ்வொரு விசுவாசியும் இரட்சிப்பின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படாமல் இரட்சிப்பு அடைய வழியில்லை. பிரசங்கிக்கிறவர் இரட்சிப்பின் அனுபவம் பெற்றிராவிட்டால் வழுக்கைத் தலையன் கூந்தல் வளரும் தையல் விற்ற கதையாகி விடும்.

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள் (யோவான் 16,13-15) என்று இயேசு சொன்னதின் மூலம் சபைக்குக் கொடுக்கப்பட்ட சத்தியம் பிதா குமாரன். பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூன்று தத்துவங்களுக்குள்ளும் அடங்கியதும் ஏற்றதுமாயிருக்கிறது. ஆவியானவர் சபைக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்.

ஏழு உபதேசங்களில் முதலாவது வருவது மனம் திரும்புதல். Repent என்ற இந்த ஆங்கில வார்த்தையானது

மெட்டோயோ (ஆன்மாவில் மனம் திரும்பு) மெட்டனோயோ (ஆவியில் மனம் திரும்பு), மெட்டனோலோயா (சரீரத்தில் மனம் திரும்பு) என்று பொருள் படும். மேலும் மனம் திரும்புதலுக்குத் தேவன் தவணை (வெளி.2:21) கொடுத்திருக்கிறார். மனம் திரும்ப வேண்டும் என்று பிரசங்கித்திருக்கிறார். (மத் 4:17). மனம் திரும்ப வேண்டுமென்று எச்சரித்திருக்கிறார் (லூக்கா 13:3,5) மனம் திரும்ப வேண்டுமென்று கட்டளையும் உண்டு (அப்.17:30) இவ்வளவுக்குப் பின்பும் ஒருவன் மனம் திருப்பாவிட்டால் அவன் கிருபையை இழந்தவன் ஆவான். மனம் திரும்பினவன் அதற்கேற்ற கனிகளைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

மனம் திரும்பினவர்கள் அடுத்தபடியாகப் பெற வேண்டிய இரண்டாவது உபதேசம், பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அடக்கம் பண்ணப்படுவதற்கு ஒப்பனையான நீருக்குள் அமிழ்ந்து எழும் ஸ்நானம் (மத்தேயு 28,18,19 ரோமர் 6;4, கொலோ 2:12, 1 பேதுரு 3:21) இதைக் குறித்து அதிகம் தெரிய விரும்புவோர் ஞானஸ்நானம் என்ற செய்தியைப் படியுங்கள். சிறு குழந்தைகள் ஞானஸ்நானம், நீர் தெளிப்பு ஞானஸ்நானம், இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் போன்றவை எவ்வாறு தவறு என்பவைகளும் ஞானஸ்நானம் என்பது என்ன என்பதும் அதில் விரிவாகவும் தெளிவாகவும் காட்டப்பட்டுள்ளது. ஆதி அப்போஸ்தலர்களும் அவர்களைப் பின்பற்றிய ஊழியர்களும் மனம் திரும்பி விசுவாசிகளானவர்களுக்கே முழுக்குக் கொடுத்து வந்தனர் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை என்பதைப் பல வேத பண்டிதர்களிடம் கேட்டறிந்த பின்பே இதை எழுதுகிறேன். அப்படியானால், இம்முறைமையை மாற்றி நீர் தெளித்தலும், குழந்தைகளையும் இதற்கு உட்படுத்தலும் எப்படி, யாரால், ஏன், எவ்வாறு ஏற்பட்டது என்று விடை கண்டாக வேண்டும். அந்த விடை ஆவியானவரால் கொடுக்கப்பட்டிராது என்பது நிச்சயம். மனித ஞானத்தினால் நுழைக்கப்பட்டிருக்குமானால் அது தவிர்க்கப்பட வேண்டியதே! இதற்குப் பல காரணங்களைச் சொல்லிச் சமாதானப்படுத்த முயற்சித்தாலும் ஸ்நானம்

(Baptism) என்றாலே முழுக்கு என்றுதான் பொருள்படும். தயவு செய்து ஞானஸ்தானம் என்ற தலைப்பிலுள்ள செய்தியைப் படிக்கவும்.

மூன்றாவதாகப் பரிசுத்தாவியின் வரம். இந்த அனுபவம் சிலருக்கு ஸ்நானம் பெறுமுன்னரே கிடைக்கக் கூடும். சிலருக்கு வெகு காலம் கழித்தும் கிடைக்கக் கூடும். இது ஆண்டவருடைய அளவின்படி அருளப்படுவதாகும். ஆவியினாலே தேவனிடம் இரகசியம் பேசும் வரம் உண்டு. மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகப் பேசுவதும் உண்டு *(1 கொ. 14:2,3)*.

ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. அந்நிய பாஷைகளைப் பேசுதலும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறதும் பரிசுத்த ஆவியினாலேயே உண்டாகிறது. சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்பட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் என்ற புஸ்தகம் வாங்கிப் படியுங்கள் - அப்பொழுது இன்னும் கூடுதலாக இவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். அந்நிய பாஷை பேசினால் மட்டுமே பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கிடைத்ததாக எண்ணக் கூடாது. ஆவியின் வரங்கள் ஒன்பது. அவைகளில் ஏதாவது ஒன்றிருந்தாலும் அது அபிஷேகமே.

நான்காவதாக ஆவியானவர் சபைக்குக் கொடுத்த உபதேசம் என்னவெனில் மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்பதே! யார் மாறுபாடுள்ள சந்ததி என்று தெரிந்து கொண்டால் அப்படிப்பட்டவர்களினின்றும் விலகி எச்சரிக்கையுடன் நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

> *அவர்களோ, தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்கள் அவருடைய பிள்ளைகள் அல்ல. இதுவே அவர்கள் காரியம், மாறுபாடும் தாறுமாறுமுள்ள சந்ததியார்.*
>
> ***(உபகாமம் 32:5)***

ஆவி, ஆத்மா, சரீரம் முழுவதும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து வரும்பொழுது குற்றமற்றதாயிருக்கும்படிக் காக் கப்பட வேண்டும். (I தெச 5:23) அப்படியில்லாமல் தங்கள் மனம் போல வாழ்ந்து ஆவி ஆத்மா சரீரங்களைக் கறைப்ப டுத்தி வாழ்கின்ற எல்லோரும் மாறுபாடுள்ள சந்ததியாரே; இப்படிப்பட்டவர்களை விட்டு விசுவாசியானவன் விலகி வாழ வேண்டும். அவிசுவாசியுடன் பங்கும் ஐக்கியமும் கூடாது. (II கொரி 6:14-18).

தாங்கள் அழுக்கறக் கழுவப்படாமலிருந்தும் தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு (நீதி 30:12).

தங்கள் சுயநீதியை நம்பி இரட்சிப்பை உதாசீனம் செய்து ஆண்டவருடைய கிருபையைத் தள்ளித் தங்கள் மனவிருப்பம் போல வாழ்கிறவர்களிலிருந்து விலகி விசு வாசியானவன் வாழ வேண்டும்.

இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளத் தைத் தேடுகிறார்கள் (மத் 12:39).

தேவன் அருளிய வார்த்தைகளை விசுவாசியாமல் அடையாளங்களைக் கண்டு விசுவாசிக்கிறவர்களை ஆண்ட வர் விபசார சந்ததி என்கிறார். விசுவாசம் கேள்வியினால் வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும் (ரோமர் 10,17) வசனத்தை விசுவாசியாமல் அடையாளங் கண்டு விசுவாசிக்கிற மக்களை விட்டுப் பிரிந்து தங்களை இரட்சித் துக் கொள்ள வேண்டும்.

விசுவாசமில்லாத மாறுபாடான சந்ததியே என்ற இயேசு கடிந்து கொண்டார். விசுவாசமில்லாமல் தேவனுக் குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். இரட்சிப்பு உண்டு என்று விசுவாசிக்க வேண்டும். இரட்சிக்கப்பட்ட பின்பு தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்படுகின்ற ஞானஸ்நானம் உண்டு என்று விசுவாசிக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அதினாலுண்டாகும் ஆவியின் வரங்கள் அன்

னிய பாஷை இவைகளை விசுவாசிக்காத எவரையும் விட்டு விலகித் தங்களை இரட்சித்துக் கொள்ள வேண்டும்.

சத்தியத்திற்குக் கீழ்படியாத எவரும் மாறுபாடான சந்ததியே. சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிற எவரும் மாறுபாடான சந்ததியே. இப்படிப்பட்டவர்களை விட்டு விலகித் தங்களை இரட்சித்துக் கொள்ள வேண்டுமென்பதே அப்போஸ்தல உபதேசம். அந்நிய நுகத்தில் அவிசுவாசியுடன் பிணைக்கப்பட்டால் பின்மாற்றம் ஏற்படலாம். எனவே, பரிசுத்தமாகுதலைத் தெய்வ பயத்தோடே பூரணப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இயேசுவையும் பைபிளையும் விசுவாசிக்கிற எல்லோருமே விசுவாசிகளாகிவிட முடியாது. பிசாசும் இயேசுவைத் தேவ குமாரனென்றும் வேதத்தைத் தெய்வ வசனமென்றும் விசுவாசிக்கிறது. ஆகையால் பிசாசை விசுவாசி என்று எடுத்துக் கொள்ள இயலுமா! இரட்சிக்கப்பட்ட பின்பு விசுவாசியானவன் தன் கிரியைகளினால் தான் தேவனுடைய பிள்ளை என்று மற்றவர்களுக்குக் காட்ட வேண்டும். கிரியை இல்லாத விசுவாசம் செத்தது என்று அறிந்து செயல்பட வேண்டும்.

இயேசுக் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். அவருடைய மாதிரியைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும். இதற்கு விசுவாசிகளின் ஐக்கியம் கண்டிப்பாகத் தேவை. ஏழு சத்தியங்களையும் போதிக்கிற எந்த சபையும் விசுவாச சபையே! ஏழு சத்தியங்களையும் விசுவாசித்து ஏற்றுக் கொள்கிற எந்த விசுவாசியும் விசுவாசியே! இப்படிப்பட்டவர்களுடன் அந்நியோன்ய ஐக்கியம் கொள்ள வேண்டும். விசுவாசிகளல்லாத மற்றவர்களுடன் சாதாரண (I கொரி 5:10,11) ஐக்கியம் கொள்ளலாம். அப்படியில்லையென்றால் இவ்வுலகத்தில் வாழ முடியாது.

ஆனால், அந்நியோன்னியத்திலும் ஐக்கியத்திலும் விசுவாசிகளுடன் இருப்பது நல்லது. இப்படிப்பட்ட ஐக்கியம் பிதாவுடனும் அவருடைய குமாரனுடனும் இருக்கிறபடியினால் ஆன்மீக வாழ்விற்கு உதவியாய் இருக்கிறது. இதுவே ஐந்தாவது உபதேசம்.

இப்படிப்பட்டவர்களுடன் சேர்ந்து அப்பம் பிடுவது (திருவிருந்து ஆராதனை) ஆறாவது உபதேசம். சில சபைகளில் இரட்சிக்கப்படாதவர்கள், முழுகி ஸ்நானம் பெறாதவர்கள் இதில் பங்கு பெற வேண்டாம் என்று பாஸ்டர் சொல்லும்போது அவர் இத்திருவிருந்தை உங்களுக்குத் தரமாட்டேன் என்றோ அல்லது உங்களை அவர் விலக்கி வைக்கிறார், தடுக்கிறார், மறுக்கிறார் என்றோ நினைக்கக் கூடாது. அபாத்திரனாக இருந்து ஒருவன் இதில் பங்கு பெற்றால் அவன் இதன் மூலம் தனக்கு ஆக்கினையை வரவழைத்துக் கொள்கிறான். (I கொரி *11:29*) என்பதினாலே அப்படிச் சொல்லி உங்களைத் தப்புவிக்கிறார்.

அப்படியானால், பெந்தேகொஸ்தே சபைகளில் திருவிருந்து ஆராதனையில் பங்கு பெறுகிற எல்லாருமே பரிசுத்தவான்கள் தாமா என்ற ஒரு கேள்வி எழுகின்றது. முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும். மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான் (யோவான் *13:10*) என்று இயேசு சொன்னபடி இரட்சிக்கப்பட்டவர்கள் ஸ்நானம் பெற்றவர்கள் இவ்வாராதனைக்கு முன்பு தங்களைத் தாங்களே நிதானித்து அறிய வேண்டும். (I கொரி *11:31*) எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டும் என்பது தேவ கட்டளை (I கொரி *11:28*) இரட்சிப்பின் அனுபவம் பெறாதவர்கள் ஸ்நானம் பெறாதவர்கள் எவ்வளவுதான் தங்களைச் சோதித்து அறிந்தாலும் நிதானித்து அறிந்தாலும் அது தேவனுடைய பார்வையில் சுத்தமாக இருக்காது. இப்படிப்பட்டவர்கள் தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியைச் சேர்ந்தவர்கள். திருவிருந்து ஆராதனையில் கலந்து கொள்ளுமுன்பு

சிலர் பயத்துடனும் கண்ணீருடனும் தங்கள் அபாத்திரத் தன்மையை உணர்ந்தே பங்கு பெறுகிறார்கள். ஆனால், அதே சமயத்தில் இவர்கள் இரட்சிப்பின் அனுபவம் பெற்றோமா? வேத வசனப்படி முழுகி ஸ்நானம் பெற்றோமா? என்று உணர்வடைவதில்லை. எனவே, இரட்சிப்பு, ஸ்நானம் போன்ற அனுபவங்களைப் பெறாதவர்களுடன் அப்பம் பிடாமல் அப்படிப்பட்ட அனுபவம் பெற்ற விசுவாசிகளுடன் அப்பம் பிட வேண்டும் என்பது ஆறாவது உபதேசம்.

இனி, இப்படிப்பட்ட விசுவாசிகளுடன் ஐக்கியப் பட்டு ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும் என்பது ஏழாவது உபதேசம். விசுவாச அனுபவம் பெறாதவனுடன் ஒருமனப் பட்டு ஜெபிக்க இயலாது. எங்கே இரண்டு அல்லது மூன்று பேர்கள் என் நாமத்தினால் கூடுகிறார்களோ என்பது விசுவாசிகளைக் குறிக்கும். இரட்சிக்கப்படாதவர்களும், ஸ்நானப் படாதவர்களும், பாவத்தில் நிலைத்திருப்பவர்களும் இவ்வசனத்தைப் பாவிக்கக் கூடாது. விசுவாசிகளின் ஐக்கியத்தில் ஒரு மனம் இருக்கும். ஒரு மனம் இருக்கிற இடத்தில் தேவப் பிரசன்னம் இருக்கும்.

சபைக்கு ஏழு உபதேசங்களைக் கொடுத்த தேவன் அதைப் பராமரிப்பதற்கு ஐந்து ஊழியர்களை நியமித்தார்.

> *நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் அவர் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் சிலரைச் சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பவராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். (எபே. 4:13).*

இந்த ஐந்து பேர்களும் ஏழு உபதேசங்களடங்கிய சபையைப் பராமரிப்பதற்காக தேவனுடைய ஆவியானவரால் ஏற்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் கல்வியின் தகுதியினாலேயோ, அறிவின் தகுதியினாலேயோ, பட்டப் படிப்பின் தகுதியினாலேயோ பணத்தின் தகுதியினாலேயோ இவ்வூழியத்தைப் பெறாமல் அழைப்பின் தகுதியினாலும் தெரிந்து கொள்ளுதலின் தகுதியினாலும் ஆண்டவரால் ஏற்படுத்தப்படுகிறவர்கள். இவர்கள் சபையுடன் இணைந்தவர்கள். சபை அமைப்பு இல்லாமல் கூட்டம் கூட்டி, பிரசங்கம் செய்கிறவர்கள், அற்புதங்கள் செய்கிறவர்கள், தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள் சபைக்கு வெளியே நிற்கிறவர்கள். இப்படிப்பட்டவர்கள் அனேக ஆத்துமாக்களைக் கர்த்தருக்குள் நடத்தி ஞானஸ்நானமும் கொடுத்து பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுவதற்கும் வழி நடத்துகிறார்கள்.

அதன் பின்பு இந்த ஆத்துமாக்கள் எவ்விதமான சபை உபதேசத்தில் நிலை நிற்பார்கள்! தங்கள் சபைகளில் முழுக்கு ஞானஸ்நானம் அல்லது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் போன்ற சத்தியங்கள் இல்லாததால் இப்படிப்பட்டவர்கள் சபையற்ற அல்லது சபை உறுப்பினரற்ற ஊழியர்களிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு பின்பு மறுபடியும் தங்கள் பழைய சபைக்கே செல்வதினால் இடறுகிறார்கள். இவர்களைச் சத்தியத்திற்குள் வழி நடத்துகிறவர்கள் இடறலாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஊழியர்கள் தாங்களாவது சபை நடத்த வேண்டும். அல்லது சபையுடன் இணைந்து அதின் அங்கத்தினராகி ஊழியம் செய்ய வேண்டும். இரண்டும் இல்லாமல் சுயாதீன ஊழியர், எல்லா சபைகளையும் அனுசரித்துப் போகிறவர் என்ற கொள்கையுடையவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்ட பூரண சத்திய சபையின் ஊழியர்களாயிருக்க இயலாது.

உதாரணமாகக் கத்தோலிக்க சபையைச் சார்ந்த ஒருவர் சுயாதீன ஊழியர் ஒருவருடைய செய்தியினால் தொடப்பட்டு இரட்சிக்கப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இவருக்குச் சுயாதீன ஊழியர் முழுக்கு ஞானஸ்நானம்

கொடுத்து அதன் பின்பு அவரைக் கத்தோலிக்க சபைக்கே போகும்படி அனுப்பினாலும் அல்லது தான் நடத்தும் கூட்டங்களில் கலந்து கொள்ளும்படி அறிவுரை சொன்னாலும் அது சரியானதல்ல. கத்தோலிக்க சபையில் உருவ வழிபாடு. மரியாள் வணக்கம் போன்ற இன்னும் பல காரியங்கள் உண்டு. இதிலிருந்து பிரிந்து வர வேண்டுமே தவிர சத்தியத்தை அறிந்த பின்பும் மறுபடியும் பழைய கொள்கைகளையே பின்பற்றுவதினால் என்ன நன்மை?

அப்படியானால் இந்து மார்க்கத்திலிருந்து இயேசுவை ஏற்றுக் கொள்கிறவர்கள், ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஏன் பொட்டு வைத்துக் கொள்ளக் கூடாது? ஏன் இந்துக் கோயில்களுக்குப் போகக் கூடாது? ஏன் இந்துமத ஆசாரங்களைப் பின்பற்றக் கூடாது?

இந்து மதத்திலிருந்து வந்தவர்கள் தங்கள் பழைய கொள்கைகளையும் பழைய ஆசரிப்புகளையும் பழைய சடங்குகளையும் விட்டுவிட்டு முற்றிலும் இயேசுவுக்காகத் திரும்பி வரும்பொழுது, சத்தியமில்லாத சபைகளிலிருந்து சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிற கிறிஸ்தவர்கள் தங்கள் பழைய பாரம்பரியங்களை விட்டுவிட்டு வந்தால் என்ன? கிரேக்கன் மனம் திரும்பியபொழுது தன் பழைய சடங்காச்சாரங்களையெல்லாம் விட்டுவிட்டான். யூதன் மனம் திரும்பியபொழுது அதில் சிலர் விருத்தசேதனம் போன்ற சடங்காச்சாரங்களை விட்டுவிட மனமற்றவனாயிருந்தான். அதுபோலவே இன்று நடக்கிறது. கிறிஸ்துவுக்குள் யூதனென்றும் இல்லை. கிரேக்கனென்றும் இல்லை. புது சிருஷ்டியே காரியம். தங்கள் பாரம்பரியத்தினாலே தங்களை வீணராக்கிக் கொண்ட யூதர்களைப் போலவே சில கிறிஸ்தவர்கள் தங்கள் பாரம்பரியக் கொள்கைகளை விட்டுவிட மனமில்லாமல், தங்களுக்கேற்ற போதகர்களைத் தெரிந்து கொண்டு அவர்களைப் பின்பற்றி சத்தியத்தை விட்டு விடுகிறார்கள். கிடப்பதெல்லாம் கிடக்கட்டும் கிழவியை தூக்கி மடியில் வை என்ற பழமொழிப் படி சத்தியங்கள் ஏழு இருக்க அவைகளையெல்லாம் விட்டுவிட்டு ஏழாம் நாளைத் தூக்கி தலை

மேல் வைத்துக் கொண்டாடுகிறவர்களும் ஞானஸ்நானமும் வேண்டாம். கர்த்தருடைய பந்தியும் வேண்டாம். கொடியே போதும் என்கிறவர்களும் இயேசுவை வணங்கு. அவர் அம்மாவையும் அப்பாவையும் (சூசை) வணங்கு. அவரு டைய சீடர்களையும் சிரேஷ்டர்களையும் சம்மனசுகளையும் வணங்கு என்பவர்களும் எந்த சபையில் சேர்த்திட? வேதாக மும் அதின் வழி நடத்துதலும் எங்கே போயிற்று?

இப்படிப்பட்ட சபைகளிலுள்ளவர்கள் பணக்காரர்களா கவோ அதிகாரிகளாகவோ இருந்தால் இவர்களிடம் சத்தி யம் தெரிந்த ஊழியர்களும் சுயாதீன ஊழியர்களும் சபைப் பாகுபாடற்ற அமைப்புகளின் ஊழியர்களும் நடந்து கொள் ளும் அழகே தனி (ஹி ஹி).

இப்படிப்பட்ட ஊழியர்கள் ஏன் தங்களுக்கென்று சபை ஆரம்பிக்கக் கூடாது? அல்லது சத்தியம் போதிக்கப்படுகிற சபையில் அங்கத்தினராகி ஊழியம் செய்யக் கூடாது. சிலர் தங்களுக்குச் சபை நடத்தும் அழைப்பு இல்லை என்பார்கள். அப்படியனால் சபையில் இணைந்து ஊழியம் செய்ய லாமே! அதற்கு அழைப்புத் தேவையில்லை. அது கடமை. ஏனெனில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன், போதகன் என்ற ஐந்து ஊழியர்களும் சபைக் காக ஏற்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் சபைக்குள் இருந்து சபைத் தலைவருடன் இசைந்து ஊழியம் செய்ய வேண் டுமே தவிர, சபைக்கு வெளியே இருந்து கொண்டு சபை ஐக்கியம் இல்லாமல் ஊழியம் செய்ய தேவன் இவர்களை அழைக்கவில்லை.

இப்படிப்பட்டவர்களால் சபைகளில் குழப்பங்கள் ஏற் படுமே தவிர பக்தி விருத்தியுண்டாகாது. மூன்று நாள் உபவாசக் கூட்டம் ஐந்து நாள் கருத்தரங்கு. நாற்பது நாள் வேத வகுப்பு என்று சபை அமைப்பற்ற, அல்லது அங்க மற்ற ஊழியர்கள் பிரமாதமாக விளம்பரம் செய்து ஜனங் களை அழைப்பார்கள். அங்கு அந்தக் குறைந்த நாட்களில் பலவிதமான உணர்ச்சிவசப்படும் காரியங்கள் நடக்கும்.

அங்கிருந்து மறுபடியும் தங்கள் சபைக்கு வருகிறவர்களின் கருத்து என்ன தெரியுமா?

''நம்ம பாஸ்டர் ஒண்ணுஞ் சரியில்லை. அவருக்கு ஒண்ணும் தெரியாது'' என்பதுதான். அல்லது இப்படிப் பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் தாங்களும் வல்லமையுடன் ஊழியம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத் தில் சபையை விட்டுப் பிரிவதுமன்றி சபையையும் பிரித்து விடுகிறார்கள். அதினாலேயே, பவுல் அப்போஸ்தலர் மனு ஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல் அன்புடன் சத்தியத் தைக் கைக் கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லா வற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக சபைக்குள் ஐந்து ஊழியர்களை ஆண்டவர் ஏற்படுத்தியிருக் கிறார் என்று எபேசியர் *4:14,15* ஆகிய வசனங்களில் எழுதியிருக்கிறார்.

சபை பாகுபாடற்ற, சுயாதீனமான என்ற வார்த்தைகள் யாரையும் குற்றப்படுத்தாது. எல்லோரையும் திருப்திப்படுத் தக் கூடியது. ஆனால், தேவனுடைய ஆலோசனையும் கட்டளையும் இங்கே சரியாக இருக்காது. எனவே, சத்தியம் அறிந்தவர்கள், சத்தியத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் ஏழு உப தேசங்கள் ஐந்து ஊழியர்கள் கொண்ட சபையாகப் பார்த்து அதில் இணைந்து பரிசுத்தப்படவும் ஆயத்தமாகவும் செய் வது நல்லது.

அப்போஸ்தலன் என்பவர் அனுப்பப்படுகிறவர். அதி காரமுடையவர், கிறிஸ்துவின் சபைகளை புதிய இடங்க ளில் உண்டாக்குகிறவர்.

தீர்க்கதரிசி என்பவர் தேவனுடைய செய்தியைத் தீர்க்க மாக திட்டவட்டமாகப் பகுத்துப் போதிப்பவர் அல்லது மறைந்து கிடக்கின்ற பாவங்களை வெளிப்படுத்துகிறவர் கள். இப்படிப்பட்டவர்கள் சபையைச் சீர்திருத்துவார்கள். சீர்கெட வைக்கமாட்டார்கள்.

பரலோகத்திற்குப் போனேன். மோசேயைப் பார்த்தேன். தாவீதுடன் சேர்ந்து கின்னரம் வாசித்தேன் என்பன போன்ற கதைகளை அளக்க மாட்டார்கள். வேத வசனத்திற்கு ஒவ்வாத காரியங்களை, ஏற்றுக் கொள்ள முடியாத காரியங்களைக் கர்த்தர் காண்பித்தார். கர்த்தர் வெளிப்படுத்தினார் என்று சொல்ல மாட்டார்கள்.

சுவிசேஷகன் என்பவன் ஆத்துமாக்களை ஆதாயம் செய்து சபைக்குக் கொண்டு வந்து மேய்ப்பரிடம் சேர்ப்பவன். நற்செய்தி அறிவிப்பாளர்.

மேய்ப்பர் என்பவர் சபையைப் பாதுகாத்து நடத்துகிறவர். சில சமயங்களில் சுவிசேஷகராகவும் போதகராகவும் இருக்கலாம். ஆனால், Jack of all master of none என்ற கணக்கில் இருக்கக் கூடாது. சபையைப் பராமரிப்பது இவர் பொறுப்பு. மேய்ப்பன் தன் ஆடுகளை அறிந்திருப்பார். கறவலாடுகளை மெதுவாக நடத்துவார். குட்டி ஆடுகளையும் நலிந்த ஆடுகளையும் சுமப்பார். மெலிந்த ஆடுகளுக்கு அதிக தீனி கொடுப்பார். கொழுத்த ஆடுகளை கோலினால் தட்டுவார். ஓநாய்கள் வந்து கௌவிக் கொண்டு போய்விடாதபடி ஜாக்கிரதையாக இருப்பார். அடிக்கடி தண்ணீரண்டையில் நடத்துவார். புல்லுள்ள இடங்களில் மேய்ப்பார்.

போதகர் வேதத்தைப் போதிக்கக் கூடியவர். சபையில் விசுவாசிகள் கூட நல்ல போதகராக செயல்பட முடியும். மேய்ப்பனின் அழைப்பு இல்லாதவர்கள் போதக சமர்த்தர்களாக இருப்பது உண்டு.

ஆனால், இந்த ஐந்து ஊழியர்களும் சபைக்காக சபைக்குள் இருந்து ஊழியம் செய்ய அழைக்கப்பட்டவர்கள். எனவே, விசுவாசிகள் இங்கே அங்கே என்று ஓடாமல், சத்தியம் போதிக்கப்படுகிற சபையில் சபைத் தலைவரின் கீழ் சபையுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

சபையானது சரீரத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறபடியினால், இயேசுக் கிறிஸ்துவினாலேயே அந்தச் சரீரம் முழுவ

தும் அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய் கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் அளவுக்குத் தக்கதாகக் கிரியை செய்கிற படியே அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. (எபே. 4:16) என்று பவுல் எழுதுகிறார்.

கை மாத்திரம் பையைத் தூக்கிக் கொண்டு கடைக்குப் போனால் எப்படியிருக்கும்? கால்கள் மட்டும் சைக்கிள் ஓட்டிக் கொண்டு போனால் எப்படியிருக்கும்? கால்கள், கைகள், தலை இல்லாத சரீரம் பார்க்க எப்படியிருக்கும்? அதுபோலத்தான் சபை ஐக்கியம் இல்லாமல், அல்லது சபை இல்லாமல், சபைப் பாகுபாடற்ற, சுயாதீன, ஊழியர்களும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களைப் பின்பற்றும் விசுவாசிகளும் இவர்களைப் போலவே மாறிவிடுவார்கள். எந்த சபையும் நல்ல சபை இல்லையென்பதெல்லாம் வேதத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளாதவர்களின் பேச்சாக இருக்கும். அல்லது இவர்கள் தங்கள் மனசாட்சியிலே சூடுண்ட பொய்யராயிருப்பார்கள்.

பலவிதமான உபதேசங்கள் நேற்றும் இன்றும் மட்டுமல்ல, சபை ஆரம்பித்த காலத்திலிருந்தே இருந்து வருகின்றது. இவைகளைக் குறித்துத் தொடர்ந்து படிப்போம்.

எனவே, சபையென்பது இயேசுக் கிறிஸ்துவின் சொந்த இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்டது. அதற்கு இயேசுக் கிறிஸ்து தலையாயிருக்கிறார். சபையானது இயேசுக் கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கிறது.

சபைக்கு ஆவியானவரால் கொடுக்கப்பட்ட உபதேசங்கள் ஏழு. மனம் திரும்பும், பாவ மன்னிப்புக்கென்று பெறுகிற ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் அபிஷேக வரம், மாறுபாடுள்ள சந்ததியாரை விட்டுப் பிரிந்து வாழ்தல், அப்படிப்பட்டவர்களுடன் அந்நியோன்ய ஐக்கியம், அப்பம் பிடுதல், ஜெபம் ஆகியவைகளாகும். இந்த உபதேச

சட்டங்களுக்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்து விசுவாசிக்கிற இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் தனது சபையிலே சேர்க்கிறார்.

சபைக்குத் தேவன், அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன், போதகன் என்ற ஐந்து ஊழியர்களைத் தந்திருக்கிறார். இவர்கள் சபைக்குப் பக்தி விருத்தி உண்டாக்குகிறவர்கள்.

சபைக்கு மூப்பராகிய சங்கத்தார் உண்டு. இவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டுமென்பதை I, II தீமோத்தேயு நிருபங்களில் காணலாம்.

இப்படிப்பட்ட உபதேசங்களும் ஊழியங்களுமுள்ள எந்தப் பெயருள்ள சபையும் வேதாகமத் திருச்சபையாகும். அதிலே ஐக்கியப்படுகிறவர்கள் வேதாகம விசுவாசிகள் ஆவர்.

தீர்க்க தரிசனம்

3. தீர்க்க தரிசனம் என்பது என்ன?

"நம்மில் தீர்க்க தரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடைய வன் விசுவாசப் பிரமாணத்துக் கேற்றதாகச் சொல்லக் கட வன்." *(ரோமர் 12:6)*

"ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான். அவனுக்கு நீ பயப்பட வேண்டாம். *(உபாகமம் 18:22)*

தங்கள் நாவின் சொல்லையே வழங்கி! 'அவர் அதை உரைத்தார்' என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். இதோ, பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்க தரிசனமாகச் சொல்லி, அவை களை விவரித்து, என் ஜனத்தைத் தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும், மோசம் போக்குகிறவர்களுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர் களை அனுப்பினதுமில்லை. அவர்களுக்குக் கற்பித்தது மில்லை; அவர்கள் இந்த ஜனத்து ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

(எரேமியா 23:31,32)

சொப்பனம் கண்டேன் சொப்பனம் கண்டேன் என்று என் நாமத்தைச் சொல்லிப் பொய்த் தீர்க்கதரிசனம் உரைக் கிற தீர்க்கதரிசிகள் சொல்லுகிறதைக் கேட்டேன். இவர்கள் தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்க தரிசனமாகச் சொல்லுகிறவர்கள்.

(எரேமியா 23:25,26)

ஒரே ஆவியானவர் சபையின் பக்தி விருத்திக்காகவும், வளர்ச்சிக்காகவும் ஏழு உபதேசங்களையும், ஐந்து ஊழியர்க

ளையும் ஒன்பது வரங்களையும் ஒன்பது கனியையும் கொடுத்திருக்கிறார். இவைகளில் உபதேசங்களைக் குறித்தும் ஐந்துவித ஊழியங்கள், ஊழியர்களைக் குறித்தும் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். இன்னும் சில விரிவாக்கங்கள் தொடர்ந்து வரும்.

வரங்கள், கனிகள் ஒன்பது ஆகும். கனிகள் நம்மிடமிருந்து உற்பத்தியாக வேண்டும். மாமரத்தில் யாரும் மாம்பழங்களைக் கடையிலிருந்து வாங்கி வந்து ஒட்ட வைக்க மாட்டார்கள். மாங்கனி மாமரத்திலிருந்தே உண்டாகும். அதுபோல ஆவிக்குரிய மனிதனுக்குள்ளிருந்தே ஆவிக்குரிய கனிகள் தானாக உற்பத்தியாகி வெளி வரவேண்டும். ஆனால், வரம் என்பது அப்படியல்ல. ஆங்கிலத்தில் அது Gift *(பரிசு)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் யாரிடமும் போய் ஒரு பொருளைச் சொல்லி அதைப் பரிசாகத் தாருங்கள் என்று கேட்பதில்லை. கேட்டு வாங்குவதற்குப் பிச்சை, கடன், இரவல் என்று பொருள். ஆனால், நாம் எதிர்பார்க்காத நேரத்தில் எதிர்பாராத ஒன்றை ஒருவர் நமக்குக் கொடுப்பாரானால் அதற்குப் பரிசு என்று பொருள்.

ஆவிக்குரிய ஒன்பது வரங்கள் என்னென்னவென்று முதலாவது பார்ப்போம்.

1. ஞானத்தைப் போதிக்கும் வசனம்
2. அறிவை உணர்த்தும் வசனம்
3. விசுவாசம்
4. குணமாக்கும் வரம்
5. அற்புதங்களைச் செய்யும் சக்தி
6. தீர்க்க தரிசனம் உரைத்தல்
7. ஆவிகளைப் பகுத்தறிதல்
8. பற்பல பாஷைகளைப் பேசுதல்
9. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்.

மேற்கண்ட வரங்களையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து தமது சித்தத்தின் படியே அவனவனுக்குப்

பகிர்ந்து கொடுக்கிறார். ஏனெனில் ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. வரம் என்பது Gift என்று ஆங்கிலத்திலும் Charismata என்று கிரேக்கு மொழியிலும் அழைக்கப்படும். வரங்களைக் குறித்த அறிவு ஜனங்களுக்குள் வந்து அவர்கள் தங்கள் சபையிலிருந்து மற்ற சபைகளுக்குப் போக ஆரம்பித்தபோது, தங்கள் கபையிலும் வரங்களைக் குறித்த இயக்கம் ஏற்படுத்த ஆரம்பித்த கத்தோலிக்கர்கள் அதற்கு Charismatic Movement என்று பெயரிட்டனர்.

வரங்கள் சபையின் ஒருமைப்பாட்டை உணர்ந்து செயல்படுவதற்குப் பிரயோசனப்படுத்த வேண்டுமேயன்றி பிரிவினைகளை உண்டாக்குவதற்கல்ல. ஒரு சில விசேஷ வரங்களைப் பெற்றவர்கள் அவைகளினிமித்தம் வீம்பும் பெருமையும் பாராட்டிச் சபையிலிருந்து பிரிந்து தனி இயக்கங்கள் ஆரம்பித்து அதே சமயம் தங்களை எல்லோரும் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக தங்கள் இயக்கங்களை Inter denomination *(சபை பாகுபாடற்ற)* இயக்கங்களாக வைத்துக் கொண்டே பிரிவினையை உண்டாக்குகிறார்கள். விசேஷித்த வரங்கள் இல்லாத ஊழியர்களை அற்பமாக எண்ணி அசட்டை பண்ணுகிறார்கள். ஜனங்களும் இவ்விசேஷித்த வரங்களைப் பெற்றவர்களைத் தெய்வமாக்கி வணங்க ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் தங்கள் சபையின் ஊழியரைத் துச்சமாக மதித்து, சபைக்குக் கொஞ்சமும் பிரயோசனமற்ற ஊழியர்களைத் தலைமேல் வைத்துக் கொண்டாடுவதுமாக இருக்கிறார்கள். ஆவியானவர் சபைக்கும் சபை ஊழியர்களுக்கும் வரங்களைத் தருகிறார். வரம் பெற்றவர்களேயானாலும் அவர்கள் ஒரு சபையில் மேய்ப்பனுக்குக் கீழடங்கி அச்சபைக்கு உபயோகமாக இருக்க வேண்டும் என்பதே தேவ சித்தம்.

இந்த ஒன்பது வரங்களில் அந்நிய பாஷை பேசுதல் அடங்காது. அது ஆவிக்குரிய தனிப்பட்ட காரியம். இதைக் குறித்து பின்பு விளக்குவோம்.

ஆவிக்குரிய ஒன்பது வரங்களில், விசுவாசியினிடத்தில் ஏதாவது ஒரு வரமாவது கட்டாயம் இருக்கும். வரம் என்றவுடன் அனேகர் நினைப்பது என்னவெனில் குணமாக்கவும் பேய்களை ஓட்டவும் அற்புதங்கள் செய்வது மட்டும் என்று நினைக்கிறார்கள்.

பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிப்பதே ஒரு வரம். ஒன்பது வரங்களில் இது மூன்றாவது. பற்பல பாஷைகளைப் பேச அறிந்திருப்பது ஒரு வரம். அதிகமான மொழிகள் தெரிந்து வைத்திருந்தால் அதிகமான மக்களிடத்திலே ஆண்டவரைப் பற்றிக் கதைக்கலாமல்லவா? ஒருவர் கதைக்கும்போது மற்றவருக்கு அது விளங்காவிட்டால் அவருக்கு விளங்குகிற மொழியில் அதை மொழி பெயர்ப்பதும் கூட ஒரு வரமே! இப்படிப்பட்ட வரங்கள் அனேகருக்கு இருந்தும் இவைகளை வரங்களாக எண்ணுவதேயில்லை. என்ன வரம் இருந்தாலும் இவைகளுடன் தெய்வீக அன்பின் சுபாவம் இருக்க வேண்டும். அன்பு இல்லாதவன் தேவனை அறியாதவன். தேவனை அறியாதவன் எப்படி வரங்களைப் பெற இயலும்?

சாதாரணமாக ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாசம், குணமாக்கும் வரம், அற்புதங்களைச் செய்யும் சக்தி, ஆவிகளைப் பகுத்து அறிதல் பற்பல பாஷைகளைப் பேசுதல், அவைகளை வியாக்கியானம் செய்தல் ஆகிய வரங்களைக் குறித்து நாம் அறிவோம். ஆனால், தீர்க்கதரிசனம் உரைத்தல் என்ற வரம் குறித்துப் பலவிதமான சந்தேகங்களும் வியாக்கியானங்களும் இருக்கிறபடியினால் இங்கே இந்த ஒரு வரத்தைக் குறித்துச் சற்று விளக்கமாக எழுதுவது நல்லதெனக் கண்டேன்.

தீர்க்கதரிசனம் (Prophecy) என்ற வார்த்தை இங்கே பிரசங்கம் (Preaching) என்றே பொருள்படும். துர்அதிர்ஷ்டவசமாகத் தீர்க்கதரிசனம் என்ற சொல் பின்வரும் காரியங்களை முன் உரைப்பது என்ற பொருளிலேயே கடைப்பிடிக்

கப்பட்டு வருகிறது. தீர்க்க தரிசியானவன் (பிரசங்கம் செய்கிறவன்) தேவனுடன் எப்போதும் நெருங்கி வாழ்வதினால் தேவனுடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து அதை சபைக்குத் தெரியப்படுத்துகிறான். இது இரண்டு வகையாக வெளிப்படும்.

ஒன்று ஜனங்கள் தேவனுயை சித்தத்திற்கு மாறாக நடக்கும்போது அதை உணர்த்திக் கடிந்து பேசுதல். அதாவது ஜனங்களின் பாவங்களைக் கண்டித்து உணர்த்துதல். இரண்டாவது, தமது ஜனங்கள் இவ்விதமாய் நடக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அதை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, ஆலோசனை சொல்லி, வழி நடத்துவது. இந்த இரண்டுக்கும் சேர்த்துத் தீர்க்க தரிசனம் உரைத்தல் என்று பெயர்.

கத்தோலிக்க வேதாகமத்தில் இறைவாக்கு வரம் (தீர்க்க தரிசனம்) என்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம் என்னவெனில், கடவுள் பெயரில் பேசி, திருச்சபைக்கு வளர்ச்சி தந்து அறிவுரைக் கூறி ஆறுதலளிக்கும் வரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திருச்சபையும் நடத்தாமல் திருச்சபையிலும் அங்கமாயில்லாமலும் இருக்கும் ஊழியர்கள் தீர்க்க தரிசனம் உரைப்பது யாருக்கு பயன்?

Williams மொழி பெயர்ப்பிலும் Prophetic insight (போதிப்பதில் ஆழ்ந்த அறிவு, நுண்ணறிவு) என்று சொல்லப்பட்டிருக்கிறது. Beck மொழிபெயர்ப்பில் தேவ வசனத்தை எடுத்துப் பேசுதல் என்று எழுதப்பட்டிருக்கிறது.

பாவங்களைக் கண்டிக்காமல், சத்தியத்திற்குள் நடத்தாமல் ஜனங்கள் சந்தோஷப் படும்படியும், மனநிறைவுடன் திரும்பிப் போகும்படியும் ஆறுதலான வேத வசனங்களை உரைப்பது தீர்க்க தரிசனமாகாது.

கடந்த கால வாழ்க்கையில் என்னென்ன நடந்தது என்று சொல்வது தீர்க்கதரிசனமாகாது. ஜோசியக்காரனும் குறி சொல்லுகிறவனும் அப்படிச் சொல்லக் கூடும்.

எதிர்கால வாழ்க்கையில் இன்னின்ன நடக்கப் போகிறது என்று சொல்வதும் தீர்க்க தரிசனம் ஆகாது. ஜோஸியக்காரனும் குறிக்காரனம் கோடங்கியும், ஜாதகம் பார்ப்பவனும்கூட அப்படிச் சொல்லக் கூடும். அவர்கள் பிசாசின் ஆவியைக் கொண்டு சொல்லுகிறார்கள். இவர்களோ நமது ஆண்டவரின் நாமத்தினால் அவருடைய ஆவியைக் கொண்டல்லவா சொல்லுகிறார்கள் என்று சிலர் சொல்லலாம். அப்படியானால் குறி கேட்பதும், குறி சொல்வதும் சரிதானா?

தன்னிடத்தில் வருகிற எல்லோர்க்கும் எதையாவது சொல்லியே அனுப்ப வேண்டும் என்பதற்காக சிலர் தங்கள் மனதில் தோன்றிய எதையாவது பட்டும் படாமல் சொல்லி விடுவார்கள். கருப்பும் இல்லை; சிவப்பும் இல்லை. நெட்டையுமில்லை குட்டையுமில்லை; தடியும் இல்லை ஒல்லியுமில்லை என்கிற மாதிரி.

இக்காலத்தில் இது ஒரு வியாதி போலவே அனேகரைப் பிடித்துக் கொண்டுள்ளது. தன்னிடம் ஏதோ ஒரு வல்லமை இருக்கிறது என்று மற்றவர்கள் நம்ப வேண்டுமென்பதற்காகவே எதையாவது சொல்லி அசர வைப்பார்கள்.

பிறந்து சில நாட்களே ஆன குழந்தையொன்று வியாதிபட்டுக் கவலைக்கிடமாயிருந்தது. குழந்தையின் தகப்பன் அதை எடுத்துக் கொண்டு ஒரு ஊழியரிடம் போனார். அந்த ஊழியர் அதற்காக ஜெபம் செய்தார். பின்பு அந்த தகப்பனை நோக்கி, இந்தக் குழந்தை ஆண்டவரின் கரத்தில் இருக்கிறது என்று தீர்க்க தரிசனம் சொல்லி அனுப்பினார். குழந்தை பிழைத்துக் கொண்டால், அல்லது இறந்து விட்டால் அது கர்த்தர் கரத்திலிருக்கிறது என்று சொன்னது மெய்யாகுமல்லவா?

கணவரால் உபத்திரவப்பட்ட ஒரு ஸ்திரி ஒரு ஊழியரிடம் சென்று ஜெபித்துக் கொள்கிறாள். ஊழியரின் கடமை என்ன? புத்திமதி சொல்லி எப்படியாவது அந்தக் கணவனை

ஆண்டவருக்குள் வழிநடத்தப் பிரயாசப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவர் சொன்ன தீர்க்க தரிசனம் என்ன தெரியுமா? ''ரூத்தின் நிலை உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்பதே! அதே ஸ்திரி வேறொரு ஊழியரிடம் சென்றாள். அவர் சொன்னது என்ன தெரியுமா? புருஷனை விட்டுவிட்டு ஊழியத்திற்கு வா என்பதே! இப்போது அந்த ஸ்திரி ஒரே பிடிவாதமாக விவாகரத்து செய்ய வேண்டுமென்று நிற்கிறாள். தேவன் இணைத்ததை மனுஷன் பிரித்துவிட்டான். இதுதான் இன்றைய தீர்க்க தரிசனங்கள்.

அல்லது பாம்பைக் காட்டுகிறார், பல்லியைக் காட்டுகிறார், தேளைக் காட்டுகிறார் என்று பயப்படும்படியான சில ஜந்துக்களைச் சொல்லி அதற்குச் சில வியாக்கியானங்களையும் சொல்லி விசுவாசிகளைக் குழப்புவது தீர்க்க தரிசனமாகக் கருதப்படுகிறது.

அல்லது கூட்டங்களில் ஒரு சில பெயர்களைச் சொல்லுவதும் சில வியாதிகளின் பெயர்களைச் சொல்வதும் தீர்க்க தரிசனமாகக் கருதப்படுகிறது. இவைகள் யாவும் தீர்க்க தரிசன வரம் அல்ல என்பது தெளிவு. ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கின்படி போதிக்க வேண்டும் என்பது வேதம்.

உங்களுக்குள்ளே ஒரு தீர்க்க தரிசியாகிலும் சொப்பனக்காரனாகிலும் எழும்பி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும் அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத் தீர்க்க தரிசியாகிலும் அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிற வகைகளைக் கேளாதிருப்பீர்களாக. கர்த்தர் உங்களுக்கு விதித்த வழியை விட்டு உங்களை விலக்கும்படி அவர்கள் அற்புத அடையாளங்களைச் செய்யக்கூடும். தேவனுடைய சித்தத்திற்குப் பரிபூரணமாக ஒப்புக் கொடாமல் அதே சமயத்தில் வியாதிகளைக் கர்த்தருடைய நாமத்தில் குணப்படுத்தி, பிசாசுகளைத் துரத்தி, தீர்க்க தரிசனம் உரைத்த ஊழியர்களைப் பார்த்து, ''அக்கிரம

செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் உங்களை நான் அறியேன்'' என்று இயேசு சொன்னார்.

(மத்தேயு 7:21-23)

கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டே பாகால்களின் ஆவியைக் கொண்டு தீர்க்க தரிசனம் சொல்லிப் பேரும் புகழும் பணமும் பெறுகின்றவர்கள் உண்டு. கள்ளத் தீர்க்க தரிசனங்கள் நிறைந்துபோன காலம் இது. ஏரேமியா சொல்லுவதைக் கவனியுங்கள்.

'அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி, தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக் கொண்டு பொயாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை. அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை. அவர்களோடே பேசினதுமில்லை. அவர்கள் கள்ளத் தரிசனத்தையும் கள்ள சகுனத்தையும் இல்லாத விசேஷத்தையும் தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே உங்களுக்கு தீர்க்க தரிசனமாக சொல்லுகிறார்கள்.'' (எரேமியா 14:14).

உங்களுக்குத் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள். அவர்கள் உங்களை வீண் பெருமை கொள்ளும்படிச் செய்கிறார்கள். கர்த்தருடைய வாக்கையல்ல; தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள். என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 23:16).

''ஒன்றும் தரிசியாதிருந்தும் தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்க தரிசிகளுக்கு ஐயோ'' (எசேக்கியேல் 13:3).

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள். அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (மத்தேயு 7:15).

இஸ்ரவேலே, உன் தீர்க்கதரிசிகள் வனாந்தரங்களிலுள்ள நரிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் (எசேக்கியேல் *13:14*).

ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மாற்கு *13:22*).

இவையல்லாத இன்னும் அநேக வேதவசனங்கள் ஓசியா, மீகா, செப்பனியா, சகரியா ஆகிய நிருபங்களிலும் உண்டு.

தேவனுடைய ஆவியானவர் சபைக்குப் பக்தி விருத்தியும் புத்தியும் ஆறுதலும் உண்டாக்கத்தக்கதாக ஒரு மனுஷன் மூலமாகத் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார். தீர்க்கதரிசன ஆவியின் வரத்தையுடையவன் கர்த்தர் உரைக்கும்பொழுது தன் நிலையை மறந்து முழுவதும் ஆவிக்குள்ளாகி யாருக்கும் விளங்காத பாஷையில் பேசுகிறான். அதே சமயத்தில் அவனேயாகிலும் அல்லது சபையில் வியாக்கியான ஆவியின் வரத்தைப் பெற்ற வேறொருவனாகிலும், பேசிய பாஷைக்கு அர்த்தம் சொல்லுகிறான். அப்படிச் சொல்லும் போது, விளங்காத பாஷையில் பேசிய நேரத்திற்கும் அர்த்தம் சொன்ன நேரத்திற்கும் காலம் சரியாய் இருக்கும். தவிர அர்த்தம் சொல்லுகிறவன் முக்காமல் முனகாமல் ம்-ம்-ம் என்று இழுக்காமல் சரளமாகத் தங்கு தடையில்லாமல் அர்த்தம் சொல்லுவான். அப்படிச் சொல்லும் போது சபையார் உணர்த்தப்படுவார்கள். எச்சரிக்கை பெறுவார்கள் அல்லது ஆறுதல் அடைவார்கள்.

சபையில் அங்கம் வகிக்காமலும் அல்லது தனக்கென்று சபையில்லாமலும் இருக்கிற சிலர் தங்கள் வீடுகளிலோ அல்லது தனிக் கூட்டங்களோ நடத்தித் தங்களுக்கு அப்படிப்பட்ட வரங்கள் இருக்கிறதாகக் காட்டிக் கொள்வார்கள். சபைக்குத் ''தீர்க்கதரிசிகள்'' என்ற ஊழியர்களைக் கர்த்தர்

ஏற்படுத்தினாரேயன்றி சபைக்கு வெளியே தங்கள் வீடுகளிலே தனிப்பட்ட ஊழியம் செய்வதற்கல்ல. இப்படித் தனியே செய்கிறவர்கள் மேய்ப்பனுக்கு அடங்க மனமில்லாதவர்கள். சபை உபதேசத்திற்கு கீழ்படியாதவர்கள். தங்களைப் பெரிய ஆளாகக் கருதுபவர்கள். இழிவான ஆதாயத்திற்காக ஊழியம் செய்பவர்கள்.

விசுவாசிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இவரிடத்தில் இந்த வரம் இருக்கிறது. அவரிடத்தில் அந்த வரம் இருக்கிறது என்று சபையை விட்டு அங்கும் இங்கும் ஓடக் கூடாது. இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளிடம் ''நீங்கள் ஏன் ஒரு சபை நடத்தக் கூடாது? அல்லது சபையில் சேர்ந்து ஊழியம் செய்யக் கூடாது?'' என்று கேட்டுப் பாருங்கள். அவர்கள் தருகிற பதில்கள் வினோதமாக இருக்கும். வரங்கள் யாவும் சபைக்கும் சபையின் ஊழியர்களுக்கும் விசுவாசிகளுக்கும் ஆண்டவர் தருகிறார். சரியான சபை உபதேசம் அற்ற எந்த ஸ்தாபனமும் எந்த ஊழியரும் வேத வசனத்திற்குப் புறம்பானவர்கள். ஆவியானவர் சபைக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்.

தரிசனம் வேறு தீர்க்கதரிசனம் வேறு. சொப்பனம் வேறு. சொப்பனம் பார்த்துவிட்டு தரிசனம் பார்த்தேன் என்று சொல்லக் கூடாது. எல்லா சொப்பனங்களுக்கும் அர்த்தம் கேட்டு அலையக் கூடாது. தொல்லையின் திரட்சியினாலும் மனதின் ஆசைகளினாலும் கூட சொப்பனம் வரும். ஒரு சில சொப்பனங்கள் மட்டுமே அர்த்தமுள்ளவைகள். அது பசுமையாக மனதில் நிற்கும். வரக்கூடிய சம்பவங்களுக்கு மாதிரியாகவும் இருக்கும். தரிசனம் என்பது, நமது கண்களுக்குமுன் இருக்கிற உலகப் பொருள் யாவும் மறைந்து தேவன் காட்டும் காட்சிகள் மட்டும் வெளிப்படும். இவைகள் யாவும் சொந்த வாழ்க்கைக்குப் பிரயோசனமானவைகள், சிலருக்கு இது ஒரு வியாதியாகவே போய் விட்டது. நித்திரை செய்தால் சொப்பனம், கண்களை மூடினால் தரிசனம், வாயைத் திறந்தால் தீர்க்கதரிசனம் என்பது போல எதற்கெடுத்தாலும் இவைகளையே கதைப்பார்கள்.

என் கையை ஒருவர் பிடிப்பதுபோல் சொப்பனங் கண்டேன் என்றார் ஒருவர். அதற்கு விளக்கம் கேட்டார். ஒருவேளை அவர் போலீசால் தேடப்படுகிறவராயிருக்க லாம் அல்லது வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டிருக்கலாம். அதினால் அவர் கையை யாரோ பிடிப்பது போன்ற சொப்பனம் வந்திருக்கும் என் றேன். மனிதர் என்னை இரண்டு வார்த்தை சொல்லிவிட்டுப் போய்விட்டார். இதே மனிதர் இதே சொப்பனத்தை வேறொருவரிடம் கூற, அவர் "விரும்பும் பெண் உங்கள் கையைப் பிடிக்கிறாள்" என்று விளக்கம் தந்திருக்கிறார். மனிதருக்கு ரொம்ப சந்தோஷம். அந்த ஊழியரை வாழ்த்திக் காணிக்கையும் கொடுத்துவிட்டுச் சென்று, தான் விரும்பும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். ஏற்கனவே இருந்த முதல் மனைவியை விவாகரத்து செய்துவிட்டார். காரணம் கேட்க, கர்த்தர் சொப்பனத்தில் காட்டினார். So and So ஊழியர் அதற்கு விளக்கம் சொன்னார் என்கிறார்.

அதேபோலத் தரிசனங்கள்: புலி பாய்ந்து வந்தது, தவளை தத்திதத்தி வந்தது. பாம்பு நெளிந்து நெளிந்து போயிற்று என்று தரிசனம் கண்டவர்கள் சொல்லுவார்கள். இதில் என்ன அதிசயப்பட இருக்கிறது! புலி பாய்ந்துதான் வரும். பின்னே ஆடிக்கொண்டா வரும்? தவளை தத்தித் தான் போகும். பாம்பு நெளிந்துதான் போகும். இதைவிட மிருகக்காட்சி சாலைக்குப் போனால் இன்னும் ஏராளமான மிருகங்கள், பறவைகள், ஊறும் பிராணிகள் எல்லாம் நிறையப் பார்க்கலாம். இதைவிட இன்னும் ஒரு படி மேலே போகிற ஊழியர்களும் விசுவாசிகளும் உண்டு. பரலோகத் திற்குள் போனேன். மோசேயைப் பார்த்தேன். தாவீது கூடப் பேசினேன். இயேசுவுடன் பளிங்கு நதிக்கரையில் உலாவி னேன். அங்கே ஒருவன் சுண்டல் விற்றுக் கொண்டிருந்தான். அவன் யாரென்று பார்த்தால் நான் சென்னைக் கடற்கரையில் உட்கார்ந்திருக்கும் போது என்னிடம் சுண்டல் விற்க வந்த என்னால் கர்த்தருக்குள் வழி நடத்தப்பட்டவன் என்றெல் லாம் சரடு விடுவார்கள். வேத புத்தகத்தை நன்றாக ஆராய்ந்து பாருங்கள். பரலோகம் இன்னும் பூர்த்தியாக

வில்லை. இயேசு மட்டும் இப்போது அங்கு இருக்கிறார். மோசே, தாவீது போன்றவர்கள் யாவரும் பரதீசில் இப்போது நித்திரையாக இருக்கிறார்கள். மத்திய வானத்தில் இயேசு வரும்போது சபை எடுக்கப்படும். அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அப்புறம் பரலோகம் திறக்கப்படும். I கொரி 15ம் அதிகாரம் I தெசலோனிக்கேயர் 4ம் அதிகாரம் எபிரேயர் 11:39,40 இவைகளையெல்லாம் வாசித்து ஆராய்ந்தால் விளங்கும்.

எனவே, விசுவாசிகளே! தீர்க்கதரிசனம் என்றால் என்ன என்பதை விளக்கிக் கொள்ளுங்கள். தேவ சத்தியத்திற்குச் செவி கொடுத்து, உபதேச சட்டங்களுக்கு மனப்பூர்வமாக கீழ்படிந்து, பூரண உபதேசம் கொடுக்கப்படும் சபைகளில் அங்கமாகி, மெய்யான கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்ந்து கிறிஸ்துவுக்குள் மரிக்கவோ அல்லது சபை எடுக்கப்படும் பொழுது அதில் சேர ஆயத்தமாகவோ காத்திருங்கள். புதிய ஏற்பாட்டுச் சபைக்கு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், போதகர், மேய்ப்பர் என்ற ஐந்து ஊழியர்களைக் கர்த்தர் கொடுத்தார். இந்த ஐந்து ஊழியர்களும் சபைக்குள் இருந்து ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறார்களே தவிர சபை இல்லாமல் சபையில் ஐக்கியப்படாமல் தனியாகவோ, குழுவாகவோ, சபைப் பாகுபாடற்ற ஊழியமோ செய்ய அழைக்கப்படவில்லை. சபையைக் கெடுக்க சாத்தான் பலவிதமான தந்திரங்களை உபயோகிப்பான். விசுவாசிகளைச் சிதறடிக்க சாத்தானுக்குப் புதுப்புது வழிகளைக் கண்டுபிடிக்கத் தெரியும். விசுவாசிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஞானஸ்நானம்

4. ஞானஸ்நானம்

பழைய ஏற்பாட்டிலே சுத்திகரிப்புக்காக நீரில் ஸ்நானம் பண்ணுவதும் (லேவி *14:8*) பாவ பரிகரிப்புக்காக தீட்டுக் கழிக்கும் ஜலமாகவும் (எண் *19:9*) ஸ்நானம் எண்ணப்பட்டு வந்தது. ஞானஸ் நானம் என்றவொரு சாத்தியம் பழைய ஏற்பாட்டிலில்லை; ஆனால், நிழலாகக் காட்டப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யோவான் என்ற தீர்க்கதரிசி ஞானஸ்நானம் கொடுக்க ஆரம்பித்தபடியினால் அவர் ஸ்நானகனாகிய யோவான் என்றும் யோவான் ஸ்நானகனென்றும் அழைக்கப்பட்டார். மத்தேயு *3:1-6* வரையுள்ள வசனங்களும் இன்னும், மத்தேயு *21:25*, மாற்கு *1:4*, லூக்கா *3:12*, *7:29*, யோவான் *1:26*, *3:23*, அப்போஸ்தலர் *10:37*, *13:27*, *19:3* ஆகிய வசனங்களும் யோவான் கொடுத்த ஸ்நானம் பற்றிய விளக்கங்களைச் சொல்லுகின்றன.

இவ்வசனங்களிலிருந்து யோவான் பாவ மன்னிப்புக்கென்று மனம் திரும்புதலுக்கேற்ற ஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தார் என்றும் ஸ்நானம் கொடுத்தார் என்றும் அறிந்து கொள்ளலாம். இதிலிருந்து சுத்திகரிப்பின் முறையிலிருந்து ஒரு முன்னேற்றம் ஏற்பட்டதைக் காணலாம்.

யோவான் கொடுத்தது மனம் திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம். அப்படியானால் இயேசு மனம் திரும்ப வேண்டுமா என்ற கேள்வியும் எழும்புகிறது.

இயேசு இந்த யோவானிடம் ஸ்நானம் பெற வந்த போது, யோவான் தடை செய்ததும் இயேசு இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்ற வேண்டியது நமக்கு அவசியம் என்று தன்னை விசுவாசிக்கிற அனைவரையும் இதற்குள் அடக்கி விட்டதையும் மத்தேயு *13:3-16*, மாற்கு *1:9*, லூக்கா *3:21* ஆகிய வசனங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

எனவே, ஞானஸ்நானம் என்பது தேவ நீதி என்று காணலாம்.

ஆயினும், இயேசு மாம்சத்திலிருந்த காலங்களில் ஒருவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. இயேசு ஞானஸ்நானம் கொடுத்தார் என்று யோவான் *3:22,26, 4:1* ஆகிய வசனங்கள் காட்டினாலும், 4-ம் அதிகாரம் 3-ம் வசனத்தில் இயேசு தாமே ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள் என்ற விளக்கத்தினால் இயேசு ஞானஸ்நானம் கொடுக்கவில்லையென்று அறிந்து கொள்ளலாம். யோவான் ஸ்நானகரும் இயேசு பரிசுத்த ஆவியினாலும் அக்னியாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்றே சொல்லி வந்தார்.

இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து நாற்பது நாளளவும் காணப்பட்டுப் பின்பு பரமேறிச் செல்கையில், தம்மால், குறிக்கப்பட்ட கலிலேயா மலைக்கு வந்திருந்த தமது பதினொரு சீஷரையும் பார்த்து, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் பறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்'' என்றார் (மத்தேயு *28:18-20*). சீஷர்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவுக்குள் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். பரிசேயர்கள் யோவானை நோக்கி, நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல தீர்க்கதரிசியானவருமல்ல என்றால் ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்று கேட்டபோது, யோவான் அதற்குக் கொடுத்த பதில் இயேசுவைப் பற்றியதாகும்.

இயேசு ஜனங்களுக்குக் கொடுக்கப் போகும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பற்றியே யோவான் பேசி

னார். (யோவான் 1:24-34) இயேசு ஒரு முறை தேவாலயத்தில் வந்து உபதேசம் பண்ணுகையில் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்து நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? என்று கேட்டார்கள். அதற்கு இயேசு கொடுத்த பதில் மத்தேயு 21:23-27 வரையிலுள்ள வசனங்களில் உள்ளது. எனவே, தம்மிடம் இப்படிக் கேட்ட இப்பரிசேயரும் வேதபாரகரும் ஆசாரியரும் மூப்பரும் இதே கேள்வியைத் தமது சீஷர்களிடத்திலும் கேட்பார்கள் என்று எண்ணிய இயேசு அப்படிச் சொன்னார். யாராவது எந்த அதிகாரத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறீர்கள்? இந்த அதிகாரத்தை உங்களுக்குக் கொடுத்தது யார்? என்று கேட்டால், இயேசு கிறிஸ்துவின் பெயரை உபயோகித்துக் கொள்ளும்படியான அதிகாரத்தையே இயேசு தமது சீடர்களுக்குக் கொடுத்தார். சில சமயங்களில் நாம் யாரையாவது அனுப்பி ஒரு காரியம் செய்யச் சொல்லும்போது அவர் தயங்கினால் என் பேரைச் சொல் என்கிறோமல்லவா? அதுபோல. இப்படி யாராவது தமது சீஷர்களைப் பார்த்துக் கேள்வி கேட்டால் இயேசு தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். இயேசுவின் நாமத்திலே என்பது இயேசு எங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தினாலே என்பது விளங்கும்.

இயேசுவின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்த சம்பவம் அப்போஸ்தலர் 8:15 (கொடுத்தவர் பிலிப்பு) 19:5 (கொடுத்தவர் பவுல்) ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான காரணங்களையும் தெரிந்து கொள்வது நல்லது. இயேசுக் கிறிஸ்து தம்முடைய பதினொரு சீஷர்களுக்கும் கலிலேயா மலையில் அதிகாரம் கொடுத்தார். அது தவிர எனக்குப் பின் வருகிறவர் ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுப்பார் என்று யோவான் இயேசுவைக் குறித்துச் சொல்லியிருந்தார். இந்நிலையில் சீஷர் பெருகி கிரேக்கர்கள் எபிரேயர்களுக்கு விரோதமாக முணுமுணுத்தபோது, அப்போஸ்தலர்கள் பந்தி விசாரிப்புச் செய்ய ஏழு பேர்களை நியமித்தனர். அவர்களில் ஒருவரான

பிலிப்பு என்பவர், ஸ்தேவான் கொலை செய்யப்பட்ட பொழுது சிதறியோடி சமாரியாவில் சுவிசேஷம் பிரசங்கித்தார். இவர் இயேசுவின் அதிகாரம் பெறாத சீடர். ஆயினும் விசுவாசியாயிருந்த படியினாலும், சிதறியடிக்கப்பட்ட நிலையில் அப்போஸ்தலர்கள் இல்லாதபடியினாலும் இவரே ஞானஸ்நானம் கொடுக்கும் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு இயேசுவின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்தார். சமாரியாவில் நடப்பதைக் கேள்விப்பட்டு பேதுருவும், யோவானும் அங்கு வந்தனர். அங்குள்ள ஜனங்கள் இயேசுவின் நாமத்திலே வெறும் ஞானஸ்நானம் மட்டுமே பெற்றிருப்பதைக் கண்டார்கள். யோவான் ஸ்நானகன் ஜலத்தினால் மட்டுமே ஞானஸ்நானம் கொடுத்தார். ஆனால், அதற்குப் பின் வருகிறவரோ பரிசுத்த ஆவியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொல்லியிருந்தார்.

அதன்படி இயேசு பரமேறிப் போகும்போது இந்த அதிகாரத்தைத் தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்து விட்டுப் போனார். அப்போஸ்தலர் இயேசு என்ற நாமத்தின் அதிகாரத்தினால் (இயேசு சொன்னபடி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் பெயரில் ஞானஸ்நானம் கொடுத்தபோது) ஜனங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டனர். பிலிப்பு இந்த அதிகாரத்தைப் பெறாத பந்தி விசாரிப்புக் காரனாயிருந்த படியினால் அவனிடம் இயேசு கொடுத்த அதிகாரத்தின்படி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டாலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறாமலிருந்தனர். பேதுருவும், யோவானும் இதைக் கண்டபோது அப்படிப் பட்டவர்கள் மீது கைகளை வைக்க அவர்களும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றனர். மாயவித்தைக்காரனான சீமோன் என்பவன் அதிகாரத்தை விலைக்குக் கேட்ட சம்பவமும் அதன் பின்பு காணலாம் (அப்.8:1-19).

அதுபோலவே எபேசுவில் சீஷராயிருந்த சிலரிடம் பவுல் பரிசுத்த ஆவியைக் குறித்துக் கேட்டபோது அவர்கள் அப்படிக் கேள்விப்பட்டதேயில்லை என்றனர். உடனே பவுல் அப்படியானால் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்

என்று கேட்டார். அதற்கு அவர்கள் யோவான் கொடுத்த (ஜல) ஞானஸ்நானம் மட்டுமே பெற்றோம் என்றனர். இது மனம் திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் மட்டுமே என் பதை பவுல் விளக்கி, இயேசு அப்போஸ்தலருக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி ஞானஸ்நானம் பெற்றனர். பவுல் கைகளை வைத்தபோது அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் பெற்றனர் (அப்.19:1-6).

எனவே, இயேசுவின் நாமத்தினால் என்பது யோவான் ஸ்நானகனுடைய ஞானஸ்நானத்தைக் காட்டிலும் சிறந்த பரிசுத்தாவியின் ஸ்நானமாகும். இது அப்போஸ்தலர்களுக் குக் கொடுக்கப்பட்ட அதிகாரமாயிருந்த படியினாலே இவர் கள் ஸ்நானம் கொடுக்கும் போதெல்லாம் யாரும் எதிர் பேசாதபடி கேள்வி கேட்காதபடியிருக்க இயேசுவின் நாமத் தினாலே என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள்.

இயேசுவின் நாமத்தினாலே என்று சொன்ன இரண்டு இடங்களில் ஒன்று சமாரியா (புற ஜாதிகள் உள்ள இடம்) மற்றொன்று எபேசு (விக்ரக ஆராதனையுள்ள இடம்) அப் பேஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தில் ஞானஸ்நானம் என்று வருகிற மற்ற எந்த இடத்திலும் நாமத்தைக் குறித்த எந்தவி தக் குறிப்பும் இல்லை.

கொர்நேலியு வீட்டார் ஞானஸ்நானம் எடுத்தபோது அவர்களுக்குக் கர்த்தருடைய நாமத்தினாலே பேதுரு கொடுத்தார் என்று காணலாம். கர்த்தருடைய நாமம் என்ன என்று கேட்டால்; அவருடைய நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு (ஏசாயா 9:6) என்றும், இருக்கிறவர் (யாத்.3:14) என்றும் நீதியாய் இருக்கிற கர்த்தர் (எரே. 23:6; 33:16) என்றும், வார்த்தை (வெளி. 19:13) என்றும், இம்மா னுவேல் (ஏசா 7:14) என்றும் இன்னும் ஏராளமான பெயர்க ளைச் சொல்லலாம். வேதாகமம் முழுவதிலும் கர்த்தருக்கு ஆயிரக்கணக்கான நாமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுக்கும்படி இயேசு அதிகாரம் கொடுத்தார். இதினாலேயே பவுல் கொரிந்தியருக்கு நிருபம் எழுதுகையில் அங்குள்ள பிரிவுகளைக் கண்டு 'பவுலின் நாமத்திலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?' என்று எழுதுவதையும் காணலாம் *(1 கொரி 1:13)* மேலும், என் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தேன் என்று ஒருவரும் சொல்லாதபடிக்கு நான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி உங்களில் வேறொருவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை *(1 கொரி 1:14,15)* என்கிறார். (இயேசு சொன்ன வசனங்களுக்குக் கீழ்படியாமல் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட உபதேச சட்டங்களுக்குக் கீழ்படிகிறவர்கள் கவனிக்க) இதிலிருந்து யார் ஞானஸ்நானம் கொடுத்தாலும் அது இயேசுவின் நாமம் வழங்கும் அதிகாரமேயன்றி ஒரு குறிப்பிட்ட பெயருக்குட்பட்டது என்று பொருள் கொள்ள இயலாது.

மேலும், பெந்தேகொஸ்தே நாளில் பேதுரு அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியினால் நிறைந்து பிரசங்கிக்கையில்; நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றார். இதை அவர்கள் கேட்டபோது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனம் திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தாவியின் வரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்'' என்றார். *(அப்.2:36-33)*

இந்த வசனங்களையும் சற்று ஆராய்வது நல்லது.

பெந்தேகொஸ்தே நாளில் சீஷர்கள் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார்.

அங்கு கூடி வந்திருந்த பதினேழு பாஷைகள் பேசுகிற பதினேழு யூதக் கூட்டத்தினர் இவைகளைக் கண்டு பிரமித்து சந்தேகப்பட்டு இதென்னமாய் முடியுமோவென்று நிற்கையில் இதுவரைப் பயந்து கொண்டிருந்த பேதுரு, பரிசுத்தாவியின் வல்லமையினால் நிறைந்து, இஸ்ரவேலர்களாகிய யூதர்களைக் கொலைக் குற்றம் சாட்டிப் பேசினார். அதைக் கேட்ட யூதர்களின் இருதயம் குத்தப்பட்டது.

ஏனெனில், யூதர்களுக்குப் பிதாவாகிய தேவனைத் தெரியும். பரிசுத்த ஆவியையும் தெரியும். ''நான் உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரனும் குமாரத்தியுமாயிருக்கிறீர்கள்'' என்று பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேலருக்குப் பிதாவாக இருந்தார். I நாளாகமம் 29:10; சங்கீதம் 68:5; உபாகமம் 32:6; மல்கியா 2:10 ஆகிய வசனங்களில் தேவனைப் பிதாவாகக் கொண்ட ஜனமாக இவர்கள் இருந்தனர் என்பதை அறிந்து கொள்ளலாம். அதுபோலவே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்தும் பழைய ஏற்பட்டு ஜனங்களாகிய இஸ்ரவேலர்கள் அறிந்திருந்தனர். நியாயாதிபதிகள், இராஜாக்கள், தீர்க்கதரிசிகள், ஆசாரியர், லேவியர் போன்றோர் இப்படிப்பட்ட அபிஷேகம் பெற்றிருந்தனர். எனவே, இஸ்ரவேலர் அனைவரும் பிதாவையும் பரிசுத்த ஆவியையும் அறிந்திருந்தனர். ஆனால், இயேசுவை மேசியாவாக அறியவில்லை. மேசியாவை எதிர்பார்த்தனர்.

இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொள்ள அவர்களால் முடியவில்லை. பேதுருவும் மற்ற சீஷர்களும் மட்டுமே இயேசுவைக் கிறிஸ்து (மேசியா) என்று அறிந்திருந்தனர் என்பது மத்தேயு 16:13-17 ஆகிய வசனங்கள் மூலம் விளங்கும்.

எனவே, யோசேப்பின் மகனாகிய இவன் தன்னைத் தேவனென்று சொல்கிறானே என்ற பக்தி வைராக்கியத்தில் இஸ்ரவேலர் இயேசுவைச் சிலுவையிலறைய ஒப்புக் கொடுத்து, இந்த இரத்தப் பழியைத் தங்கள் மீதும் தங்கள்

பிள்ளைகள் மீதும் ஏற்று கொண்டார்கள். இயேசுவே மேசியா என்பதை இவர்கள் அறியவில்லை. அறிந்திருந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய மாட்டார்களே என்று (I கொரிந்தியர் *2:8*) பவுல் எழுதுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இப்போது பரிசுத்த ஆவியானவரால் இருதயம் குத்தப்பட்டபொழுது (*இந்த இரத்தப்பழி நீங்க*) நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் பிதாவையும் பரிசுத்த ஆவியானவரையும் அறிந்திருந்த படியினால்; ''எந்த இயேசுவைக் கொலை செய்து இக்கொலைபாதக பாவத்திற்குட்பட்டீர்களோ அப்பாவ மன்னிப்புக்கென்று அந்த இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தாவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று பேதுரு பதில் கூறினார். (அப்போஸ்தலர் *8:12*) கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே என்றும் அப்போஸ்தலர் *19:5*ல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே என்றும் அப்போஸ்தலர் *10:48*ல் கர்த்தருடைய நாமத்தினாலே என்றும் காணப்படுகிறது. ஆனால், அப்போஸ்தலர் *2:38*ல் இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே என்று காணப்படுகிறது.

சமாரியாவிலும் எபேசுவிலும் கொர்நேலியுவின் வீட்டிலும் பிரசங்கத்தைக் கேட்டு விசுவாசித்து சீஷர்களாக மாறினவர்களுக்கு இயேசு கொடுத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இயேசு சொன்னபடி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்திருக்க வேண்டும். அப்படி எழுதப்படவில்லையே என்று கேட்கலாம். எழுதப்படாத எத்தனையோ காரியங்களை விசுவாசிக்கிறோம். அப்போஸ்தலர்களில் பவுலைத் தவிர மற்ற எவரும் ஞானஸ்நானம் பெற்றதாக எழுதப் படவில்லை. அப்படியானால் ஞானஸ்நானம் பெறாத பேதுரு கொர்நேலியுவின் வீட்டாருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தது எப்படி? பேதுரு பெற்றிருப்பார் என்று விசுவாசிக்கிறோம். அவ்வளவுதான்.

பிதாவையும் பரிசுத்த ஆவியையும் அறிந்த யூதர்கள் இயேசுவைக் கிறிஸ்துவாக அறியவில்லை. எனவே, சிலு வையில் அறைந்து இரத்தப் பழியை ஏற்றனர். ஆனால், அவர்கள் இருதயம் குத்தப்பட்டபொழுது மனம் திரும்பி, பாவமன்னிப்புக்கென்று தாங்கள் கொலை செய்த அந்த இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலேயே ஞானஸ்நானம் பெற்றார்கள். இதிலே மனம் திரும்புதலுக்கேற்ற ஜலஸ்நா னம் (யோவான் ஸ்நானகனுடையது); பரிசுத்தாவியின் ஸ்நா னம் (யோவானுக்குப் பின் வந்தவர் அருளியது) அத்துடன் இயேசுவைக் கிறிஸ்துவாக ஏற்றுக் கொள்ளும் விசுவாசம் ஆகிய இம்மூன்றும் அடங்கும்.

புற ஜாதிகளாகிய மற்றவர்கள், காணியாட்சிக்குப் புறம் பானவர்கள், தேவனற்றவர்கள் என்று யூதர்களால் வர்ணிக் கப்பட்டவர்களுக்கோ பிதாவையும் தெரியாது, குமாரனை யும் தெரியாது. பரிசுத்த ஆவியையும் தெரியாது. எனவே, இயேசு கிறிஸ்து பரமேறிச் சென்றபோது தம்முடைய பதி னொரு சீஷர்களுக்கும் கலிலேயா மலையில் நீங்கள் புறப் பட்டு போய் சகல ஜாதிகளையும் (யூதரல்லாதவர்கள்) சீஷராக்கி, பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்'' (மத்தேயு 28:19,20) என்றார்.

இப்படியும் சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம். நியாயத் தீர்ப்பின் நாளிலே இயேசுக் கிறிஸ்துவுக்கு முன்பாக இரண்டு ஊழியக்காரர்கள் நிற்பதாக வைத்துக் கொள் வோம். ஒருவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத் திலே ஞானஸ்நானம் கொடுக்கிறவர். மற்றவர் இயேசுக் கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்கிறவர். இயேசு முதலாவது ஊழியரை நோக்கி: எப்படி ஞானஸ்நா னம் கொடுத்தீர்? என்று கேட்கிறார். அதற்கு அந்த முதலாம் ஊழியர் ஆண்டவரே! நீர் பரமேறும் போது உமது சீஷர்க ளுக்குச் சொன்னபடி பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத் திலே ஞானஸ்நானம் கொடுத்தேன் என்பார். அப்பொழுது

இயேசு; நல்லது, உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியும் என்பார். பின்பு இரண்டாவது ஊழியனை நோக்கி; எப்படி ஞானஸ்நானம் கொடுத்தீர்? என்று கேட்பார். அதற்கு அந்த இரண்டாவது ஊழியர்: இயேசுக் கிறிஸ்துவின் நாமத்திலே என்பார். அதற்கு இயேசு, நான் என்ன சொன்னேன். நீர் என்ன செய்தீர்? என்று கேட்டால், அந்த ஊழியர், இயேசுவே, பிதா என்பது நாமம் அல்ல; குமாரன் என்பது நாமம் அல்ல; பரிசுத்த ஆவியென்பது நாமம் அல்ல. இயேசுக் கிறிஸ்து என்பது உமது நாமம். அதனால் நான் இயேசுக் கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்தேன் என்பார். அதற்கு இயேசு ''இயேசு என்றால் ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றும் இம்மானுவேல் என்றால் தேவன் நம்மோடிருக்கிறார் என்றும் கிறிஸ்து என்றால் அபிஷேகிக்கப்பட்டவர் என்றும் அர்த்தம். என் அதிகாரத்தைப் பயன்படுத்த என் பெயரைப் பயன்படுத்தாமல் அந்தப் பெயரினாலே ஏன் ஞானஸ்நானம் கொடுத்தீர்?'' என்று தள்ளி விடுவாரில்லையா? இயேசு கட்டளையிட்டுச் சொன்ன காரியத்தை மனிதன் தன் மூளை அறிவினால் மாற்றலாகாது.

மேலும் அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்திலே ஞானஸ்நானம் பெற்ற சமாரியர்; எத்தியோப்பிய தேசத்து மந்திரி, தர்சு நாட்டுச் சவுலாகிய பவுல் வீதியாள், பிலிப்பு பட்டணத்து சிறைக் காவல் தலைவனும் அவனுடையவர்களும், கொரிந்து பட்டணத்து விசுவாசிகளும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர் என்று எழுதப்பட்டிருக்கிறதேயன்றி நாமத்தைக் குறித்து எவ்விதக் குறிப்பும் காணப்படவில்லை. *(அப். 8,12,13; 8:38; 9:18; 16:16; 16:33; 18:8).*

சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களிலும் ஞானஸ்நானத்தைக் குறித்து வருகின்ற வசனங்களில் நாமத்தைக் குறித்த பிரச்சினைகள் இல்லை. *(ரோமர் 6:3,4; 1 கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 3:27; கொலோசெயர் 2:12; 1 பேதுரு 3:21).*

மேலும் ஞானஸ்நானம் என்பது ஆன்மீக தத்துவங்களில் ஒன்றாகக் காட்டப்படுகிறது.

''இயேசு நமது பாவங்களுக்காக மரித்தார்.
அடக்கம் பண்ணப்பட்டார் - உயிர்த்தெழுந்தார் - தரிசனமானார்'' (கொரிந்தியர் 15:1-4).

இதுவே நமது விசுவாசப் பிரமாணமுமாகும். கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்று வேதம் சொல்லுகிறபடியினால் நமது விசுவாசத்தைக் கிரியையிலும் காட்ட வேண்டும். விசுவாசிப்பதற்குக் கிரியை வேண்டாம் கிருபை போதும். ஆனால், விசுவாசத்தைக் கிரியையில் காட்டினால் மட்டுமே விசுவாசி என்னப்பட முடியும்.

1. விசுவாசம் : இயேசு நமது பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்தார்.

கிரியை : கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலாத்தியர் 5:24, ரோமர் 6:6)

2. விசுவாசம் : இயேசு அடக்கம் பண்ணப்பட்டார்.

கிரியை : ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:4) ஞானஸ்நானத்திலே அவரேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாயும் (கொலோசெயர் 2:12)

3. விசுவாசம் : இயேசு உயிர்த்தெழுந்தார்.

கிரியை : ஞானஸ்நானத்திலே அவருடனே கூட எழுந்தவர்களாகவும் (கொலோசெயர் 2:12) அப்படியே நீங்களும்

உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள் (ரோமர் 6:11)

4. விசுவாசம் : இயேசு தரிசனமானார்

கிரியை : நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல இயேசுவைப் பிரதிபலித்துக் காட்டுங்கள். (எபேசியர் 5:1) ம॰ பட் மொழி பெயர்ப்பு

இந்த நான்கு காரியங்களையும் பவுல் அப்போஸ்தலர் சுவிசேஷம் என்று சொல்லுகிறார் (1 கொரிந்தியர் 15:1-5) மனந்திரும்புதல் இரட்சிக்கப்படுதல் ஆகியவற்றைக் குறித்த பிரசங்கங்கள் மட்டுமே சுவிசேஷம் என்று நினைக்கக் கூடாது. அத்துடன் ஞானஸ்நானம் எடுப்பதும் பரிசுத்த ஆவியைப் பெற்று தேவனுக்குகந்த வாழ்வு வாழ்வதும் சேர்த்துப் பிரசங்கிக்கப்படுதல் வேண்டும். இதுவே பூரண சுவிசேஷம் ஆகும்.

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்த பின்பு நாற்பது நாளளவும் தமது சீஷர்களுக்குக் காணப்பட்டுப் பின்பு கலிலேயாவின் ஒரு மலையிலே தம்முடைய சீஷர்களின் கண்களுக்கு முன்பாக பரலோகத்திற்கு ஏறிச் சென்றார். அப்போது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத் தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். 'அதுவுமல்லாமல், பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது

நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதி லும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாக இருப்பீர்கள்' என்றார்.

அப்படியே சீடர்களும் அப்போஸ்தலர்களும் இயேசு வின் தாயாகிய மரியாளும் இன்னும் சிலருமாக ஏறக்குறைய நூற்றிருபது பேர்கள் பெந்தேகொஸ்தே என்னும் நாள் வந்தபோது ஓரிடத்திலே ஒருமனப்பட்டு வந்திருந்தார்கள். அப்பொழுது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவி யானவர் அருளப்பட்டார். அப்போஸ்தலரில் பேதுரு மற்ற வர்களுடன் எழுந்து நின்று இயேசுவைக் குறித்தும் இயேசுக் கிறிஸ்துவின் மூலமாக உண்டாகும் இரட்சிப்பைக் குறித் தும் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்தும் சாட்சி சொன்னார். அங்கு அப்பொழுது கூடி நின்ற மக்கள் யூதரும் யூதமார்க்கத்மைந்தவருமான பதினேழு வித பாஷைகளைப் பேசுகிற மக்களாவர். பேதுரு அவர்களை நோக்கி, ''நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் இரட்சகருமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவ ரும் நிச்சயமாய் அறியக் கடவீர்கள்'' என்றார்.

இதை அவர்கள் கேட்டபோது இருதயத்திலே குத்தப் பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரை யும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனம் திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயே சுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்று புத்தி சொன்னார். பேதுருவின் வார்த்தைகளைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்ப டிப்பட்டவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அன்று முதல் இப்படியாக இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர்

தம்முடைய சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். மேற் சொன்ன சம்பவங்கள் யாவும் அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தில் முதல் இரண்டு அதிகாரங்களில் அடங்கியுள் ளன.

ஆதித்திருச்சபை என்பது அப்போஸ்தலர்களின் காலத் தில் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மூலம் வெளிப்படுத் தின உபதேச சட்டங்களின் அடிப்படையில் உண்டானதா கும். இந்த உபதேசங்கள் ஏழு ஆகும்.

1. மனம் திரும்புதல்
2. ஞானஸ்நானம்
3. பரிசுத்த ஆவியின் வரம்
4. பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை
5. அந்நோந்ய ஐக்கியம்
6. அப்பம் பிட்குதல்
7. ஜெபம் *(அப். 2:38,40,42)*

ஞானமாகிய கிறிஸ்து *(1 கொரி 1:31)* தமது வீடாகிய சபையை *(1 தீமோ 3:15)* ஏழு தூண்களினாலே சித்திரம் தீர்த்தார். *(நீதிமொழிகள் 9:1)* இந்த ஏழு பரிபூரணமான உபதேச சட்டங்களுக்குக் குறைவான அல்லது மிகையான எந்த உபதேசத்தையும் வானத்திலிருந்து ஒரு தூதன் இறங்கி வந்து உபதேசித்தாலும் அவன் சபிக்கப்பட்டவன் *(கலா 1:8)*.

இந்த ஏழு உபதேசங்களில் இரண்டாவது உபதேசமா கிய ஞானஸ்நானத்தைக் குறித்தே நாம் சிந்திக்கிறோம்.

பேதுரு அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியினாலே சத்தி யத்தை வெளிப்படுத்தியபோது அங்கிருந்த யூதரையும் யூத மார்க்கத்தமைந்தவர்களையும் நோக்கி: நீங்கள் மனந் திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயே சுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார்.

எனவே, முதலாவது, மனம் திரும்பினவர்களே ஞானஸ்நானம் பெறத் தகுதியுள்ளவர்களென்பது விளங்கும். மனம் திரும்பிய சாட்சி பெற்றவர்கள் பின்பு ஞானஸ்நானம் பெற வேண்டும். ஞானஸ்நானத்தைக் குறித்து பல விதமான கேள்விகளும் ஐயப்பாடுகளும் எழும்புகின்றன. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது பற்றி வேதாகமத்தில் எவ்வித விளக்கமும் இல்லை. சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களை தடை பண்ணாதிருங்கள் என்ற மாற்கு *10:14*ஐ வைத்து சிலர் சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது சரியென்கிறார்கள். ஆனால், அப்பகுதியில் தங்கள் பிள்ளைகளை இயேசு தொட வேண்டும் என்று கொண்டு வந்தார்களேயன்றி அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படிக் கொண்டு வரவில்லை. இயேசு அச்சிறு பிள்ளைகளை அணைத்துக் கொண்டு அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார் (மாற்கு *10:13-16*). மேலும் கிறிஸ்தவப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சிறுவயது முதற்கொண்டு விசுவாசத்திலும் விசுவாசத்திற்குள்ளும் வளர்த்து வருவதால் அப்பிள்ளைகளுக்குச் சிறு குழந்தைப் பருவத்திலேயே ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்கிறார்கள்.

வேதாகமம் சொல்லுகிறபடி விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினால் வரும் (ரோமர் *10:17*). வேத வசனத்தைக் கேட்கக் கேட்க விசுவாசம் அதிகமாகும். சிறு குழந்தைகள் வேத வசனத்தைக் கேட்டு கிரகிக்குமா? கூட்டம் நடந்து கொண்டிருக்கும் இடங்களில் கைக் குழந்தைகள் உறங்குவதும் சிறு குழந்தைகள் விளையாடுவதும் நடக்கிற காரியமாயிருக்கிறது. விசுவாசம் என்றால் என்னவென்பது வயது வந்த கிறிஸ்தவர்களுக்கே விளங்காத புதிராயிருக்கையில் சிறு குழந்தைகள் எப்படி விசுவாசிக்கும்? விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு *16:16*) என்று வேதம் சொல்கிறது. அப்படியானால் விசுவாசிக்க இயலாத

குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது அக்கு ழந்தைகளை நாமே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறோம் என்று பொருள் படவில்லையா?

அப்போஸ்தலர் 16-ம் அதிகாரத்தில் சிறைக் காவலன் வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று எழுதி இருக்கிறதே! அவனுடைய வீட்டில் குழந்தைகள் இருந்திருப்பார்கள் இல்லையா? என்று சிலர் கேட்கிறார் கள். இருந்திருப்பார்கள் என்பது யூகமே தவிர இருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. அப்படியே இருந்திருந்தாலும் அந்த இராத்திரியிலே பவுலும் சீலாவும் அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தை போதித்தார்கள் *(அப்.16:32)* என்று வாசிக்கிறோம். பகல் கூட்டங்களிலும் மாலைக் கூட்டங்களிலும் கொட்டாவி விட்டுத் தூங்குகிற பெரியவர்கள் இருக்கும்போது சிறைக் காவலன் வீட்டில் அந்த இராத்திரி வேளையில் பிள்ளைகள் வசனம் கேட்கவா உட்கார்ந்திருக்கும்! ஏதோ கொஞ்ச நேரம் சந்தடி கேட்டு எழுந்து வந்தாலும் பின்பு போய் படுத்து உறங்கியிருக்க மாட்டார்களா? (யூகம்)

இப்படி யோசித்துப் பாருங்கள். 6 மாதக் குழந்தையிலி ருந்து 18 வயது மகன் வரைக்கும் ஐந்தாறு பிள்ளைகள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் விருந்து முடிந்து சென்ற பின்பு விருந்து கொடுத்தவரிடம் இன்னார் வந்திருந்தார்களா என்று கேட்டால் அவர் என்ன சொல்லுவார்? ஆம். வந்திருந் தார்கள். குடும்பத்தோடு சேர்ந்து பிரியாணி சாப்பிட்டு விட்டுப் போனார்கள் என்பார். குடும்பத்தோடு என்னும் போது அதில் ஆறு மாதக் குழந்தையும் அடங்கும். ஆனால், அந்தக் குழந்தை பிரியாணி சாப்பிட்டிருக்குமா? இயலாது. அதுபோலவே வசனம் கேட்டு ஜீரணிக்கத் தகுதி பெற்றவர் கள் மட்டுமே விசுவாசிகள் ஆக முடியுமே தவிர சிறு குழந்தைகள் விசுவாசிக்க இயலாது.

தேவனுடைய வார்த்தை சொல்வதைக் கவனியுங்கள்.

''பிலிப்பு பிரசிங்கத்ததை அவர்கள் விசுவாசித்த போது புருஷரும் ஸ்திரிகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.'' ''சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான்'' ''இதோ தண்ணீர் இருக்கிறதே! நான் ஞானஸ்நானம் பெறத் தடையென்ன என்று மந்திரி கேட்டபோது, பிலிப்பு நீர் முழு இருதயத்தோடு விசுவாசித்தால் தடை இல்லை'' என்றான். அப்போது மந்திரி, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி ஞானஸ்நானம் பெற்றான். *(அப். 8:12,13, 36:39).*

ஜெப ஆலயத் தலைவனான கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவருடன் கர்த்தரிடத்தில் வசுவாசமுள்ளவன் ஆனான். கொரிந்தியரில் அனேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள் *(அப.18:8).*

ஆதி திருச்சபையில் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்து இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு வந்தது. கலியாணத்திற்காகவோ, கல்லறைக்காகவோ, அதிகம் உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும் என்பதற்காகவோ இத்தனை பேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் என்று பெருமை பட்டுக் கொள்வதற்காகவோ, கண்மூடித்தனமாகவோ, ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லை.

சிறு குழந்தைகள் இறந்து விட்டாலும் அது நரகம் போவதில்லை. ஏனெனில் பரலோக இராஜ்ஜியம் அப்படிப் பட்டவர்களுடையது. பாவத்தை அறிகிற அறிவு வரும் வயதுக்கு முன் மரிக்கும் எந்த பிள்ளையும் பரலோகத்திற்குரியது. ஸ்தோத்திரம் போடு, கை உயர்த்தி அல்லேலூயா சொல்லு. வசனம் ஒப்பி, கோரஸ் பாடு என்பதெல்லாம் பிள்ளைகளுக்கு நாம் கொடுக்கும் அப்பியாசமேயன்றி அப்பிள்ளைகள் உணர்ந்து செய்பவை அல்ல. யூதர்கள் ஆண் பிள்ளையானால் 40வது நாளிலும், பெண் பிள்ளையானால் 80வது நாளிலும் தேவாலயத்திற்கு எடுத்துச் சென்று பிரதிஷ்டை செய்வார்கள். ஆண் பிள்ளைக்கு எட்டாம் நாளிலே

விருத்த சேதனம் செய்வார்கள். புதிய ஏற்பாட்டு சபைக்கு விருத்த சேதனம் கிடையாது. மற்றபடி குழந்தைகளை தோவலயத்தில் வைத்து பிரதிஷ்டை செய்யலாம். நாமகரணம் சூட்டலாம். ஆனால், ஞானஸ்நானம் என்பது மனம் திரும்புதலுக்குப் பின்பு வருகிற காரியமாகையால் மனம் திரும்பாத எவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது. ஒரு குறிப்பிட்ட வயது வந்தவுடன் ஞானஸ்நானம் கொடுப்பதும் தவறு. மனம் திரும்பி இயேசுக் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் எவருக்கும் ஞானஸ்நானம் தரலாம். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது வேதாகமத்தின்படி தவறு என்று தெரிந்தும் அதை ஈடுகட்ட மற்றொரு தவறையும் செய்கிறார்கள். அது திடப்படுத்தல் என்ற ஒரு சடங்கு. இந்தச் சடங்கை நிறைவேற்றினவர்களுக்கே திருவிருந்தில் பங்கேற்கும் உரிமையுண்டு. திருமணம் ஆலயத்தில் செய்ய அனுமதியுண்டு. ஓட்டுப் போடவும் உதவுகிறது. ஆன்மீகத்திற்கு ஏதாவது பிரயோசனமுண்டா? அப்படி உண்டு என்றால் இச்சடங்கை நிறைவேற்றிய அனேக ஆண்களும் பெண்களும் ஆவிக்குரிய கூட்டங்களில் தங்கள் பாவங்களுக்காக அழுது ஒப்புக் கொடுத்து இரட்சிக்கப்படுகிறார்களே! அது ஏன்?

இயேசுக் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளரில் ஒருவன் மனம் திரும்பினானா? ஞானஸ்நானம் எடுத்தானா? அவன் பரலோகம் செல்லவில்லையா என்று சிலர் கேட்கிறார்கள். ஞானஸ்நானம் என்ற சத்தியம் சபைக்கு கொடுக்கப்பட்ட உபதேசமாகும். கள்ளன் மரிக்கும்போது திருச்சபை ஏற்படவில்லை. ஆகையால் அவன் மனம் திரும்பவும் வேண்டாம் ஞானஸ்நானம் எடுக்கவும் வேண்டாம். மேலும் பரதீசு என்பது பரலோகம் அல்ல. அது நீதிமான்களும் பரிசுத்தவான்களும் மரணத்திற்கு பின்பு வருகை வரைக்கும் இளைப்பாறுகிற இடம். ஆபிரகாமின் மடி, பாதாளம், கல்லறை, மூன்றாம் வானம் என்று மற்ற பெயர்களும் இப்பரதீசுக்கு உண்டு.

மேலும் ஞானஸ்நானம் என்பது தேவனுடைய நீதி தேவனுடைய ஆலோசனை. தேவனுடைய கட்டளை யென்று வேதம் சொல்லுகிறது.

இயேசு யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற வந்தபோது யோவான் தடை செய்தார். அப்போது இயேசு அவரைப் பார்த்து: இப்பொழுது இடம் கொடு. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கி றது என்றார் (மத்தேயு *3:13-15*). நிறைவேற்ற வேண்டிய நீதிகளில் ஞானஸ்நானமும் ஒன்றாகும். இயேசு அப்படிச் சொல்லும்போது நமக்கு ஏற்றது என்றார். எனக்கு என்று சொல்லாமல் நமக்கு என்று சொன்னதினால் அவரை விசுவா சித்துப் பின்பற்றுகிற யாவரும் இந்த நீதியை நிறைவேற்ற வேண்டிய அவசியம் என்பது விளங்கும்.

யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். பரிசே யரும், நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையை தள்ளி விட்டார்கள் (லூக்கா *7:29,30*) என்ற வசனங்களின் மூலமாக இது தேவனுடைய ஆலோசனை என்பது விளங்கும். ஆலோசனையை ஏற்றுக் கொள்ளாதவர் கள் எப்படி சீஷர்களாக இருக்க இயலும்?

நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக் கிப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்க ளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்கு கட்டளை யிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்க ளுக்கு உபதேசம் பண்ணுங்கள். (மத்தேயு *28:19,20*) என்ற வசனத்தின் மூலம் இது தேவனாகிய இயேசுக் கிறிஸ்துவி னால் கொடுக்கப்பட்ட கட்டளையென்றும் காணலாம். கட்டளைக்குக் கீழ்படியாதவன் கர்த்தருடைய சீஷனாக இருக்க இயலாது.

மேலும் மாற்கு சுவிசேஷம் முதலாம் அதிகாரம் ஐந் தாம் வசனத்தில் யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய் தங்கள் பாவங் களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. எனவே, ஞானஸ்நானம் பெறுபவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கை செய்யக்கூடிய உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியத்தை உணரலாம். சிறு குழந்தை கள் பாவ அறிக்கை செய்யுமா?

இனி, ஞானஸ்நானம் என்பதின் பொருள் என்ன வென்று பார்ப்போம். ஸ்நானம் என்ற சமஸ்கிருத வார்த் தைக்கு முழுகு என்று பொருள். தமிழில் குளி என்பதாகும். முத்துக் குளித்தல் என்றால் தண்ணீரில் முழுகி முத்து எடுத்தல் என்று பொருளாகும். முங்கு என்ற மலையாளச் சொல்லுக்கும் அதே பொருள். கிரேக்க மொழியில் எக் கியோ (Ekcheo) பிராஸ்கியோ (Proscheo) கட்டக்கியோ (Katacheo) ரின்டிஸோ (Rentizo) பாப்திஸோ (Babtizo) என் னும் வார்த்தைகள் தண்ணீருடன் சம்பந்தப்பட்டவைகள் ஆகும்.

எக்கியோ என்றால் தண்ணீரை அவிழ்த்து விடு என்றும் பிராஸ்கியோ என்றால் தண்ணீரை அனுப்பு என்றும், கட்ட கியோ என்றால் தண்ணீரை ஊற்று என்றும், ரின்டிஸோ என்றால் தண்ணீரைத் தெளி என்றும், பாப்திஸோ என்றால் தண்ணீரில் அமிழ்த்து என்றும் பொருள்படும். இதில் ஞானஸ்நானத்திற்குப் பாப்திஸோ என்ற வார்த்தையே பைபிளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கில மொழி பெயர்ப்பின் போது அது பாப்திஸம் என்றாகியது. தமிழில் மொழி பெயர்க்கப்பட்டபோது இரட்சிப்பின் அறிவைப் பெற்ற பின் இந்த ஸ்நானம் பெற வேண்டுமாதலால் ஞானம் என்கிற வார்த்தையைச் சேர்த்து ஸ்நானம் என்ற சமஸ்கிருத வார்த்தையைப் பயன்படுத்தினர். இக்கால தமிழ் மொழி பெயர்ப்புகளில் திரு முழுக்கு என்று எழுதுகிறார்கள். ஏன் முழுக வேண்டும்? என்ற கேள்வி எழுமாயின் அதற்குக் கீழ்கண்ட வேத வசனங்கள் உதவும்.

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் *6:4*).

ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின் தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். (கொலோ *2:12*).

மேற்கண்ட இரண்டு வசனங்களிலும் நமது விசுவாசப் பிரமாணப்படி இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்ற மூன்று செயல்களையும் காணலாம். கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்று அறிவோம். எனவே, இயேசு மாம்ச பாவங்களுக்காக மரித்தது போல நாமும் நமது மாம்சத்தையும் அதிலுண்டாகும் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்க வேண்டும் (கலா *5:24*) சிலுவையில் மரித்த இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணினார்கள். ஒரு கல் அறைக்குள் அச்சரீரத்தை வைத்து சரீரம் தெரியாதபடி மூடிவிட்டார்கள். நிலத்தில் குழி தோண்டி அதற்குள் சரீரத்தை வைத்து மூடிவிடுதலையும் அடக்கம் என்கிறோம். மண்ணுக்குள் சரீரம் அடங்கி விடுவதினால் அடக்கம் என்கிறோம். அதுபோலவே பாவத்திற்குச் செத்த மாம்ச சரீரத்தைத் தண்ணீருக்குள் அடக்க வேண்டும். அப்படி எடுப்பதுதான் ஞானம் + ஸ்நானம்.

ஞானஸ்நானம் என்பது பெயர் சூட்டு விழா அல்ல. சபையில் சேர்வதற்கான சடங்கும் அல்ல. அது மனசாட்சியில் தேவனுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கையாகும் (1 பேதுரு *3:21*). இந்த நல்மனசாட்சியைக் காத்துக் கொள்ளவும் முடியும் விட்டுவிடவும் முடியும். அது உங்கள் மனசாட்சியைப் பொருத்தது. ஆனால், ஞானஸ்நானம் என்றாலே

பாவத்துக்கு மரித்த சரீரத்தை அடக்கம் செய்தல் என்ற ஆராதனையாகும்.

தமிழ் சுவிசேஷ லுத்தரன் சபைப் பாட்டுப் புத்தகத்தில் (14ம் பாடல் மார்ட்டின் லுத்தர் சாஸ்திரியார் அவர்களால் எழுதப்பட்டதாகும்) அதில்,

தெய்வீக நீதி யாவுக்கும்
சரி செலுத்த வந்த
இரட்சகர் இஸ்நானமும்
யோர்தானில் பெற்றனந்த
உயிர் உண்டாகுஞ் சாவுக்கே
அமிழ்ந்தார், நமக்காக
முழுக்கின் நற்பலனிலே
நமக்குப் பங்குண்டாக
இஸ்நானத்தை அமைத்தார்
தண்ணீரை மாத்திரங் கண்ணால்
கண்டாலும், விசுவாசம்
அத்தோடே கிறிஸ்தின் இரத்தத்தால்
உண்டான பாவ நாசம்
உண்டென்றும் அறிகிறது
ஆம், ஞானஸ்நானத்தாலே
ரட்சிப்பு யாவும் நமக்கு
பலிக்க ஆவியாலே
நாம் புதுச் சிருடியானோம்

என்ற முதல் சரணமும் கடைசி சரணமும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

115ம் பாடல் 7வது கவி

அது தான் மறுஜெனன
முழுக்கு, அத்தால் சாவும்
தெய்வீக கோபம் நரக
கெடியுங் கேடும் யாவும்
இல்லாத போவதன்றியே

கர்த்தாவின் ஆசீர்வாதமே
நமக் கத்தால் உண்டாகும்
(Gerhardt)

யோர்தான் நதியில் முழுகுகிற அளவுக்குத் தண்ணீர் கிடையாது. அப்படியிருக்க அங்கே எப்படி ஸ்நானம் கொடுத்திருக்க முடியும் என்று சிலர் கேட்கலாம். யோர்தான் பிரவாகித்து வரும் நாட்கள் உண்டு. தண்ணீர் குறையும் நாட்களில் தண்ணீர் மிகுதியாயுள்ள வேறு இடங்களில் ஸ்நானம் கொடுக்கப்பட்டது *(யோவான் 3:23).*

மேலும் ஆதித் திருச்சபை ஏற்பட்டபொழுது சீஷர்க ளாக்குவதற்கு கி.பி.100ம் ஆண்டில் The Didcha. (The Teaching of the Twelve Apostles) என்ற சிறு புத்தகம் அப் போஸ்தலர்களால் எழுதப்பட்டது. (இக்காலத்தி குழந் தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் இருந்த தில்லை) இப்புத்தகத்தின் ஏழாவது அதிகாரத்தில்,

> ''ஞானஸ்நானம் கொடுக்கும்போது இவ்விதமாகச் செய்ய வேண்டும். விசுவாசத்திற்கேதுவான உபதேசங் களைச் செய்த பின்பு ஓடுகின்ற நதியில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். ஓடுகிற நீர் இல்லாவிட்டால் தேங்கி நிற்கிற நீரில் கொடுக்கலாம். இந்த இரண்டும் கிடைக்காவிட்டால் அவன் உடல் முழுவதும், நனை யும்படித் தண்ணீர் ஊற்ற வேண்டும். குளிர்ந்த நீர் விருப்பமில்லையாயின் வெந்நீர் பயன்படுத்தலாம். ஞானஸ்நானம் எடுக்கிறவர் அந்த நாளுக்கு முன்பு குறைந்தபட்சம் மூன்று நாட்களாவது உபவாசிப்பது நல்லது.''

மேற்கண்ட பகுதியிலிருந்து ஆதி அப்போஸ்தல திருச்ச பையில் பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே தண்ணீரில் முழுக்கியே ஞானஸ்நானம் கொடுத்தனர் என்ப தும் ஞானஸ்நானம் எடுக்கிறவர் அதை ஏனோ தானோ

என்று எடுக்காமல் மூன்று நாட்கள் அதற்காக உபவாசித்துத் தன்னை ஆயத்தப்படுத்தியே எடுத்தார் என்பதும் விளங்கும்.

(குழந்தை மூன்று நாட்கள் உபவாசிக்குமா?)

மேலும், நாம் தேவனை நேசிக்கிறோம். ஆனால், அவர் நம்மை நேசிக்கிறார் என்பதற்கும் ஞானஸ்நானமே அடையாளமாக இருக்கிறது. தேவனுடைய குமாரனாகிய இயேசு உலகத்தில் பிறந்தபொழுது, பிதாவானவர் இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று கூறாமல் இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறிய போதே அவ்வாறு சொன்னார். தேவன் நம்மீது பிரியமாயிருக்கிறார் என்பதற்கு ஞானஸ்நானம் ஓர் அடையாளம்.

அந்நாளிலே நடந்ததை
நினைத்து கொள்வோமாக
யோர்தானில் நின்ற இயேசுவை
பிதா மகா அன்பாக
கண்ணோக்கி: "இவர் நமது
பிரிய நேரான
சுதன்" என்றார்! அவ்வாறு
நாமும் இவர்க்குள்ளான
இஸ்நானத்தால் பிரியர்
(T.E.L.C. ஞானப்பாட்டு எண் *114*, கவி *3*
எழுதியவர் மார்டின் லுத்தர்)

ஞானஸ்நானம் பெறுகையில்
பாவ அழுக்கு நீங்கும்
நமக்கு பேயின் காவலில்
இருந்த கேடுந் தீரும்
அகலும், கர்த்தாவுடைய
பிரிய மைந்தராயிருக்கிற
கதி நமக்குண்டாகும்
(T.E.L.C. ஞானப்பாட்டு எண் *115*,
எழுதியவர் P. Gerhardt)

எனவே, ஞானஸ்நானம் என்பது,

தேவனுடைய நீதி, அதை நிறைவேற்ற வேண்டும்
தேவனுடைய ஆலோசனை, அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்
தேவனுடைய கட்டளை அதற்குக் கீழ்படிய வேண்டும்

ஞானஸ்நானம் என்பது

நல் மனசாட்சியின் உடன்படிக்கை
பாவத்திற்கு மரித்த சரீரத்தை அடக்கம் செய்தல்
உயிர்த் தெழுந்த இயேசுவில் இணைக்கப்படுதல்

ஞானஸ்நானம் என்பது

நீரில் மூழ்கி எடுப்பது
பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் எடுப்பது
தேவனுக்கு சாட்சியாய் வாழ்வது

இப்படிப்பட்ட முறையில் எடுப்பதுதான் ஒரே ஞானஸ்நானமாகும். குழந்தையாய் இருந்தபோது கொடுக்கப்பட்டீர்களேயன்றி நீங்கள் உணர்ந்து எடுக்கவில்லை. எனவே, மனம் திரும்பி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே நீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்று கர்த்தருக்குச் சாட்சியாய் வாழுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்கள் மேல் பிரியமாயிருப்பார்.

இனி, ஞானஸ்நானத்தைக் கொடுக்கும் முறைபற்றிச் சிந்திப்பதும் நல்லது. அதற்கு முன்பு ஞானஸ்நானம் கொடுக்கத் தகுதியுடையோர் யார் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால்.... என்று பவுல் அப்போஸ்தலர் எழுதுவதிலிருந்து *(1 கொரி 5:3)* தனக்கு அனுபவமில்லாமல் இக்காரியங்களில் ஈடுபடுவது நல்லதல்ல. இரட்சிக்கப்பட்டு, சாட்சி பெற்று, முழுகி ஸ்நானம் பெற்ற எவரும்

ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்றாலும் சபைக்குத் தலைவரும் ஆத்துமாக்களின் மீது பொறுப்பும் பாரமும் உள்ளவராக சபைப் போதகர் இருப்பதினால் அவரே ஞானஸ்நானம் கொடுப்பது நல்லது. பந்தி விசாரிப்புக்காரர்களாகிய ஏழு பேர்களில் ஒருவர் பிலிப்பு. இவருக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற கன்னிகைகளாகிய நான்கு குமாரத்திகள் இருந்தார்கள். இவர் போதகர் அல்ல. மேய்ப்பரும் அல்ல. ஆனால், எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் *(அப். 6:5; 21:8; 9:8, 35-39)* இதிலிருந்து திருமணமான குடும்பத் தலைவரும் ஞானஸ்நானம் தரலாம் என்பது விளங்கும்.

மேலும், ஞானஸ்நானம் கொடுக்கும் போது எடுக்கிறவரும் கொடுக்கிறவருமாகிய இருவரும் நீருக்கள் இறங்க வேண்டும் *(அப்.8:38)* கொடுக்கிறவர் எடுக்கிறவரிடத்தில் விசுவாசத்திற்கேதுவான கேள்விகளைக் கேட்ட பின்பு அவருடைய வாயின் அறிக்கையைக் கொண்டும் இயேசு தனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படியும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவருடைய உடலை முழுவதும் நீருக்குள் அமிழ்த்திப் புதைத்துப் பின்பு அவரை எழுந்திருக்கச் செய்து ஜெபத்துடன் அனுப்ப வேண்டும். சிலர் பிதா என்று சொல்லி ஒரு முழுக்கும் குமாரன் என்று சொல்லி ஒரு முழுக்கும் பரிசுத்த ஆவி என்று சொல்லி ஒரு முழுக்குமாக மொத்தம் மூன்று முழுக்குப் போட வைக்கிறார்கள். இது தவறு, பிதா குமாரன் பரிசுத்த ஆவியென்பவர் ஒரே தேவன். மூன்று கிரியைகள், மேலும் மரிக்கிறவர் ஒரே தரம் மரித்து அடக்கம் பண்ணப்படுவார். மூன்று முறை மரித்து மூன்று முறை அடக்கம் பண்ணப்படுவதில்லை. எனவே, திரியேக தெய்வத்தின் அருளை ஏற்றுக் கொண்ட பின் பாவத்திற்கு மரித்து அடக்கம் பண்ணப்படுவதற்கு அடையாளமாகத் தண்ணீரில் முழுகி உயிர்த்தெழுந்த இயேசுவுடன் இணைக்கப்பட நீருக்குள்ளிருந்து வெளியேறி புதிதான ஜீவனுள்ளவராக நடந்து கொள்ளும் உடன்படிக்கையே இந்த ஒரே ஞானஸ்நானமாகும்.

இது வரையிலும் இப்படிப்பட்ட முறையில் நீங்கள் ஞானஸ்நானம் எடுக்காமலிருந்தால் தயவுசெய்து ஓடிப் போய் அப்படிப்பட்ட ஞானஸ்நானம் கொடுக்கிற நல்ல போதகர் ஒருவரைப் பிடித்துப் பெற்றுக் கொண்டு மாறுபாடுள்ள இந்த சடங்காச்சாரச் சபைகளை விட்டுப் பிரிந்து மனம் திரும்புதல், ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், மாறுபட்ட வாழ்க்கை, அப்படிப்பட்டவர்களுடன் ஐக்கியம். அப்பம் பிடுதல், ஜெபம் செய்தல் ஆகியவைகளை உபதேசிக்கும் ஆவிக்குரிய சபை ஒன்றில் இணைந்து ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் வருகைக்கு உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஆவியானவர் சபைக்குச் சொன்னதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன். கண்ணுள்ளவன் பைபிளில் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் வசனங்கள் 38, 40, 42, 47 ஆகியவைகளைப் பார்க்கக் கடவன். படிக்க அறிவுள்ளவன் அவைகளை வாசிக்கக் கடவன்; உணர்வுள்ளவன் சிந்தித்துச் செயல்படக் கடவன்.

கர்த்தர் சீக்கிரம் வருகிறார்
ஆமென்

கடைசி கால விசுவாசம்

5. கடைசி கால விசுவாசம்

அன்புக்குரியவர்களே உங்களுக்கும் எங்களுக்கும் கிடைத்துள்ள மீட்பைக் குறித்து எழுத மிக ஆவலாயிருந்தேன். எக்காலத்துக்கும் நிலைத்திருக்கும்படி இறை மக்களுக்கு அன்று அருளப்பட்ட விசுவாசத்திற்காகப் போராடும்படி உங்களை ஊக்குவிக்க இதை எழுதும் தேவை ஏற்பட்டது. ஏனெனில் திருட்டுத்தனமாக சிலர் உங்கள் நடுவில் புகுந்துள்ளனர் (*யூதா. 3,4*).

நீ கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு. (II *தீமோ 1:13*).

உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு சீர்கேடான வீண் பேச்சுக்களுக்கும் ஞானமென்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு (I *தீமோ 6:20*).

மனுஷகுமாரன் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ?

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும் தேவ பக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக் கொள்ளாமல் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவர்கள் இக்காலங்களில் தோன்றிக் கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சகத்திற்குட்படுத்தி விசுவாசத்தைவிட்டு விலகி நிற்கத்தக்கதாகப் போதித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட நூதன சீஷர்கள் விரிக்கும் வலையில் உண்மையான விசுவாசிகள் விழுந்துவிடாமல் எச்சரிக்கையுடன் இருக்கவே எழுதப்படுகிறது.

தேவன் தமது விசுவாசிகளுக்குக் கொடுக்கும் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் விசுவாசத்தினால் மட்டுமே பெற முடியும். இரட்சிப்பு பரிசுத்த ஆவியின் அபிஷேகம். தெய்வீகப் பாதுகாப்பு, சரீரசுகம், சரீரப் பிரகாரமான வாழ்க்கைக்குரிய தேவைகள், சுதந்தரிப்பதற்குரிய வாக்குத் தத்தங்கள், விசுவாசத்தினால் பெற வேண்டியவைகளாகும். இவைகள் யாவுமே தேவனுடைய கிருபையினாலே அருளப்படுபவைகள்.

விசுவாசிகள் விசுவாசத்தில் வல்லவர்களாக இருக்க வேண்டியது அவசியம். விசுவாசத்தைக் குலைத்து போடும் காரியங்களிலிருந்து விசுவாசிகள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டியது அவசியம். விசுவாசமானது ஜெபத்தினாலும் தேவனுடைய வசனங்களை அதிகமாக வாசிப்பதினாலும் உண்டாகும். வெற்றியான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு விசுவாசமே மூலகாரணம்.

வஞ்சிக்கிற ஆவிகளுடையவர்கள் வஞ்சகமான போதனைகளினால் விசுவாசக் கப்பல்களைக் கவிழ்த்துவிட்டு விடுவார்கள். இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும் இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கேயொழிய மற்றொன்றுக்கும் பிரயோசனப்படாது.

ஆவியானவர் முதன் முறையாக அருளப்பட்டபோது, திருச்சபை உண்டாயிற்று. அப்பொழுது ஆவியானவர் பேதுரு மூலமாக ஏழு உபதேசங்களைக் கொடுத்தார். அவை, மனம் திரும்புதல், பாவமன்னிப்புக்கென்ற ஸ்நானம் பரிசுத்த ஆவியின் அபிஷேகம், மாறுபாடான சந்ததியை விட்டுப் பிரிந்து வாழ்தல், அப்படிப்பட்டவர்களுடன் அந்நியோன்ய ஐக்கியம் கொள்ளுதல், அப்பம் பிடுதல், ஜெபம் பண்ணுதல் ஆகியவைகளே. இப்படிப்பட்ட வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் அந்த நாளில் மூவாயிரம் பேர்கள் ஸ்நானம் பெற்று சபையில் சேர்ந்தனர் (அப்போஸ்

தலர் 2:38-47) இந்த சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவன் என்று வேதம் சொல்லுகிறது (கலாத்தியர் 1:6-9).

யேகோவா சாட்சிள், ஏழாம் நாள் சபை, இயேசுவின் நாமத்தில் ஸ்நானம் கொடுக்கிற சபை, நேர்நிலை அறிக்கை (Positive confession) பொருளாதார அபிவிருத்தி (Prosperity) நடனத்துடன் ஆராதித்தல், ஆவியில் விழத் தள்ளுதல், ஆவியில் சிரித்தல், ஆவியில் குரைத்தல், தெய்வீக சுகம் போன்றவைகளை மட்டும் மிகைப்படுத்தி கிருபையையும் விசுவாசத்தையும் இரண்டாம் நிலைக்குத் தள்ளி விடுகிறார்கள்.

ஆதி அப்போஸ்தலர்களின் காலத்தில் சபை ஆரம்பிக்கப்பட்ட பொழுதிலிருந்தே வேதாகமச் சத்தியங்களைக் குறித்த மாறுபட்ட கருத்துக்களைப் பலர் பரப்பினர். இவைகளைக் குறித்துப பவுல், பேதுரு, யோவான், யூதா ஆகிய அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபங்களில் எச்சரிக்கை விடுத்திருப்பது கவனிக்கத்தக்கது. அதைத் தொடர்ந்து சபை சரித்திரம் முழுவதிலும் பல முக்கியமான வேதாகமச் சத்தியங்களைத் தங்கள் சுய ஞானத்தில் தோன்றியவைகளுடன் ஒப்பிட்டுக் கர்த்தர் வெளிப்படுத்தினார் என்று போதிக்கப் பலர் துணிவு கொண்டனர். இப்படிப்பட்டவர்களில் சிலர் வேதாகம ஆசிரியர்கள். கிறிஸ்து இயேசுவின் ஆரோக்கியமான உபதேசச் சட்டங்களுக்கு மீறி நடந்து களங்கம் ஏற்படுத்தியவர்கள்.

இவைகளில் ஒன்று **நேர் நிலை அறிக்கை எதிர்மறை அறிக்கை** என்னும் பதங்களுடன் கூடியது. அறிக்கை என்னும் வார்த்தை வேதாகமத்தில் வருகின்றது. பாவங்களை அறிக்கையிட வேணஅடும் (I யோவான் 1:9). கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டும் (மத்தேயு 10:32) (ரோமர் 10:9,10) நாம் செய்யும் அறிக்கையை உறுதியாகக் கொண்டிருக்க வேண்டும் (எபி.4:14; 10:23). ஆனால், நேர்நிலை அறிக்கை (Positive Confession) என்னும் பதம் வேத வசனத்திற்கு முற்றிலும் முரணானது.

அறிக்கை என்னும் சொல்லுக்கு அகராதியில் (Dictionary) சொல்லப்பட்டிருக்கும் விளக்கம் என்னவெனில் ஒப்புக் கொள், தானாக ஏற்றுக் கொள், நம்பிக்கையின் ஏற்பைத் தெரிவி என்பவைகளே. நேர்நிலை அறிக்கை உபதேசத்தார் ஒப்புக் கொடாமல் இந்த அகராதியில் கொடுக்கப் பட்டிருக்கும் பொருளையே சார்ந்து நிற்கிறார்கள்.

நேர்நிலை அறிக்கை உபதேசத்தார் இதனிலும் ஒருபடி கடந்து இப்பொருளை நேர்நிலை, எதிர்மறை என்று இரண்டு பாகங்களாகவும் பிரிக்கின்றனர்.

பாவம், நோய், தரித்திரம் மற்றும் விரும்பத்தகாத சூழ்நிலைகளை ஒப்புக் கொள்ளுதல் எதிர்மறைப் போக்கு எனவும், மனதுக்கு உகந்த சூழ்நிலைகளை ஒப்புக் கொள்ளுதல் அல்லது உரிமை கொள்ளுதல் நேர்நிலை அறிக்கை எனவும் விளக்கம் கூறுகின்றனர். இவர்கள் தங்கள் உபதேசங்களை வலியுறுத்துவதற்காகப் பலவித வாதங்களையும் விவாதங்களையும் தத்துவங்களையும் எழுதிக் குவித்தாலும் முடிவில் எழும் கருத்து என்னவெனில் எதிர்மறை அறிக்கைகளைத் தவிர்ப்பதன் மூலம் விரும்பத்தகாதவைகளைத் தவிர்க்க முடியும். நேர்நிலை அறிக்கைகளைச் செய்வதின் மூலம் விரும்பும் நன்மைகளை அனுபவிக்க முடியும் என்பதே! இன்னும் விளங்கச் சொல்ல வேண்டுமானால்,

உதாரணமாக ஒருவருக்கு வியாதி இருந்தால் அவர் தனக்கு வியாதி என்று சொல்லக்கூடாது. அதற்கு பதில் வியாதி இல்லையென்று சொல்ல வேண்டும். ஒருவருக்கு பத்தாயிரம் ரூபாய் பணம் வேண்டுமென்றால் பத்தாயிரம் கிடைத்துவிட்டது என்று அறிக்கை செய்து சந்தோஷமாயிருக்க வேண்டும். இதுதான் எதிர்மறை, நேர்நிலை அறிக்கையின் இலட்சணம்! பணம் உடனே கிடைக்காவிட்டாலும் அறிக்கையிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என அறிவுறுத்தப் படுகின்றனர். விசுவாசிகள் மற்ற எல்லாரைப் பார்க்கிலும் எதிலும் சிறப்பானவைகளையே பெற்றிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பது இவர்க

ளின் போதனை. உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க விரும்புகிறேன் என்ற (III யோவான் 3) வசனம் இவர்களுக்குப் பிடிவாக்கியம்.

இவ்வசனம் எபிரேயர்களும் யூதர்களும் பொதுவாக வாழ்த்தி எழுதும் வாக்கியமாகும். ஆனால், இது இவர்களின் உபதேசத்திற்குப் பயன்படுகிறது. இவர்களின் உபதேசப்படி ஒருவர் பெறுவதையும் ஒருவருக்கு அமைவதையும் நிர்ணயிப்பது அவருடைய அறிக்கையேயன்றி தேவ கிருபைக்கும் இரக்கத்திற்கும் சித்தத்திற்கும் இடமேயில்லை. நேர்நிலையைப் பிரதிபலிக்கும் வார்த்தையைப் பலமுறை உச்சரிப்பதினால் விசுவாசம் எழுகிறது. அந்த விசுவாசம் அவர் விரும்பும் ஆசீர்வாதத்தை அளிக்கிறது என்பதே இவர்களின் விசுவாசம்.

இப்போதனைகள் சிலரைக் கவர்ந்து விடுவதில் ஆச்சரியம் இல்லை. அதற்கான காரணங்கள் சிலவற்றை இங்கே தருகிறேன்.

1. பிரச்சினையில்லாத வாழ்வை அது வாக்களிக்கிறது.

2. விரும்பும் காரியங்கள் நடந்திட இடம் அளிக்கிறது.

3. பொருளாதார ஆரோக்கியமான சுக வாழ்வு கிடைக்க உதவுகிறது.

பணம் தேவைப்படும் ஒருவர் அது தன்னிடம் இல்லாவிட்டாலும் இருக்கிறது என்று அறிக்கை செய்தால் அது கிடைத்துவிடும் என்பது இவர்களின் போதனை. அப்படிப் பார்த்தால் பழைய ஏற்பாட்டில் தன் மீது படையெடுத்து வந்த கூட்டத்தை எதிர்க்க தனக்கு போதிய வலிமை இல்லையென்று யோசபாத் அரசன் அறிக்கை செய்த பின்பே கர்த்தர் அவனுக்கு ஆச்சரியமான வெற்றி அளித்தார் (2 நாளாகமம் 20) தான் பெலவீனன் என்று அறிக்கை செய்த பவுல் தேவனுடைய பூரண பெலத்தைப் பெற்றார் (2 கொரிந்தியர் 12:9,10).

திரளான கூட்டத்திற்குத் தங்களால் போஜனம் அளிக்க இயலாது என்று அறிக்கை செய்த பின்பே இயேசுக் கிறிஸ்து ஐந்து அப்பம் இரண்டு மீன்களைக் கொண்டு ஐயாயிரம் பேர்களைப் போஷித்தார். தங்களுக்கு ஒரு மீனும் கிடைக்க வில்லையென்று சீடர் அறிக்கை செய்த பின்பே தேவன் அவர்களுக்குத் திரளான மீன்கள் கிடைக்கும்படி செய்தார். தங்களால் இனி படகு ஓட்ட இயலாது என்று அறிக்கை செய்த பின்பே இயேசு காற்றையும் கடலையும் அதட்டி அமைதல் உண்டாக்கினார். இவர்களெல்லாம் வேதாகமத் தில் உள்ளவர்கள். ஆகையால் தங்கள் நிலைமையை ஒத்துக் கொண்டு அதை அப்படியே அறிக்கை செய்து தேவ கிருபை பெற்றார்கள். ஆனால், நேர்நிலை அறிக்கையாளர்களோ வேதாகமத்திற்கு வெளியே உள்ளவர்கள். ஆகையால் தங் கள் பெலவீனத்தையோ வியாதியையோ அறிக்கை செய்யா மல், இல்லாவிட்டாலும் இருப்பதாகக் கற்பனை செய்து வாழ விரும்புகிறவர்கள்.

இவ்வித உபதேசத்தைக் கைக் கொண்ட ஒரு முன்னணி ஊழியர் தனக்கிருந்த வியாதி இன்னதென்று அறிந்தும் அதை ஒத்துக் கொள்ளாமல் முடிவில் மரணமடைந்து விட் டார். உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் சபையின் மூப் பர்களை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத் தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபம் பண்ணக் கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவார். அவன் பாவஞ் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக் கப்படும் (யாக்கோபு *5:14,15*) என்ற வசனம் அவிசுவாசிக ளுக்கு எழுதப்படாமல் விசுவாசிகளுக்கே எழுதப்பட்டிருக் கிறது. இதிலிருந்து விசுவாசிகளுக்கும் வியாதி வந்தால் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புப் பெற்று சொஸ்தம டைவான் என்பதை அறியலாம். மற்றபடி அதற்கேற்ற வைத்தியங்களைச் செய்து கொள்வது நல்லது. பிணியாளிக ளுக்கு வைத்தியன் தேவை என்பதை ஆண்டவரும் சொன் னார். மருந்து சாப்பிடுவது பாவம் அல்ல. மருந்து சாப்பிடா மல் இருப்பது பரிசுத்தமும் அல்ல. வியாதியே வராது, துன்பமே வராது, கஷ்டமே வராது என்பது தவறான போதனைகள் ஆகும்.

''சுவிசேஷத்தில் உங்களுக்கு விருப்பமானவை களை மட்டும் விசுவாசித்து உங்கள் விருப்பத்திற்கு மாறானதைப் புறக்கணித்தால் நீங்கள் சுவிசேஷத்தை விசுவாசியாமல் உங்களையே விசுவாசிக்கிறீர்கள்''

(St. Augustin)

எந்தக் காரியத்திலும் தேவ சித்தத்தைத் தேட வேண்டும் என்பது வேதாகமப் போதனை. ஆனால், தான் அறிக்கையிடும் எல்லாவற்றையும் ஒருவர் பெற முடியும் என்று போதிப்பது நேர்நிலை அறிக்கை. தாவீது தேவனுக்கு ஆலயம் கட்ட விரும்பினார். ஆனால், அது தேவ சித்தம் இல்லை, சாலமொன் அதைக் கட்டினான். தன் மாம்சத்திலுள்ள முள் நீங்க வேண்டும் என்று பவுல் அறிக்கையிட்டார். ஆனால், அது தேவ சித்தமில்லை. என் கிருபை உனக்குப் போதும் என்ற கிருபை பெற்றார். யூதாஸ் நான்று கொண்டு செத்த பின்பு பதினொரு சீடர்களும் பன்னிரண்டாவது சீடனுக்காகச் சீட்டுப் போட்டு மத்தியாசைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், அது தேவ சித்தமில்லை. பவுல் அந்த இடத்திற்குரியவனாகத் தெரிந்து கொள்ளப்பட்டார். உன் நினைவுகள் என் நினைவுகளல்ல உன் வழிகள் என் வழிகள் அல்ல என்று சொன்ன கர்த்தரை நினைவு கூர வேண்டும்.

பத்துப் பேர்கள் இந்தியாவின் ஜனாதிபதியாக வேண்டும் என்று விசுவாசித்தால் பத்து ஜனாதிபதிகளை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளுமா? நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்ற வேண்டும் என்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிற படியினால் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறீர்கள் (*யாக்கோபு 4:3*). இங்கே இச்சையென்பது நெறிதவறிய மாமிச இச்சையைக் குறிக்காமல் இருதய விருப்பம் என்றே பொருள்படுவதாகும். தான் நினைப்பதெல்லாவற்றையும் ஆண்டவர் தர வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது விசுவாசமாகாது. தேவசித்தமும் ஆகாது.

இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிச் செய்யும் என்று ஜெபித்த இயேசு தன் இருதய விருப்பத்தைத் தெரிவித்தார். ஆயினும் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார் என்பது கவனிக்கப்படத்தக்கது. எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று தெரியாத நேரங்களிலும் மிகவும் சிக்கலான சமயங்களில் அல்லது கலக்கமுள்ள சமயங்களில் அமர்ந்திருந்து தேவனை நோக்கிப் பார்த்தால் அப்போது பரிசுத்த ஆவியானவர் தேவ சித்தத்தின்படி தனக்காகப் பரிந்து பேசுகிறார் என்பதை ஒரு விசுவாசி உணர்ந்து அறிந்திருக்க வேண்டும் (ரோமர் *8:26,27*). விசுவாசியின் திட்டங்கள், விருப்பங்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் மேலாகத் தேவனுடைய சித்தமே எப்பொழுதும் முக்கிய இடம் பெறுதல் வேண்டும்.

ஆண்டவருக்குச் சித்தமானால் இன்னின்னபடி செய்வோம் என்று சொல்ல வேண்டும் (*யாக்கோபு 4:15*). நமக்குப் பயன் பெறத்தக்க பல காரியங்கள் தேவசித்தத்திற்குப் புறம்பானவைகளாக இருக்கும். அல்லது நாம் விரும்பத்தகாத சில காரியங்கள் தேவசித்தத்தினால் நமக்கு வரும். பாடுகள் இல்லாத வாழ்க்கையே வேண்டும் என்று ஒரு விசுவாசி ஜெபிப்பதைவிட கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது என்று பவுலைப்போல ஜெபிப்பதே நல்லது (*அப்.21:14*).

தேவன் நமக்கு வாக்குப் பண்ணிய காரியங்களுக்காக ஜெபம் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. அவைகளைப் பெறுவதற்கு நேர்நிலை அறிக்கை செய்தாலே போதும் என்று இப்போதனைக்காரர்கள் சொல்லுவார்கள். தேவன் வாக்குப் பண்ணிய ஆசீர்வாதங்களில் ஆகாரம் ஒன்றாகும். என்றாலும் அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் என்று அதற்காக ஜெபிக்கவும் கற்றுக் கொடுத்தார். தேவன் வாக்குப் பண்ணிய ஆசீர்வாதங்களில் ஞானமும் ஒன்று. ஆயினும் உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் தேவனிடத்தில் கேட்கக் கடவன் என்றார் (*யாக்கோபு 1:5*). பரிசுத்த ஆவியானவர்

நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் (லூக்கா 24:49). எனினும் தம்மிடத்தி வேண்டிக் கொள்கிறவர்களுக்கு தேவன் பரிசுத்த ஆவியானவரை, அளிப்பதாகவே இயேசு கற்றுக் கொடுத்தார் (லூக்கா 11:13).

கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறதென்ன? (யாத்திராகமம் 14:15) என்று கூறும் ஒரு சில சம்பவங்கள் இருப்பினும் விசுவாசிகள் ஜெபிக்க வேண்டும். இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும் எனவும் நினைவுபடுத்துகிற அநேக வேத பகுதிகள் ஏராளம் இருப்பதை மறந்துவிடக் கூடாது. கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற பகுதி, நடு இரவில் தன் வீட்டிற்கு வந்த விருந்தினருக்குத் தேவையான அப்பத்தை தான் நண்பரிடம் வலியுறுத்திக் கேட்ட மனிதனைப் பற்றிய சம்பவத்திற்கு அடுத்தே வருகிறதைக் கவனிக்க வேண்டும் (லூக்கா 11:5-10).

விடாப்பிடியான நேர்நிலைக்காகவே இவர்கள் புகழப்பட்டார்கள். தேவனுடைய வழிகள் மனிதனுடையவைகளைக் காட்டிலும் மேலானவைகள். வேதாகமத்தில் அநேகக் கட்டளைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவை ஒவ்வொன்றுக்குமுள்ள காரணத்தை அறிந்து கொள்ள இயலாது. எனினும் ஒரு தேவையை நினைவுபடுத்தும் தொடர் செயலில் ஜெபத்தை ஒரு பகுதியாகவே தேவன் நமது ஞானத்தில் ஏற்படுத்துகிறார். விடாப்பிடியான ஜெபம் சந்தேகத்தின் அறிகுறி அல்ல. அது விசுவாசம், கீழ்ப்படிதல் ஆகியவற்றின் அறிகுறிகளாகும்.

விசுவாசிகள் சூழ்நிலைகளை அடக்கியாள வேண்டுமே தவிர சூழ்நிலைகளால் ஆளப்படக்கூடாது. வறுமை வியாதி போன்றவைகள் சூழ்நிலைகளுள் சிலவாகும்.

நாம் இராஜாதி இராஜனின் பிள்ளைகள். எனவே, நாம் ராஜரீகமான பெருவாழ்வு வாழவேண்டும் என்று நேர்நிலை அறிக்கையாளர்கள் போதனை செய்கிறார்கள். இராஜாதி

ராஜனும் பாடுகளுக்குட்பட்டு நிந்தை, அவமானம், தாகம், துன்பம் போன்ற அனுபவங்களுக்குட்பட்டுத் தம்மை விசுவாசிக்கிற எவனும் தன்னைப்போல சிலுவை சுமக்க வேண்டும் என்றார். உலக மன்னர்களுக்குச் சமமாக வாழவேண்டும் என்று ஆசைப்படுகிற இவர்கள் தங்கள் ஆன்மீக வாழ்வைப் பார்க்கிலும் உலகப் பிரகாரமான வசதிகளையே அதிகம் எதிர்பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட உபதேசத்தைப் போதிக்கும் ஒருவர் என்னுடன் ஏராப்ளேனில் ஒரு முறை பயணம் செய்தார். நான் சாதாரண டிக்கட் வாங்கியிருந்தேன். அவர் முதல் வகுப்பு டிக்கட் வாங்கியிருந்தார். இராஜாதி இராஜாவின் வீட்டுப் பிள்ளை First classல் போகணும் பிரதர் என்றார்.

ஆனால், அடிக்கடி சாதாரண வகுப்புக்குள் வந்து சென்றார். ஏன் என்று கேட்டபொழுது, தன்னுடைய மனைவியும் பிள்ளைகளும் அங்கே இருப்பதாகக் கூறினார். அவர்கள் இராஜாதி இராஜாவின் பிள்ளைகள் இல்லையா என்று கேட்டேன். அவர் கோபத்துடன் முறைத்துப் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டார். இதுதான் இவர்களின் இலட்சணம். ரோமர் *8:17*, II கொரிந்தியர் *12:5-10*, மத்தேயு *8:15* ஆகிய வசனங்களை இவர்கள் அறிந்திருப்பது நல்லது. இயேசு ஒருபோதும் தேவன் என்னும் நிலையிலிருந்து குறையவில்லை. அற்புதங்களை செய்வதை நிறுத்தவும் இல்லை. ஆயினும் அவருக்குத் துன்பங்கள் தொல்லைகள் வராமலில்லை. தாம் பாடுபடுவதற்கே வந்திருக்கிறோம் என்பதை அறிந்தேயிருந்தார் (மத்தேயு *16:21,17:12*) இராஜரீகமான வாழ்க்கை வாழ விரும்பும் இப்போதனைக்காரர்கள் உலக இராஜாக்களைப் பாராமல் இயேசு இராஜாவையே பார்த்து அவருடைய மாதிரிகளைக் கைக் கொண்டால் நல்லது. சூழ்நிலைகளை இனிமையாக மாற்றுவதைவிட நாம் விரும்பாத சூழ்நிலைகளுடன் இணைந்து வாழ்வது உயர்ந்த இராஜரீகமான வாழ்வு ஆகும். பவுல் பாடுபடுவதற்கென்றே தேவன் தெரிந்து கொண்டார் (அப்.*9:16*) அதினால் கொலோசேயரின் நிமித்தம் தான் அடைந்த பாடுகளில் அவர் நிறைவைக் கண்டார் (கொலேசெயர் *1:24*).

பிரச்சினை என்பது விசுவாசக் குறைவின் அடையாளம் அல்ல. அது விசுவாசத்திற்குக் கிடைக்கும் பாராட்டும் பரிசும் ஆகும் (எபிரெயர் 1:32-40) வரையிலுள்ள வசனங்கள் இதைச் சுட்டிக் காட்டும்.

தேவனால் பயன்படுத்தப்படும் படிக்கே விசுவாசி தன்னை அர்ப்பணிக்க வேண்டுமேயன்றி தேவனைப் பயன் படுத்துகிற விசுவாசியாக மாறிவிடக் கூடாது.

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் அதைச் செய்வேன் (யோவான் 14:13) என்ற வசனத்தைக் காட்டி உபதேசிக்கும் இவர்கள் நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் (I யோவான் 5:14,15) ஆகிய வசனங்களையும் அறிந்திருக்க வேண்டும். விசுவாசியின் அதிகாரம் தேவனுடைய சித்தத்திற்குள் அடங்கியிருக்க வேண்டும். வேலைக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல.

தேவனுடைய சத்தியமானது எக்குடியில் எந்நிலையில் எத்தேசத்தில் உள்ளவர்களுக்கும் ஒன்றே. ஒரு போதனை கடவுளுடையதா அல்லது மனிதனுடையதா என்பதை அதின் கனிகளினால் அறிந்து கொள்ளலாம் (மத்தேயு 7:20).

ஒரு உபதேசத்தை ஆராயும் பொழுது அது வேத வசனத்தின் முழு போதனைகளுடனும் பொருந்துகிறதா என்று ஆராய வேண்டும். வேதாகமச் சத்தியங்களின் மொத்தக் கருத்தோட்டத்தை ஆதாரமாகக் கொள்ளாத உபதேசம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குப் பங்கம் விளைவிப்பதாகும். வேதக் கொள்கைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படியாதவர்களுக்கு ஏற்படும் பாதிப்பை விட இத்தகைய உபதேசங்களுக்குக் கீழ்படிகிறவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு மிக அதிகமாகும். வேத வசன விதிமுறைகளுக்குச் சற்று விலகி அதேசமயம் சில வேத வசனங்களை மட்டும் தங்களுக்கு சாதகமாக்கிப் போதிக்கும் போதனைகள் அநேகரை வசீகரிக்கும். சரீர சுகம், தேவைகள் நிறைவு பெறுதல், விசுவாசியின்

அதிகாரம், விசுவாசம் என்னும் சத்தியங்களை வேதம் போதிக்கவே செய்கிறது. வெற்றி வாழ்வுக்குக் கட்டுப்பா டான மனம் அவசியம் என்றும் வேதம் போதிக்கிறது. அதே சமயத்தில் இவை யாவும் வேத வசனத்தின் மொத்த போத னைச் சட்டத்திற்குள் ஆராயப்பட வேண்டியதாகும். ஒரு பகுதியை மட்டும் போதித்தால் அதினால் கவரப்படுகிறவர் கள் அவைகள் தங்கள் வாழ்வில் நிறைவேறாத பட்சத்தில் இடறல் அடைந்து தேவனை விட்டு விலகிச் செல்வர்.

விசுவாசிகள் முழு சத்தியமும் போதிக்கப்படுகின்ற சபைகளுக்குச் செல்லுங்கள். ஊழியம் செய்வதற்கு அழைக் கப்பட்டவர்கள் அநேகராயினும் தெரிந்து கொள்ளப்பட்ட வர்கள் மிகச் சிலரே. பைபிள் எடுத்துப் போதிப்பவரெல் லாம் போதகராகி விடுவதில்லை. எல்லாவற்றையும், சோதித்துப் பாத்து நலமானவைகளைப் பின்பற்றுங்கள். தேவனுடைய ஊழியர்கள் தேவனுடைய மொத்த ஆலோச னைகளையும் உண்மையாக அறிவிக்க வேண்டும். மேலும் இவ்வூழியர்கள் சபைகள் வைத்திருக்க வேண்டும். அல்லது சபையில் ஒரு அங்கமாக இருந்து செயல்பட வேண்டும். இது கடைசி காலம். இவர்கள் போதிக்கும் மற்றொரு உபதேசம் பொருளாதார ஆசீர்வாதம்.

இப்பொருளாதார ஆசீர்வாதங்களும் தேவனுடைய கிரு பையின்படியும் சித்தத்தின்படியுமே நமக்கு அருளப்படுகி றது என்பதை வேதத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஆனால், இப்போதனைக்காரர்கள் ஆன்மீகத்தில் ஐசுவரியம் அடைவதைக் காட்டிலும் உலகப் பொருள்களின் ஐசுவரியத் தையே மிகைப்படுத்தி அதற்குக் கீழ்காணும் ஒரு சில நியாயங்களையும் சொல்லுகிறார்கள்.

(1) நாம் ஐசுவரியவான்களாகும்படிப் பொருளாதார ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும். தேவனுடைய உடன் படிக்கையை இப்பூமியில் உறுதிப்படுத்தும்படிக்கு ஐசுவரி யத்தைச் சம்பாதிக்கக் கூடிய பெலனை கர்த்தர் கொடுக்கின் றார் *(உபாகமம் 8:18)*.

அடிமைப்பட்டுப் பெலவீனமாகிப் போன இஸ்ரவேலர்களுக்கு தேவன் கொடுத்த வாக்கு மேலே சுட்டிக்காட்டப்படுகிறது. அதேசமயத்தில் வேதம் சொல்லும் கீழ்க்கண்ட வசனங்களை இவர்கள் போதிக்காமல் இருப்பது ஏன்?

ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணிலும் மனுஷரைக் கேட்டிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுள்ள பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள் (I தீமோத்தேயு *6:9*)

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள். நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டு ஓடு (தீமோத்தேயு *6:10*) இன்னும் (*1* தீமோத்தேயு *6:17-19*) வரையிலும் கண்டிப்பாகப் படியுங்கள்.

> ''ஐசுவரியவான்களே கேளுங்கள் உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்கள் நிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து உங்கள் வஸ்திரம் பொட்டரித்துப் போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்து, அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து அக்னியைப் போல உங்கள் மாம்சத்தைத் தின்னும், கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்.'' (யாக்கோபு *5:1-3*).

''நான் பரிபூரணம் அடைகிறதினாலே மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினாலே திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்'' (நீதிமொழிகள் *30:9*).

''பணப் பிரியன் பணத்தினால் திருப்தியடைகிறது இல்லை. செல்வப் பிரியன் செல்வத்தினால் திருப்தியடைவதுமில்லை.'' (பிரசங்கி *5:190*).

வேஷமாகவே மனுஷன் திரிகிறான். விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்; ஆஸ்தியைச் சேர்க்கிறான். யார் அதை வாரிக் கொள்ளுவான் என்று அறியான். *(சங்கீதம் 39:6)*.

பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்.

''உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும்.'' *(மத்தேயு 6:19,2)*.

தேவன் நம்மை எவைகளிலே ஐசுவரியவான்களாக இருக்கச் சொல்லுகிறார்? நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாக இருக்க வேண்டும். *(1 திமோத்தேயு 6:18)* விசுவாசத்தில் ஐசுவரியவான்களாக இருக்க வேண்டும் *(யாக்கோபு 2:5)*. முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் நீதியையும் தேடினால் மற்றவைகளைத் தமது சித்தம் போலத் தேவன் நமக்கு அருளுவார். நாம் ஐசுவரியவான்களாக வேண்டும். அதற்காக ஆண்டவரிடம் வேண்டுதல் செய்ய வேண்டும் என்று போதிப்பது இடறல் உண்டாக்கும் போதகமாகும்.

(2) ஊழியர்களை அனுப்பப் பணம் தேவைப்படுகிறது. அனுப்பப்படா விட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? இப்படியொரு உபதேசம். பணம் இருந்தால்தான் ஊழியர்களை அனுப்ப இயலுமா? தேவன் அழைத்தால் அப்படிப்பட்ட ஊழியர்களுக்குப் பணம் கால் தூசிக்குச் சமம். ஊழியத்திற்கு அனுப்ப சீஷர்களுக்கு இயேசு பையிலே பணம் கொடுத்தா அனுப்பினார்? அனனியாவின் வீட்டிலிருந்து பவுல் பிரசங்கம் செய்யப் புறப்பட்டபோது பணம் பெற்றுக் கொண்டா போனார்? உண்மையான ஊழியம் செய்யும் ஸ்தாபனங்களுக்குத் தேவன் எங்கிருந்தும் உதவிகளை அனுப்புவார்.

(3) பணம் பிசாசின் ஆளுகையில் இல்லாமல் நமது ஆளுகையில் இருக்கத் தேவன் விரும்புகிறார் என்பது இன்னொரு உபதேசம். இதற்கு இவர்கள் சுட்டிக்காட்டுகிற

வசனம் மல்கியா 3:11. எதற்கு எதை சம்பந்தப்படுத்துவது? தசம பாகத்தை ஒழுங்காகக் கொடுத்தால் ஆண்டவர் தமது வாக்கில் உண்மையுள்ளவராக இருப்பார். கர்த்தர் எப்படி உதவுவார் என்பதை 11-ம் வசனம் விளக்குகிறதேயன்றி பணம் பிசாசின் கையிலிருப்பதாகவோ, அது நமக்குக் கிடைக்க தேவன் வழி செய்கிறார் என்றோ திரித்துக் கூறுவது அபத்தம், கள்ள உபதேசம்.

(4) ஏழைகளுக்கு நாம் கொடுத்து உதவ நாம் பொருளாதார ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படியொரு உபதேசம். இதற்கும் சம்பந்தமில்லாத ஒரு வசனத்தைக் காட்டுகிறார்கள். (நீதி 19:7). அப்படிப் பார்த்தால் பணம் இருந்தால்தான் ஏழைகளுக்கு உதவ முடியுமா?

“அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினால் சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும் தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்கத் தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள் என்பதற்கு நான் சாட்சியாய் இருக்கிறேன் (II கொரி 8:2,3) என்று பவுல் எழுதுகிறாரே? கொரிந்து, மக்கதொனியா நாட்டுச் சபையின் விசுவாசிகள் தரித்திரர், அவர்கள் பணக்காரர்களான பின்பு உதவவில்லை. தரித்திரராயிருக்கும் போதே உதவினார்கள்.

இயேசுக் கிறிஸ்து சகலவற்றிலும் ஐசுவரியவான். ஆனால், தனக்கிருந்த அவைகளை நமக்கு அருளும்படி தரித்திரர் ஆனார். அதுபோல இப்போது ஐசுவரியவான்களாயிருக்கிற விசுவாசிகள் தங்களுக்குரியவைகளை, ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே இதன் கருத்து. ஊழியர்களுக்கும் ஏழைகளுக்கும் கொடுக்கப் பணம் தேவை. பணம் இருந்தால் கொடுப்பேன். இல்லாவிட்டால் கொடுக்க மாட்டேன் என்று சொல்பவர்கள் விசுவாசிகள் அல்ல. தனக்கிருந்த இரண்டு காசுகளையும் போட்ட விதவையை ஆண்டவர் சுட்டிக் காட்டினார். ஐசுவரியவான்

நரகத்தில் இருந்தான். லாசரு ஆபிரகாமின் மடியில் இருந்தார்.

(5) தாம் மற்றவர்களுக்கு முன்பாக மதிக்கப்பட வேண்டும். அவர்கள் நம்மை நம்புகிறவர்களாய் இருக்க வேண்டும். இதனால் நாம் பொருளாதார ஆசீர்வாதம் பெற வேண்டும். இப்படியொரு போதனை. இதற்கு இவர்கள் காட்டும் வசனம் *(1 தெசலோனிக்கேயர் 4:11,12)* ஜான் நாக்ஸ் என்ற தேவ ஊழியர் மிகவும் ஏழை. ஆனால், அவர் விக்டோரியா மகாராணியால் மதிக்கப்பட்டவர். சாது சுந்தர் சிங் தனக்கென்று இருந்தவைகளையெல்லாம் விட்டுவிட்டு காலில் செருப்பும் இல்லாமல் காவித் துணியுடன் அலைந்து ஊழியம் செய்தவர். எல்லா மதத்தினரும் அவரை இன்றும் மதிக்கிறார்கள்.

கோடீஸ்வரரான CT ஸ்டட் தன் ஆஸ்திகளை உதறி விட்டு ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்த தரித்திரர். அவர் இன்றும் கிறிஸ்தவ உலகில் மதிக்கப்பட்டு வருகிறார். என் சைக்ளோப்பீடியா பிரிட்டானிக்கா என்ற புத்தகத்தில் இரண்டு சகோதரர்களின் படங்கள் காணப்படுகின்றன. ஒருவர் பெயர் ஜான் லிவிங்ஸ்டன். மற்றவர் டேவிட் லிவிங்ஸ்டன். ஆப்பிரிக்காவில் 40 ஆண்டுகள் அயராது ஊழியம் செய்தவர். அங்கேயே மரித்தவர். அவரின் புகைப் படத்திற்கு அடியில் ''டேவிட் லிவிங்ஸ்டன் 40 ஆண்டுகள் கர்த்தருக்காக ஆப்பிரிக்காவின் பல இடங்களில் அயராது பணியாற்றிய தேவ ஊழியர்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், உலகக் கோடீஸ்வரர் ஜான் லிவிங்ஸ்டன் படத்திற்குக் கீழே என்ன எழுதப்பட்டுள்ளது தெரியுமா? இவர் டேவிட் லிவிங்ஸ்டனின் சகோதரன் என்று மட்டுமே! யாருக்கு மதிப்பு!

மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை என்றார் பவுல் *(1 தெச. 2:6)*. மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது என்றார் இயேசு. *(லூக்கா 16:15)* பணம் இல்லாத

விசுவாசிகள், ஊழியர்கள் எத்தனையோ பேர்கள் ஜனங்களுக்குள் மதிக்கப்பட்டு வருகிறார்கள். பணமுள்ள ஊழியர்கள் பலராலும் பலவிதமாகப் பேசப்படுகிறார்கள். மதிப்புப் பணத்தினால் வராது. தேவன் மதித்தால் மற்ற எல்லோரும் மதிப்பார்கள். தேவனால் வரும் மதிப்பைக் காட்டிலும் இப்போதனைக்காரர்கள் பணத்தினாலும் மற்ற மனிதர்களாலும் மதிக்கப்படுவதையே விரும்புகிறார்கள். இது வேதத்திற்கு முரண்பாடான காரியம். ஐசுவரியவான்களாக இருந்தால் மட்டுமே மற்றவர்கள் நம்மை நம்புவார்களா? ஏழை ஊழியரையும் விசுவாசியையும் நம்ப மாட்டார்களா? இது எவ்வளவு பெரிய அபத்தம்!

6. நாம் தேவனை மகிமைப்படுத்தப் பொருளாதார ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும். இப்படியொரு போதனை. இதற்கு இவர்கள் காட்டும் வசனம் நீதி மொழிகள் 3:9,10. அப்படியானால் பொருளாதார வசதியற்ற விசுவாசிகளும் ஊழியர்களும் கர்த்தரை மகிமைப்படுத்தவில்லையா? பொருளாதார வசதி இருந்தால்தான் மகிமைப்படுத்துவேன் என்பவர்கள் இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்து இயேசுவில் விசுவாசம் வைப்பார்கள். எப்படியெல்லாம் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது.

- i ஸ்தோத்திர பலியின் மூலமாக (சங் 50:22)
- ii சரீரத்தினாலும் ஆவியினாலும் (1 கொரி 6:20)
- iii சாட்சியின் மூலமாக (லூக்கா 17:17,18)
- iv பாடுகள் மூலமாக (1 பேதுரு 4:16)
- v புசிப்பினாலும் குடிப்பினாலும் (1 கொரி 10:31)
- vi நல் நடக்கையின் மூலமாக (1 பேதுரு 2:12)
- vii கனி கொடுப்பதன் மூலமாக (யோவான் 15:8)
- viii மரணத்தின் மூலமாக (யோவான் 21:19)

பொருளாதார வசதியினால் தேவனை மகிமைப்படுத்த லாம் என்பதற்குரிய போதனைகள் வேதத்தில் இல்லை.

7. நமது சந்ததிக்கு சுதந்திரம் வைத்துப் போக பொருளா தார ஆசீர்வாதத்தை நாம் கண்டிப்பாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படியொரு போதனை! இதற்கு வசனம் (நீதி 13:22).

பெற்றோருக்குப் பிள்ளைகள் அல்ல. பிள்ளைகளுக்கே பெற்றோர் ஆஸ்திகளைச் சேர்க்க வேண்டும் என்பது உண் மையாயினும், தாவீது சொல்லும் அறிக்கையையும் வாசித்து சிந்திப்பது நல்லது.

உலக மக்கள் புத்திர பாக்கியத்தினால் திருப்திய டைந்து, தங்களுக்கு மீதியான பொருளைத் தங்கள் குழந்தை களுக்கு வைக்கிறார்கள். நானோ நீதியில் உமது முகத்தைத் தரிசிப்பேன். நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தி யாவேன். (சங். 17:14,15) என்கிறார்.

நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான். அவனுக்குப் பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார் கள். (நீதி 20:7) என்பது வேதம். நாம் நீதிமான்களாய், உத்தமமாக நடந்து கொணடால் நமது பிள்ளைகளைத் தேவன் ஆசீர்வதிப்பார். பிள்ளைகளும் அப்படி நடந்து கொண்டால் அவர்களின் பிள்ளைகளும் ஆசீர்வதிக்கப்படு வார்கள். இதை விட்டுவிட்டு வெறும் பொருளாதார ஆசீர் வாதத்தை மட்டும் தேடச் சொல்லி உபதேசிப்பது தவறான போதனையாகும்.

(8) சகல நற்கிரியைகளையும் செய்ய நமக்குப் பொரு ளாதார ஆசீர்வாதம் அவசியம். இப்படியொரு போதனை. இதற்கு அவர்கள் காட்டும் வசனம் 2 கொ. 9:8, எபி. 13:21 ஆகும். அப்படியானால் பணம் இல்லாதவர்கள் நற்கிரியை களே செய்ய மாட்டார்கள் என்று எண்ணலாமா? இது எவ்வளவு பெரிய அபத்தம்! தெசலோனிக்கேய விசுவாசி கள், மக்கெதோனிய விசுவாசிகள் யாவரும் தரித்திரர்,

ஆயினும் அவர்களிடம் மற்ற எல்லா சபையைக் காட்டிலும் மிகுந்த நற்குணங்களும் நற்செயல்களும் இருந்தது எவ்வாறு!

பணப் பெருக்கம் அதிகமுள்ள அமெரிக்காவிலும் அரபு நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் கூட பிச்சைக்காரர்கள் உண்டு. ஏழைகள் உண்டு. தரித்திரர் உண்டு.

இந்தியாவிலுள்ள எத்தனையோ கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் எவ்வித வெளிநாட்டு உதவியும் இன்றி ஏழை விசுவாசிகள் அளிக்கும் உதாரத்துவமான காணிக்கைகளினால் நடத்தப்பட்டு வருகின்றன. பனை ஓலையினால் கூடைகள் பின்னி அவைகளை விற்று வரும் பணத்தில் ஒரு பகுதியை FM PB ஊழியத்திற்கு அனுப்பும் ஒரு ஏழைப் பாட்டியை நான் அறிவேன். இப்படி எத்தனை ஆயிரமாயிரமான பேர்கள் இருக்கிறார்களோ?

எனவே, பொருளாதாரம் ஆசீர்வாதம் என்ற பெயரில் சில வசனங்களை மட்டும் எடுத்து அவைகளைப் பிரித்தும் திரித்தும் போதித்து வசதியற்ற ஏழை விசுவாசிகளை இடறப் பண்ணும் இப்போதனைக்காரர்களைக் குறித்து விசுவாசிகள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். பொருளாதார ஆசீர்வாதத்தைக் குறித்துப் பிரசங்கித்து மரித்துப் போன ஊழியர் ஒருவர் விட்டுச் சென்ற கடன்கள் பல இலட்சங்களாகும். போதும் என்ற மனதுடன் கூடிய தெய்வ பக்தியே நல்லது.

இவர்களின் இன்னொரு போதகம் **நடனம் ஆடிக் கர்த்தரை ஆராதிப்பது** ஆகும். தாவீது நடனம் ஆடினார் என்கிறார்கள். தாவீது தன் வஸ்திரங்களையெல்லாம் கழற்றிப் போட்டுவிட்டு சணல்நூல் இரட்டை உடுத்தி ஆடினார். அது போல் இவர்கள் சபையில் ஆடுவார்களா? தாவீது உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக தெருவில் ஆடிக் கொண்டு வந்தார். தேவாலயத்தில் ஆடி ஆராதிக்கவில்லை. மீரியாம் ஆடினாள் என்கிறார்கள். வனாந்திரத்தில் மிரீயாம்

தம்புரு வாசித்தாள். அவளுடைய தோழிகள் ஆடினார்கள். இவர்களில் யாரும் தேவாலயத்தில் நடனம் ஆடிக் கர்த்தரை ஆராதிக்கவில்லை. சங்கீதங்களில் இரண்டே இரண்டு இடங்களில் 149, 150 ஆகிய சங்கீதங்களில் மட்டும் நடனம் என்கிற வார்த்தை வருகிறது. ஆனால், இது கர்த்தரை ஆராதிப்பதற்காக எழுதப்பட்டதல்ல. புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் நடனம் ஆடிக் கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்று காணப்படவில்லை.

சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி.... (எபேசி 5:19,20). உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி.... (கொலோசெயர் 3:16) என்று பாடித் துதிக்கும் படிக்கே வசனங்கள் உண்டு. நடனம் ஆடிக் கர்த்தரை ஆராதிப்பது என்பது முற்றிலும் தவறான போதகம். பழைய வாழ்க்கையில் ஆட்டம் போட்டவர்களுக்கு இப்படிப்பட்ட உபதேசம் பிரியமாயிருக்கலாம். வெளியில் தான் ஆட முடியவில்லை; சபையிலாவது ஆடுவதற்கு தருணம் கிடைத்ததே என்று ஆடுபவர்கள் இருக்கலாம். ஹோட்டல் நடனங்களும் ஆண் பெண் நடனங்களும் சபைக்குள் நுழையும் காலம் இது. விசுவாசிகள் வேத வசனங்களில் சரியான ஆராய்ச்சியின்றி இருந்தால் சபை நடன சாலையாக மாறவும் செய்யும். இப்படிப்பட்ட போதனைகளைப் போதிப்பவர்களிடம் விசுவாசிகள் எச்சரிக்கையாய் இருங்கள். ஆட்டம் அருமையாக இருக்கும். அதனால் ஆன்மீக வாழ்விற்கு ஒரு பயனும் இல்லை. இப்படிப்பட்ட ஒரு ஆட்டக் கூட்டத்தில் ஆடிய பெண் ஒருத்திக்கு 'ஸ்கர்ட்' அவிழ்ந்து விழுந்ததுதான் மிச்சம். இதைப் பார்ப்பவர்களுக்கு பக்தி விருத்தி ஏற்படுமா என்ன?

அடுத்தது **தெய்வீக சுகம்** பற்றியது. இயேசு சுகம் அளிக்கிறார். இன்றும் அவர் ஜீவிக்கிறபடியினால் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியர்களைக் கொண்டு அநேகரை சுகப்படுத்தி வருகிறார்.

சுகமளிக்கும் வரங்களில் இரண்டு வகையுண்டு. ஒன்று குணமாக்கும் வரம். மற்றொன்று அற்புதங்களைச் செய்யும் சக்தி (1 கொரி. 12:9,10). குணமாக்கும் வரம் உடையவர்கள் ஜெபிக்கும்போது குணம் நாளடைவில் உண்டாகிவிடும். ஆனால், அற்புதங்க்சை செய்யும் வரமுடையவர்கள் ஜெபித் தவுடன் அந்த அற்புதங்கள் உடனே நடக்கும். இவைகளைச் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். விசுவாசத்தினால் குணம் உண்டாகும். வசனத்தை ஏற்றுக் கொள்ளும்போது குணம் உண்டாகும். தேவ ஊழியர்கள் ஜெபிக்கும் போது குணம் உண்டாகும். குணமாக்குகிறவர் இயேசு.

ஆனால் இப்போதனைக்காரர்கள் போதிப்பது என்ன வெனில் சுகம் ஆகாவிட்டால் ஆகிவிட்டது என்று அறிக்கை செய்ய வேண்டுமாம். வியாதி இருக்கும்பொழுதே வியாதி இல்லை என்று சொல்ல வேண்டுமாம். அதுதான் விசுவா சம். அப்போது குணம் உண்டாகும் என்கிறார்கள்.

வியாதி வருவதற்கு நான்கு முக்கிய காரணங்கள் உண்டு.

1. பாவம் செய்வதினால்
2. இரத்தம் சம்பந்தத்தினால்
3. தொற்று நோய்களினால்
4. சுற்றுச் சூழ்நிலைகளினால்

எதன் மூலம் வியாதி வந்தது என்று கண்டறிந்து பரிகாரம் தேட வேண்டும். ஊக்கமான ஜெபம் பிணியா ளியை இரட்சிக்கும். தெய்வீக சுகமளிக்கும் ஊழியங்கள் நம் நாட்டுக்குத் தேவை. ஆனால், அவை உளவியல் மூலமாக (Psychology) நடைபெறக் கூடாது. மனோ தத்துவ ரீதியில் சிலர் சுகம் அளிக்கும் ஆராதனை நடத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு பெயர் தேடிக் கொள்ள லாம். ஆனால், தேவ நாமம் மகிமைப்படாது. தேவ நாமத்தை மகிமைப்படுத்துவது போலவே தங்களையே மகிமைப்படுத்திக் கொள்கிறவர்களும் உண்டு.

பவுலுக்கு மாம்சத்தில் முள் இருந்தது. தேவன் அவருக்கு முள் இருக்கட்டும் என்று சொல்லவில்லை. முள்ளை எடுப்பேன் என்றும் சொல்லவில்லை. என் கிருபை போதும் என்றே சொன்னார்.

எப்பாப்பிரோதீத்து மரணத்திற்கேதுவான வியாதியாய் இருந்தார். ஆயினும் தேவன் அவருக்கு இரங்கினார். அவர் அற்புத சுகம் உடனே பெறவில்லை. அநேக நாட்கள் கழித்தே சுகம் பெற்றார். எனவே தெய்வீக சுகத்திற்காகவும் தேவ சித்தத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும். பிடிவாதமாகக் கேட்டு சுகத்தை வாங்க வேண்டும் என்பது இப்படிப் பட்டவர்களின் போதனை. இது தவறு ஆகும். அவர் சுகப்படுத்துவார் என்று பொறுமையுடன் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். அவருக்குத் தெரியாமல் நமக்கு எதுவும் நேர்ந்து விடுவதில்லை. எனவே, பொருளாதார ஆசீர்வாதம். நேர்நிலை அறிக்கை. நடனமாடி கர்த்தரை ஆராதித்தல், தெய்வீக சுகத்தைப் போராடிப் பெறுதல் என்ற உபதேசங்கள் கேட்பதற்கு வசீகரமாயிருந்தாலும் இவை ஆவியானவரால் சபைக்குக் கொடுக்கப்பட்ட உபதேச சட்டத்திற்குள் இருக்கிறதா? என்றும் சோதித்துப் பார்ப்பது நல்லது. இப்படிப்பட்ட போதனைகள் கிறஸ்தவ மார்க்கத்தில் ஏற்பட்டு விட்ட ஒருவிதமான Cult (மத அனுசரணை முறை) போலத்தான் எண்ண வேண்டியுள்ளது.

எனவே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குப் பரிசுத்த ஆவியானவர் தந்தருளிய ஏழு விதமான சத்தியங்கள்: மனம் திரும்புதல் சரீர அடக்கமாகிய ஞானஸ்நானம். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுதல். மாறுபாடான சந்ததியை விட்டுப் பிரிந்து வாழ்தல். அப்படிப்படவர்களுடன் ஐக்கியம். அப்பம் பிடுதல், ஜெபம் பண்ணுதல். தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஐந்து விதமான ஊழியங்கள், ஊழியர்கள் ஆகிய சட்ட திட்டங்களுக்குள் அடங்கிய எந்த சபையிலாவது அங்கத்தினராகி தேவனுடைய வருகைக்காகக் காத்திருங்கள்.

கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படுவதற்கேதுவான அற்புதங்களும் பிரசங்கங்களும் இக்கடைசி காலத்தில் இருக்கும். மனுஷகுமாரன் திரும்ப வரும்பொழுது விசுவாசத்தைக் காண்பாரோ வென்று இயேசு சொன்னதையும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அவருடைய நாமத்தினாலே அற்புதங்களைச் செய்வார்கள். ஆனால், அவர்கள் தேவ சித்தத்தின் படியாக ஊழியம் செய்கிறார்களா என்பதை நிதானிக்க வேண்டிய பொறுப்பு விசுவாசிகளுடையது, ஆமென்.

இயேசு ஒரு முறை: ''அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோமல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோமல்லவா? அற்புதங்களைச் செய்தோமல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலம் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்றார். (மத்தேயு 7:22,23).

இயேசு என்ற நாமத்திற்கு வல்லமையுண்டு. அந்த நாமத்தை யார் உபயோகித்தாலும் அந்த வல்லமையுள்ள நாமம் அதிசயங்களைச் செய்யும். பிசாசுகளைத் துரத்தும். அந்த நாமத்தினாலே தீர்க்க தரிசனமும் சொல்லலாம். இதினாலே ஒரு கூட்டம் ஜனம் இரட்சிக்கப்படலாம் தேவ நாமம் மகிமைப்படலாம்.

ஆனால், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தவர்கள் தேவனுக்கு முன்பாக நின்று சாட்சி கொடுத்தாலும், தேவன் அவர்களைப் பார்த்து அக்கிரமச் செய்கைக்காரரே! நான் ஒருக்காலம் உங்களை அறியேன் என்று சொல்லுவார். காரணம் என்ன?

அக்கிரமம் என்பது பாவம் அல்ல. கிரமத்திற்கு எதிர்மறையானது அக்கிரமம். தேவன் தமது நாமத்தை வீணிலே வழங்கக் கூடாது என்று கற்பனையில் போதித்திருக்கிறார்.

அவருடைய கற்பனைகளைப் பெற்றிருந்தும் கட்டளைக ளைப் பெற்றிருந்தும் அவர் சொல்லிய கிரமத்தின்படி நடவாமல் தங்கள் மனம் போல நடந்து அதே சமயத்தில் மாதப் பிறப்புகளையும் சபைக் கூட்டங்களையும் ஓய்வு நாளையும் அனுசரித்தபடியினால் ''நீங்கள் அக்கிரமத் தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்புக்களையும், சபைக் கூட் டத்தையும் ஓய்வு நாட்களையும் நான் இனி சகிக்க மாட் டேன் என்று ஏசாயா 1:13ல் தீர்க்கதரிசியின் மூலமாக ஆண்டவர் உரைத்தார்.

புதிய ஏற்பாட்டுத் திருச்சபைக்கு ஆவியானவர் அமைத் துத் தந்த கிரமம் ஏழு உபதேசங்கள், ஐந்து ஊழியங்கள், ஒன்பது வரங்கள் ஆகியவைகளே! இது சபையைக் குறித்த பிதாவின் சித்தம். பரிசுத்த ஆவியானவரால் ஏற்படுத்தப் பட்ட சபைக்கு இவையாவும் இருக்க வேண்டும்.

மத்தேயு 7:21ல் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படிச் செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லகிறவன் அதில் பிரவேசிப்ப தில்லை என்றும் சொன்னார்.

ஐந்து விதமான ஊழியர்களும் சபைக்கு உட்பட்டு, சபையில் ஐக்கியமாக அங்கங்களாக இருந்து ஊழியம் செய்ய வேண்டும். இவர்கள் ஆவியானவரால் கொடுக்கப் பட்ட ஏழு உபதேசங்களையும் துல்லியமாய் எடுத்து உபதே சிக்க வேண்டும். சபையில் ஆவியானவருடைய வரங்கள் செயல்பட வேண்டும்.

அப்படியனால், தேவன் என்னை எதைப் பேச சொல்லு கிறாரோ அதை மட்டுமே பேசுவேன் என்று சொல்லி ஞானஸ்நானத்தைப் போதியாமல், அபிஷேகத்தைக் குறித் துப் பிரசங்கிக்காமல், அந்நிய பாஷைகளைக் குறித்துப் பிரசங்கியாமல், இரட்சிப்பு, சுகமளித்தல், அன்பு ஆகிய இவைகளையே பேசுபவர்கள் மத்தேயு 7:21ன்படி பரலோக

இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லை. வெளியே நிறுத்தி வைக்கப்படுவார்கள்.

அந்த வேளையில் அனேகர் வந்து கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொன்னோம். அனேகருக்குப் பிரயோசனமாக இருந்து உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம். தேவ நாமம் மகிமைப்பட்டது. உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம். திரளான கூட்டம் எங்களுக்குப் பின்னாலே வந்தது. எங்களுக்குப் பெயரும், புகழும், பணமும் கிடைத்தது. உமக்கும் நாங்கள் பெயரும், புகழும் சம்பாதித்துத் தந்தோம் என்பார்கள்.

தேவன் இப்படிப்பட்டவர்களை அறிய மாட்டார். ஏழு சத்தியங்களைச் சபைக்கு வெளிப்படுத்தின தேவன் ஒன்றை மட்டும் சொல்லு, மற்றதைச் சொல்லாதே என்று சொல்ல மாட்டார். குழந்தை ஸ்நானம் கொடுக்கிற சபைகளில் சிலர் முழுக்கு ஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கிக்க மாட்டார்கள். அப்படிச் செய்தல் அங்கே வாசல் அடைப்பட்டுப் போகும். கூட்டம் குறையும். கூடவே வருமானமும் குறையும். ஆனால், அங்கே தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். பேய்களைத் துரத்துவார்கள், அற்புதங்களும் நடைபெறும். பிரயோசனமென்ன?

தேவன் அமைத்துத் தந்த கிரமமான வழிகளை விட்டு தாங்களாக அமைத்துக் கொண்ட உபதேச சட்டங்களைக் கைக் கொண்டு சபை நடத்துகிறவர்களும் அப்படிப்பட்ட இடங்களில் தங்களை அட்ஜஸ்ட் செய்து கொள்கிற அழைக்கப்பட்ட பரிசுத்தவான்களும் உங்களை வஞ்சிக்கிறவர்களே! இப்படிப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையாய் இருங்கள்.

நூதன சீஷர்கள் தோன்றுகிறார்கள். கர்த்தர் நகைத்தார். ஆகவே நாமும் நகைக்க வேண்டும் என்று சொல்லி தானும் ஹாஹாஹா என்று சிரித்துச் சபையோரையும் சிரிக்க வைக்

கிறவர்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். இது தேவனுடைய உபதேசம் அல்ல.

கர்த்தர் எதற்காக நகைத்தார்? யாரைப் பார்த்து நகைத்தார்? ஏன் நகைத்தார்? என்று அறியாமல் ஏதாவது ஒரு வசனத்தைப் பிடித்துக் கொண்டு பிரசங்கிக்கிறவர்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

ஊதி ஆட்களை விழத் தள்ளுதல், வாந்தி பண்ணச் செய்தல் போன்ற உபதேசங்களும் பிதாவின் சித்தப்படியான தல்ல. இவை யாவும் தாறுமாறான உபதேசங்கள். வேத வசனங்களை எடுத்துக் கூறு போட்டு, ஒடித்து, ஒட்டித் தாங்கள் சொல்லும் உபதேசம் வேத வசனத்தின்படியானது என்று காட்டி வஞ்சிக்கிறவர்களுக்கு எச்சரிக்கையாய் இருங் கள்.

தூதன் வந்தான், வெளிச்சங் காட்டினான். ஆண்டவர் நேரே வந்து சொன்னார் என்பன போன்ற உபதேசங்களுக்கு எச்சரிக்கையாய் இருங்கள். ஆவியானவர் வந்து சகலசத்தி யத்திற்குள்ளும் நடத்திவிட்ட பின்பு இனிப் புதுபுது உபதே சங்களை அவர் வெளியிட மாட்டார். குழப்பவும் மாட்டார். அவர் கலகத்திற்கு காரணர் அல்ல.

நகை அணிந்தால் பரலோகம் இல்லை. திருமணமா னால் பரிசுத்தம் இல்லை. பிரதிஷ்டை இல்லை. தாலி கட்டினால் தயவு இல்லை என்பன போன்ற உபதேசங்க ளும், சபையிலுள்ள விசுவாசிகள் நகை அணியலாம். ஆனால், பாஸ்டருடைய மனைவிமார்கள் அணியக் கூடாது என்பதும், ஒரே சபையைச் சேர்ந்த ஊழியர்கள் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தாலி கட்டக் கூடாது என்பதும் மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தாலி கட்டிக் கொள்வதும் வேடிக்கையான உபதேசங்களாகும்.

ஆவியானவரால் சபைக்குக் கொடுக்கப்பட்ட மூல உபதேச வசனங்களை விட்டு விட்டு அவரவர்கள் தங்களுக்

குச் சாதகமாக வகுத்துக் கொள்ளும் இப்படிப்பட்ட உபதேசங்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆலயத்திற்குள் தாலி கட்டக் கூடாது. மாலையணியக் கூடாது. ஆனால், ஆலய வாசலுக்கு வெளியே போனவுடன் தாலி கட்டிக் கொள்ளலாம். வரவேற்பில் மாலையணியலாம் என்பார்கள். அதை ஆலயத்தில் செய்யக் கூடாது என்பதற்கு உபதேசம் உண்டா? அப்படிச் செய்தால் தேவன் நரகத்தில் தள்ளி விடுவாரா?

சூட் அணியலாம். விதவிதமான 'டை' அணியலாம். அதில் பளிச்சிடும் 'பின்' அணியலாம். சஃபாரி சூட் அணியலாம். ஆனால், நகையணியக் கூடாது. விலையுயர்ந்த வெள்ளைப் புடவை அணியலாம். வீட்டில் வடிவான கலர் புடவை அணியலாம். இப்படிப்பட்ட வேஷம் எதற்காக? இவைகளெல்லாம் உபதேசத்தில் அடங்குமா?

பிதாவின் சித்தத்தை நிறைவேற்றாமல் அக்கிரமமான வழிகளிலம் உபதேசங்களிலும் நிலைத்திருந்து, அதே சமயத்தில் இயேசுவின் நாமத்தினாலே அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து, தீர்க்கதரிசனம் சொல்லிப் பிசாசுகளைத் துரத்தினாலும், ஆண்டவரால் அறியப் படாத அக்கிரமச் செய்கைக்காரரிடம் எச்சரிக்கையாய் இருங்கள்.

யேகோவா சாட்சிகள்

6. யேகோவா சாட்சிகள்

இப்படியொரு கூட்டம் உண்டு. இவர்களும் பைபிள் வைத்திருப்பார்கள். இவர்களுக்கு சபை வழிபாடு கிடையாது. Kingdom Hall *(கிங்டம் ஹால்)* என்று இவர்கள் கூடும் இடத்திற்குப் பெயர். இவர்கள் இதில் ஆராதிப்பதோ ஜெபிப்பதோ கிடையாது. யேகோவா சாட்சிக் கூட்டத்திற்கு எப்படி ஆள் சேர்ப்பது என்பது பற்றி நன்றாகச் சொல்லிக் கொடுப்பார்கள். இவர்களுடைய முக்கிய போதனை என்னவெனில் யேகோவா தெய்வம். இயேசு கிறிஸ்து சாதாரண மனிதன். அவர் ஜெனிப்பிக்கப்பட்டவர் என்பதே! பைபிளில் அங்குமிங்குமாகச் சில வசனங்களைக் கோர்வையாகச் சேர்த்து சாதாரணக் கிறிஸ்தவர்களின் வீட்டில் நுழைந்து (ஒரு ஆணும் ஒரு வாலிபப் பெண்ணுமாக வருவது வழக்கம்) அவர்களுக்குப் போதிக்க ஆரம்பித்து விடுவார்கள். காணாத ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டது போல அளப்பார்கள். பைபிள் சரியாகத் தெரியாத நமது சாதாரண கிறிஸ்தவர்களும் இதோ இப்போதுதான் புரிய ஆரம்பிக்கிறது என்பது போல, சாமி மாடு தலையாட்டும் பாருங்கள். அதுமாதிரி தலையாட்டி ஏற்றுக் கொள்வார்கள். தங்களுக்குத் தெரியாத வேத பகுதிகளைத் தெரிந்ததுபோலக் காட்டிக் கொள்ள விரும்பி இப்படிப்பட்டவர்களுடன் வாதிட்டு, முடிவில் தோல்வி கண்டு வஞ்சிக்கப்படுவார்கள்.

யேகோவா சாட்சிகளை மற்றொரு தந்திரம் என்னவெனில் மற்றவர்களைப் பேசவிட மாட்டார்கள். அவர்கள் சொல்லச் சொல்ல கேட்பவர்களை ''உம்'' கொட்டும் நிலையில் வைத்துப் பேசுவது இவர்களுக்குக் கொடுக்கப்படும் அற்புதமான பயிற்சி. ஆக மொத்தத்தில் யேகோவாவுக்கு சாட்சி என்று கிளம்பும் இவர்களின் முக்கிய உபதேசம் என்னவெனில் இயேசு கிறிஸ்து தேவன் அல்ல என்பதே!

கடவுளை ஒருவனும் ஒருபோதும் கண்டதில்லை என்பது வேதம். விண்டவர் கண்டதில்லை. கண்டவர் விண்டதில்லை என்பது முதுமொழி. ஒருவர் கடவுளை ஆள் தத்துவம் என்பார். இன்னொருவர் இல்லை என்பார். இருவரும் தங்களுக்குத் தெரிந்த எல்லாத் தத்துவ ஞானங்களையும் பயன்படுத்தி வாதிடுவர். தத்துவ நாயகன் யார் என்று விளங்கிக் கொள்ளாமலேயே தத்துவங்களைப் பேசிப் பேசி காலம் கழிப்பார்கள். ஆனால், கடவுளே வந்து நானே அவர், நானே வழி, சத்தியம் ஜீவன் என்று சொல்லி விட்டால் 'பொய்மையிலிருந்து மெய்மைக்கு வழி நடத்தும் இருளிலிருந்து ஒளிக்கு வழி நடத்தும். மரணத்திலிருந்து ஜீவனுக்குள் வழி நடத்தும்' (பிருகத் ஆரண்யக உபநிடதம்) என்று ஜெபிக்கும் பக்தனுக்கு விடை கிடைத்துவிடும்.

யேகோவா சாட்சிக்காரர்கள் இயேசுக் கிறிஸ்துவை நல்ல மனிதர் என்பார்கள். அது உண்மையே. ஏனெனில் நல்ல மனிதர்கள் பொய் பேச மாட்டார்கள். இயேசு கிறிஸ்துவும் பொய் பேசவில்லை. நானே அவர், நானே யேகேவா என்றார். நல்ல மனிதர்கள் தங்களை மற்றவர்கள் வணங்க வேண்டும், தொழ வேண்டும், தங்களுக்கு அடியாளர்களாக மாறவேண்டும் என்று விரும்ப மாட்டார்கள். அப்படியிருக்க உலகத்தில் பெரும்பான்மையோர் இந்த இயேசு கிறிஸ்துவை வணங்குகிறார்களே! தொழுது ஆராதிக்கிறார்களே! பின்பற்றுகிறார்களே! காரணம் என்ன? இயேசு கிறிஸ்து சாதாரண மனிதர் மட்டும் அல்ல. அதிலும் உயர்ந்த இறைநிலையிலும் உள்ளவர். அதுவே உண்மை. குரூரமான முறையில் சிலுவையில் அவர் மரணம் அடைந்தபடியினால் பரிதாபப்பட்டு ஜனங்கள் அவரைப் பின்பற்றவில்லை. இவருக்கு முன்பும் பின்பும் எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்கள் சிலுவை மரணம் அடைந்திருக்கிறார்கள். ஏன் ஜனங்கள் இவர்களையெல்லாம் பின்பற்றவில்லை?

இயேசுக் கிறிஸ்துவைத் தெய்வமாக்கும்படியாக வேதத்தை மாற்றியமைத்துக் கொண்டார்கள் என்று இவர்கள் குறை கூறுவார்கள். புதிய ஏற்பாட்டுக்கு மட்டும் சுமார்

24,600 சுருள்கள் உண்டு. இதில் இரண்டாவது பிரதியாகிய லியாத், ஒடிஸ்ஸி என்பவைகள் ஹோமர் என்பவரால் எழுதப்பட்டது. இவைகள் யாவும் அழிக்கப்பட்டாலும் ஆதிப்பிதாக்கள் எழுதி வைத்த வேதச் சுருள்களிலிருந்தே இயேசுவைத் தெய்வம் என்று விளக்கிக் காட்ட முடியும். கிறிஸ்தவரல்லாத சரித்திரப் பேராசிரியர்கள் கூடப் புதிய ஏற்பாடு நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவிகிதம் பிழையற்றது என்பதை ஒத்துக் கொள்கிறார்கள். இவ்வேதங்களின் செய்தியைப் பலர் பலவாறு திரித்துக் கூறலாம். ஆனால், இதின் சரித்திர அதிகாரபூர்வமான உண்மையை மறுதலிக்க முடியாது.

இயேசுவே ஜீவ வார்த்தை! பிதாவை வெளிப்படுத்தியவர் இவரே! பிதாவை எங்களுக்குக் காட்டும் (யோவான் 14:8) என்று அவரிடம் சிலர் கேட்டபொழுது, இவ்வளவு காலம் நான் உங்களுடனே இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டவன் (யோவான் 14:9) என்றார். அப்போஸ்தலனாகிய பவுல். அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபம் என்றார் (கொலோ 1:15).

தேவன், திரித்துவம், இயேசு ஆகிய தன்மைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாகும். இதைக்குறித்து சற்று ஆழமாகச் சிந்திப்பது நல்லது.

தேவன்

வேதங்கள் சொல்லுகிறபடி, தேவன் அரூபி, ஆனந்த ஞானன், அன்புள்ளவர், உண்மையுள்ளவர், சிருஷ்டி கர்த்தா, நித்யர், அனைத்துலகங்களையும் ஆண்டு நடத்துகின்ற ஆண்டவர் என்ற பெயர்களுக்குக் காரணராயிருக்கிறார். தேவனுடைய இக்குணங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். (i) பொதுத் தன்மை, (ii) குணத்தன்மை. பொதுத் தன்மையில் அவர் ஒப்பற்றவர். நித்யர், மாறாதவர், சர்வ வல்லமையுள்ளவர், சர்வ ஞானமுள்ளவர், சர்வ வியாபகர்,

மூன்றில் ஒன்றானவர், ஆவியானவர், ஏகர் என்று காணப்படுகிறார். குணத்தன்மையில் அவர் பரிசுத்தர், நீதியுள்ளவர், அன்புள்ளவர், உண்மையுள்ளவர் என்று காணப்படுகிறார். இப்படிப்பட்ட தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. ஆயினும் இத்தேவன் இயேசுக் கிறிஸ்துவாக உலகில் வந்து தமது அத்தனை குணங்களையும் அவர் மூலமாக வெளிப்படுத்துவதால் இயேசுவை மனுஷகுமாரன் என்றும் தேவகுமாரன் என்றும் காண்கிறோம். தேவன் மனிதனாக வரவேண்டிய அவசியம் என்னவென்பதை பின்பு பார்க்கலாம்.

திரித்துவம்

திரித்துவம் என்ற சொல் வேதாகமத்தில் காணப்படவில்லையாயினும் தேவனுடைய மூன்று தனித்தன்மைகள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று ஆள் தத்துவத்தில் காணப்படுகின்றன. எனினும் தேவன் ஒருவரே! இப்படிச் சொல்லுவதால் ஒரு கடவுள் இருக்கிறார் மூன்று கடவுள்கள் இருக்கிறார்கள் என்று பொருளல்ல. ஒரேயொரு கடவுள் மூன்று உருவங்களாக இருக்கிறார் என்றும் பொருள் அல்ல. மூன்று கடவுள்கள் ஒரே குடும்பமாக இருக்கிறார்கள் என்று பொருள் அல்ல. வேதாகமத்தில் காணப்படுகின்ற ஒரே தேவன் (உபாகமம் *6:4;* ஏசாயா *43:10*) பிதா குமாரன், பரிசுத்த ஆவியாயிருக்கிறார். இம்மூன்று பேரும் வேதாகமத்தில் தேவன் என்றே அழைக்கப்படுகிறார்கள்.

1. *பிதாவாகிய தேவன் (கலத்தியர் 1:1)*
   பிதாவாகிய தேவன் (தீத்து 1:2)

2. *வார்த்தை (இயேசு) தேவனாயிருந்தார் (யோவான் 1:1)*
   தேவன் (இயேசு) தம்முடைய சுய இரத்தத்தினாலே (அப்போஸ்தலர் 20:28)
   தோமா இயேசுவைப் பார்த்து என் ஆண்டவரே! என் தேவனே! என்றார் (யோவான் 2:28)

மகாதேவனும் நமது இரட்சகருமாயிருக்கிற இயேசு.... (*தீத்து 2:13*)
குமாரனை நோக்கி: தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது (*எபிரெயர் 1:8*).

பரிசுத்த ஆவியானவர்

3. இதுபோலவே பரிசுத்த ஆவியானவரையும் வேதாகமம் தேவன் என்று சொல்லுவதைக் காணலாம்.

பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படிக்கு.... தேவனிடத்தில் பொய் சொன்னாய்... (*அப்போஸ்தலர் 5:3,4*).

எபிரெயர் *10:15,16* ஆகிய வசனங்களின் மூலம் பழைய ஏற்பாட்டில் சாட்சியாய் சொன்ன கர்த்தருடைய அதே வசனங்களை பரிசுத்த ஆவியானவரும் சாட்சி சொல்லுகிறார் என்று காணப்படுவதினால் அறியலாம். திரித்துவத்தின் ஒருமைப்பாடு மத்தேயு *28:19*ல் காணப்படுகிறபடி பிதா, என்பதும் குமாரன் என்பதும் பரிசுத்த ஆவி என்பதும் ஒரே நாமம் என்பதை நாமங்களில் என்றில்லாமல் நாமத்தில் என்றிருப்பதிலிருந்து அறியலாம்.

இயேசு கிறிஸ்துவின் தெய்வாம்சத்தை ஏற்றுக் கொள்கிற ஒருவருக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற தெய்வாம்சங்களையும் ஏற்றுக் கொள்வது மிகவும் சுலபம். ஆனால், திரித்துவம் என்றால் என்ன? அப்படிப்பட்ட வார்த்தை பைபிளில் இல்லையே என்று இதைக் குறித்து ஆராய்ச்சி செய்பவர்களுக்குச் சில வசனங்கள் வேதாகமத்தில் உண்டு.

மத்தேயு 3:16,17; மாற்கு 1:9-11; லூக்கா 1:35; 3:21,22; யோவான் 3:34-36; 14:26; 16:13-15; 1 கொரிந்தியர் 12:4,6; 2 கொரிந்தியர் 3:4-6; 13:14; எபேசியர் 1:3-14; 2:18-22; 3:14-17; 4:4-6; 2 தெசலோனிக்கேயர் 2:13,14; 1 தீமோத்தேயு 3:15,16; எபிரெயர் 14:10-7; 10:10-15; 1 பேதுரு 1:2 ஆகிய வசனங்கள் சில எடுத்துக்காட்டாகும்.

இயேசுக் கிறிஸ்து என்பது பெயர் மட்டுமல்ல; அது ஒரு பதவியும் ஆகும். இயேசு என்ற கிரேக்கப் பெயர் யோசுவா என்ற எபிரேயப் பெயரின் மருவூ ஆகும். யோகோவா இரட்சகர் என்பதும் இயேசு இரட்சகர் என்பதும் ஒன்றே. கிறிஸ்து என்னும் பதவிப் பெயர் மேசியா என்னும் எபிரேயப் பெயரிலிருந்து வந்ததாகும் (தானியேல் 9:26 - Mashiach). இதன் பொருள் அபிஷேகம் செய்யப்பட்ட என்பதாகும். தீர்க்கதரிசி, ராஜா, ஆசாரியன் ஆகியோருக்கு எண்ணெய் வார்த்து அபிஷேகம் செய்வார்கள். இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசியாகவும், இராஜாவாகவும், பிரதான ஆசாரியராகவும் சொல்லப்பட்டிருக்கிறார்.

தேவனுடைய ரூபம் அடிமையின் ரூபமெடுத்ததைப் பவுல் அப்போஸ்தலர் பிலிப்பியர் *2:5-11* ஆகிய வசனங்களில் விவரிக்கிறார். பூமியில் இருந்த நாட்களில் இயேசுக் கிறிஸ்து நூற்றுக்கு நூறு தேவனாகவும் நூற்றுக்கு நூறு மனிதனாகவும் இருந்தார்.

தேவன் ஏன் மனிதனாக வேண்டும்? என்று ஒரு கேள்வி எழலாம். உண்மை, அழகு, நல்லவை ஆகியவற்றை ஒரு பொருளின் மூலமாக அல்லது ஒரு உயிரின் மூலமாகத்தான் பார்க்க முடியுமேயன்றித் தனியாகப் பார்க்க இயலாது. அதுபோலவே தேவன் என்பவரை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக இயேசு கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது (கொலோசெயர் *2:9*). எனவே, தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் (*1* தீமோத்தேயு *3:16*).

பாவமானது மனிதனையும் தேவனையும் பிரித்துவிட்டது. இந்த இடைவெளியை பாவ மனிதன் கடக்க முடியாது. எனவே, தேவன் பாவ மாம்சத்தின் சாயலாக தேவன் மனிதன் ஆகிய இருவருக்கும் இடையில் மத்யஸ்தரானார் (*1* தீமோத்தேயு *2:5,6*) பாவமனிதன் தன் புண்ணியக் கிரியைகளினால் இறைவனை அடைய முடியாது. கடவுளின் அன்போ தன் நிலையிலிருந்து மனித நிலைக்குக்

கீழ்ப்படுத்தி, இறவா இன்பத்துள் அவனைச் சேர்க்கும்படிப் பிறவா முதல்வன் உலகில் பிறந்தார்.

யேகோவா சாட்சிகள் சொல்வதுபோல தேவன் வேறு, இயேசு கிறிஸ்து வேறு அல்ல. பழைய ஏற்பாட்டு நூல்களில் தேவனுக்கு என்னென்ன பெயர்கள் உண்டோ அத்தனை பெயர்களும் இயேசுக் கிறிஸ்துவுக்கும் உண்டு. இயேசுக் கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் எத்தனையோ பேர்களுக்கு இயேசு என்ற பெயர் இருந்திருக்கும். ஆனால், இந்த ஒரு இயேசுவுக்கு மட்டும் கிறிஸ்து (மேசியா) என்ற பெயரும் பதவியும் இயேசு என்ற நாமத்துடன் சேர்க்கப்பட்டிருந்த தால் அதுவே யூதர்களுக்குக் கோபத்தை உண்டாக்கினது; இயேசுக் கிறிஸ்து என்ற பெயர் அநேகருக்கு இருந்த போதிலும் அவர்களைக் குறித்து யூதர்கள் கோபப்பட வில்லை. கலிலேயப் போதகரான இவர் தன்னைத் தேவன் என்று சொன்னது மாத்திரமே அவர்களுக்குக் கோபத்தை உண்டாக்கியது.

யேகோவா - இயேசு

மோசே ஆண்டவரிடம் அவரின் திருநாமம் என்ன வென்று கேட்டபொழுது ஆண்டவர் தன்னுடைய நாமம், ''இருக்கிறவாய் இருக்கிறேன்'' ("I am who I am") என்று பதில் சொன்னார். இந்த இடத்தில் உள் மூலமொழி YHWH ஆகும். இருக்கிறேன் என்பது இதன் சரியான மொழி பெயர்ப்பு ஆகும். செப்டுயேஜின்ஸ் என்ற வகுப்பார் இந்த எபிரேய வார்த்தையை கிரேக்கு மொழியில் மொழி பெயர்த் தபோது இருக்கிறேன் (I am) என்பதை ஈகோ எய்மி (Ego Eimi) என்று எழுதினர். இயேசு வாழ்ந்த காலத்தில் பேசப் பட்ட மொழி கிரேக்கு மொழியாகும். ஆங்கிலோ சாக் ஸன்ஸ் என்ற வகுப்பார் YHWH என்ற வார்த்தையை உச்ச ரிக்க ஆசை கொண்டு எபிரேயர்களும் யூதர்களும் வாயினால் உச்சரிக்கவே பயப்படும், அவ்வார்த்தைக்கு இடையில் AE என்ற இரண்டு உயிர் எழுத்துக்களையும் சேர்த்து (YAHWEH) யாஹ்வே என்று எழுதினார்கள். யாஹ்வே என்பது ஆங்கி

லத்தில் Jehovah என்றும் தமிழில் யேகோவா என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ஈகோ எய்மி (I am) என்ற வார்த்தையை இயேசுக் கிறிஸ்து எங்கெல்லாம் பயன்படுத்தினார் என்று பார்ப்போம். நான்தான் என்று உறுதிப்படுத்திச் சொல்வதற்கு மட்டுமே ஈகோ எய்மி என்ற வார்த்தை பயன்படுத்தப்படும். உதாரணத்திற்கு "அவனோ 'நான்தான்' என்றான்" *(யோவான் 9:9)*

இயேசுக் கிறிஸ்து உபயோகித்த இடங்கள்:

ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னே நான் இருக்கிறேன். *(ஈகோ எய்மி) யோவான் 8:58.* அப்பொழுது அவர் மேல் எரியும்படி கற்களை எடுத்துக் கொண்டார்கள் *(59)*

நானே அவர் *(ஈகோ எய்மி)* என்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களில் சாவீர்கள் *(யோவான் 8:24).*

நானே அவர் *(ஈகோ எய்மி)* என்றும்... அறிவீர்கள் *(யோவான் 8:78).*

நான்தான் *(ஈகோ எய்மி)* என்றார். நான்தான் *(ஈகோ எய்மி)* என்று அவர் சொன்ன மாத்திரத்தில் அவர்கள் தரையில் விழுந்தார்கள் *(யோவான் 18:5,6).* மேலும் மாற்கு தன் சுவிசேஷத்தை எழுத ஆரம்பிக்கையில் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள் *(மாற்கு 1:2)* என்று இயேசுக் கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லும்போது பழைய ஏற்பாட்டுத் தீர்க்க தரிசனப் புத்தகத்தின் மேற்கோளைப் பயன்படுத்துகிறார் *(ஏசாயா 40:3).* இந்த இரண்டு வசனங்களிலும் கர்த்தர் என்ற வார்த்தைக்குப் பயன்படுவது YHWH என்ற வார்த்தையே! கர்த்தர் வேறு இயேசு வேறு அல்ல என்பது இதினால் நிரூபணமாகும். *யோவான் 1:23*ஐயும் கவனிக்கவும். கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் *(யோவான் 2:32)* என்ற வசனத்தைப் பவுல் ரோமர் *10:13*ல் கையாளும் பொழுது

இயேசு கிறிஸ்துவே யேகோவா என்பது நிரூபணம். இயேசுக் கிறிஸ்து மனிதனானால் இரட்சிக்கப்படுவதற்கும் ஸ்நானம் எடுப்பதற்கும் யேகோவாவின் நாமத்தையல்லவா பயன்படுத்தியிருக்க வேண்டும்! மனிதனால் இரட்சிப்பு வருமா? மனித நாமத்தில் தேவ ஆலோசனையை, கட்டளையை, நீதியை நிறைவேற்ற முடியுமா? எனவே, இயேசுவே யேகோவா என்பது நிரூபணமாகிறது. நீ மனுஷனாயிருக்க உன்னைத் தேவனென்று சொல்லி, இவ்விதமாய்த் தேவ தூஷணம் சொல்கிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்று யூதர்கள் (யோவான் 10:33) செய்த அதே தப்பிதத்தை யேகோவா சாட்சிகள் இன்று செய்து வருகிறார்கள். யூதர்களுக்கு வந்த ஆக்கினை இவர்களுக்கும் உண்டு.

கர்த்தர் - இயேசு

பழைய ஏற்பாட்டில் கர்த்தர் என்பதற்கு **ஏலோ கிம்** என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது போலவே புதிய ஏற்பாட்டில் **தியோ** என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. அது எபிரேய மொழி, இது கிரேக்க மொழி, இயேசுக் கிறிஸ்து அநேகந்தடவை இந்தப் பெயராலேயே அழைக்கப்பட்டிருக்கிறார்.

அநேக மனிதர்கள், தாங்கள் இறைவனில் ஒன்றித்திருப்பதினால் தங்களையே கடவுள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். தங்கள் அங்கத்தில் இறைவன் இருப்பதினால் **அகம் பிரம்மம்** என்ற தத்துவத்தைச் சொல்லுவார்கள். இயேசுக் கிறிஸ்து இறைவனில் ஒன்றித்திருப்பவர் அல்ல. தன்னில் இறைவனைக் கொண்டிருப்பவரும் அல்ல. அவரே இறைன். தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்று வேதம் சொல்லுவதினால் இயேசுவைக் கர்த்தர் என்று பார்க்க யூதர்களுக்குப் பாரம்பரியம் தடையாய் போயிற்று.

குமாரனை நோக்கி: **தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய இராஜ்ஜியத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது (எபிரெயர்**

1:8) என்ற வசனத்தில் ஆண்டவர் குமாரனை நோக்கித் தேவனே என்றழைத்தாரே! அப்படியானால் இந்தத் தேவன் யார்? ஒரே தேவனாகிய கர்த்தர் நமக்குண்டு. அவரே கர்த்தரும் இயேசுவும் ஆவியானவராகவும் இருக்கிறார். சங்கீதம் *45:6,7*ல் காணப்படுகிறபடி தேவன் தம்மையே தேவன் என்று அழைக்கிறாரா? அப்படியானால் இந்த தேவன் யார்? ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணப் பட்ட கிறிஸ்துவல்லவா?

நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுக் கிறிஸ்து *(1 பேதுரு 1:1)* என்ற பேதுரு எழுதுகிறாரே! இரட்சகராயிருக்கிற இயேசுதான் தேவன் என்பதும் தேவன் தான் இரட்சகராகிய இயேசு என்பதும் விளங்கவில்லையா?

மகாதேவனும் நமது இரட்சகருமாயிருக்கிற இயேசுக் கிறிஸ்து *(தீத்து 2:13)* என்று பவுல் எழுதுகிறாரே!

கர்த்தரைக் கண்டோம் என்று சீஷர்கள் சொன்னபோது, தோமா அவரைத் தான் நேரில் கண்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்று சொன்னாரே! அப்பொழுது கர்த்தர் அவனுக்கெதிரில் வந்தாரா? அல்லது இயேசு அவனுக்கெதிரில் வந்தாரா? இங்கேயும் இயேசுவே கர்த்தர் என்று காண்கிறோம்.

நீங்கள் சிலுவையிலறைந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று (அப்போஸ்தலர் *2:36)* பேதுரு பிரசங்கித்தது யாரை?

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசி (அப் போஸ்தலர் *16:31)* என்றால் இயேசுதான் கர்த்தர் என்பது விளங்காதா? சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் (வெளிப்படுத்தல் *7:10)* என்னும்போது, அதில் வீற்றிருப்பவரும் அதின் மத்தியில் இருப்பவரும் ஆட்டுக்குட்டியானவரே (வசனம் 17) என்பது விளங்காமலா போய்விடும்?

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிச் சொல்லும் போது (ஏசாயா 9:6) அங்கே அவருக்குப் பல நாமங்கள் கொடுக்கப்படுகின்றன. அதிலொன்று **வல்லமையுள்ள தேவன்** என்பது? இந்த தேவன் யார்? யேகோவா வல்லமை யுள்ள தேவனென்றால் இவருக்கும் மேம்பட்ட வேறொரு வல்லமையுள்ள தேவன் உண்டா? அல்லது வல்லமையுள்ள தேவனே மாம்சத்தில் வெளிப்பட்டு வல்லமையுள்ள தேவ னாக விளங்கினாரா? இயேசுக் கிறிஸ்து வல்லமையுள்ள தேவனாக இல்லாவிட்டால் அவர் அதிசயமானவருமல்ல. ஆலோசனைக் கர்த்தாவுமல்ல, நித்திய பிதாவுமல்ல, சமாதா னப் பிரபுவுமல்ல. நமக்குக் கொடுக்கப்பட்ட குமாரன் ஏசாயா 9:6ன்படி ஐந்து நாமங்களுக்குப் பாத்திரர். அதில் மூன்றை எடுத்துக் கொண்டு வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா ஆகிய இரண்டை மட்டும் இல்லையென்று சொல்லுவது அபத்தம்!

ஆதியிலே வார்த்தை இருந்தார். அந்த வார்த்தை தேவ னிடத்திலிருந்தார். அந்த வார்த்தை தேவனாயிருந்தார் (யோவான் 1:1). அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினா லும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார் (வசனம் 14). தேவன் மாம்சத்தில் வெளிப்பட் டார் என்பது உண்மை (1 தீமோத்தேயு 3:16). அப்படியா னால் தேவன் வேறு இயேசுக் கிறிஸ்து வேறு என்று சொல்வது எப்படி உண்மையாகும்?

யேகோவா சாட்சிக்காரர்கள் தங்களுக்கென்று உண்டாக் கிக் கொண்ட வேதாகமத்தில் ''அந்த வார்த்தை ஒரு தேவனா யிருந்தார்'' என்று (The Word was a God) ஒரு என்ற பதத்தைச் சேர்த்திருக்கிறார்கள். வேத பண்டிதர்களான திரு. டாக்டர் ஏர்னஸ்ட் காட்மேன், கோல்வெல், திரு. F.F. புரூஸ் போன்ற வர்கள் இலக்கண ரீதிப்படி The Word was a God என்று சொல்வது பெரிய தவறு என்று நிரூபித்திருக்கிறார்கள். தேவனாயிருந்தார். தேவனோடு இருந்தார் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? ஒரே சமயத்தில் எப்படி தேவனாக வும் தேவனுடனும் இருக்க முடியும் என்று இவர்கள்

கேட்பார்கள். தேவத்துவத்தின் சகல பரிபூரணமும் இவருக்குள் வாசமாயிருக்கிறதை இவர்களால் உணர இயலாது. அவர் தேவனாக இருக்கிறபடியினால் தேவனுடனும் தேவனாகவும் ஆவியாகவும் இருக்கிறார்.

இந்திய சித்தர்களில் ஒருவரான திருமூலர் என்பவர் ''தனக்குத் தானே மகனாகிய தத்துவம்'' என்றார். தேவனுக்குக் குமாரனாக அல்ல தேவ குமாரனாகவே இருந்தார். தேவனுக்கு மகனாக அல்ல, தேவனே மகன் என்பது தத்துவம். அந்த தத்துவ நாயகனாக இயேசு உலகில் இருந்தார்.

அல்பா - ஒமெகா - இயேசு

ஏசாயா *41:4*ல் முந்தினவராயிருக்கிற கர்த்தர் நான் தானே; பிந்தினவர்களோடும் இருப்பவராகிய நான் தானே என்று காணப்படுகிறது.

வெளிப்படுத்ன விசேஷம் *1:17*ல் இயேசு நான் முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன் என்றார்.

ஏசாயா *48:12*ல் நான் அவரே: நான் முந்தினவரும் நான் பிந்தினவருமாமே என்று காணப்படுகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் *2:8*ல், இயேசு சிமிர்னா சபையின் தூதனுக்குச் சொல்லும்போது, நான் முந்தினவரும் பிந்தினவரும் என்றார்.

மேலும் வெளிப்படுத்தின விசேஷம் *1:8*ல் இருக்கிறவரும் இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்! நான் அல்பாவும் ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார்.

வெளிப்படுத்தின விசேஷம் *21:6*ல் நான் அல்பாவும் ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்றும்

*22:13*ல் நான் அல்பாவும் ஓமெகாவும் ஆதியும் அந்தமும் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன் என்றும் இயேசு சொல்லுவதைப் பார்க்கலாம்.

தேவன் வேறு இயேசு வேறு என்றால் இரண்டு அல்பா இரண்டு ஓமெகா இருக்க முடியுமா? இரண்டு ஆதி, இரண்டு அந்தம் இருக்க முடியுமா? பொய் சொல்ல தேவன் மனிதனல்ல. இயேசுக் கிறிஸ்துவின் வாயில் வஞ்சனையோ, கபடோ, பொய்யோ இல்லை. அப்படியாயின் யார் பொய்யன்? இயேசுக் கிறிஸ்துவை தேவனின் திருத்துவத்திலிருந்து பிரித்து மனிதனாக்கப் பார்க்கும் யேகோவா சாட்சிக்காரர்களே பொய்யர். பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய எரிகிற அக்னியும் கந்தகமுமான கடலிலே பங்கடைவார்கள்.

யேகோவா இரட்சகர் - இயேசு இரட்சகர்

நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும் உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் (ஏசாயா 43:3).

அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான் (மத்தேயு 1:21).

மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்திலே வரக் கண்டு இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1;29) என்றார்.

அவர் மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள் (யோவான் 4:42).

தமக்குக் கீழ்படிகிற யாவரும் நித்ய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி.... (எபிரேயர் 5:9).

எல்லா மனுஷருக்கும் விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை

வைத்திருக்கிறோம் *(1 தீமோத்தேயு 4:10)*, **மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து** *(தீத்து 2:13)*.

நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயை *(தீத்து 3:4)*.

மேற்கண்ட வசனங்கள் யாவரும் கர்த்தராகிய அல்லது யேகோவாவாகிய இரட்சகர் இயேசுக் கிறிஸ்துவாகப் பூமியில் அவதரித்து எல்லா ஜனங்களுக்கும் இரட்சிப்பை அருளினார் என்பது தெளிவாகிறது. இவையெல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்ததுபோல,

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும்
இரட்சகர் உங்களுக்குத் தாவீதின்
ஊரிலே பிறந்திருக்கிறார்

என்று தேவ தூதன் மேய்ப்பவர்களுக்குச் சொன்னதிலிருந்து விளங்கும். இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்க யேகோவா சாட்சிகளுக்கு நேரமில்லையா அல்லது மனம் இல்லையா என்றும் விளங்கவில்லை.

பவுல் தீத்துவுக்கு எழுதும்போது **மகாதேவனும் நமது இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து** *(தீத்து 2:13)* என்று குறிப்பிடுகிறார். தீத்து *2:11,13; 3:4,5* ஆகிய வசனங்களில் இரட்சிப்பை அளிக்கத்தக்க **தேவ கிருபை** என்றும் **மகா தேவனும் இரட்சகருமாகிய** என்றும் **நம்முடைய இரட்சகராகிய தேவன்** என்றும் **பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும்** நம்மை இரட்சித்தார் என்று எழுதுவதிலிருந்து பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று நிலைகளிலும் தேவன் காணப்படுவதைப் புரிந்து கொள்ளலாம்.

இயேசு இராஜா - யேகோவா இராஜா

கர்த்தரே மகாதேவனும், எல்லா தேவர்களுக்கும் மகா இராஜனுமாயிருக்கிறார் *(சங்கீதம் சங்கீதம் 95:2)*

நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும் இஸ்ரவேலின் சிருஷ்டிகரும் உங்கள் இராஜாவுமானவர் (ஏசாயா 43:15).

ஏசாயா, எரேமியா, தானியேல், சகரியா, மல்கியா ஆகிய நூல்களில் கர்த்தராகிய யேகோவா, இராஜா என்று அழைக்கப்பட்டிருக்கிறார்.

உலகத்தில் எத்தனையோ இராஜாக்கள் உண்டு. பழைய ஏற்பாட்டில் கர்த்தர் இராஜா என்று அழைக்கப்பட்டது போல இயேசு அழைக்கப்பட்டால் அவர் இராஜாக்களுக்கு இராஜா, இராஜாதி இராஜா என்று அழைக்கப்பட்டிருக்கிறார்.

ஆட்டுக்குட்டியானவர் (இயேசு) கர்த்தாதி கர்த்தரும் இராஜாதி இராஜாவுமாயிருக்கிற படியினால் அவர்களை ஜெயிப்பார் (வெளி 17:14).

இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா என்ற நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது (வெளி 19:16).

பழைய ஏற்பாட்டு யேகோவாவைக் குறித்து **உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும் கர்த்தாதி கர்த்தரும்** *(உபாகமம் 10:17) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார்.* இதே வசனம் *1 தீமோத்தேயு 6:15*ல் இயேசுவுக்கும் கொடுக்கப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டுகிறேன். அவரே என்ற **வார்த்தை யேகோவாவையும் இயேசுவையும் குறிப்பதாகும்** வெளி *1:12-18* வரையுள்ள வசனங்கள் பழைய ஏற்பாட்டின் யேகோவாவுக்குரிய தன்மைகளாகும். அதுவே இயேசுவுக்கும், கொடுக்கப்பட்டிருப்பதால் **யேகோவாவே இயேசு ராஜா! ஆமென்.**

நியாயாதிபதி யேகோவா - இயேசு நியாயாதிபதி

தேவனே நியாயாதிபதி *சங்கீதம் 50:6* **தேவனே சர்வ லோக நியாயாதிபதி** *(ஆதி 18:25).*

அவர் பூலோகத்தை நீதியோடும் ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந் தீர்ப்பார் (சங். 96:13).

பட்சபாதமில்லாமல் நியாயந்தீர்க்கிற பிதா (1 பேதுரு 1:17) இப்படிப்பட்ட நியாயாதிபதியாகிய யேகோவா புதிய ஏற்பாட்டில், பிதாவைக் கனம் பண்ணுகிறது போல எல்லோரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்குப் பிதாவானவர் தாமே ஒருவருக்கும் தீர்ப்புச் செய்யாமல் நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருப்பதினால் (யோவான் 5:22) பிதாவும் குமாரனும் ஏக தேவனாகவே இருக்கிறதைக் காண முடியும்.

யோவான் எழுதிய நற்செய்தி நூலில் 5:17-20 வரைக் கவனமாகப் படித்தால் யேகோவாவும் இயேசுவும் தேவத்துவத்தில் ஒன்றாக இருப்பதை அறிய இயலும்.

உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்கப் போகிறவராகிய இயேசு கிறிஸ்து (2 தீமோத்தேயு 4:1) மாம்சத்தில் வெளிப்பட்ட (1 தீமோத்தேயு 3:16) யேகோவாவேயன்றிப் பின்னே யார் என்பதை யேகோவா சாட்சிக்காரர்கள் விளங்கிக் கொள்ளாவிட்டால் முடிவு காலத்தில் இயேசு அவர்களை நியாயந்தீர்ப்பார். ஏனென்றால் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனையடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 5:10).

இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருகிய யேகோவா (எரேமியா 17:10 வெளிப்படுத்தல் 2:23ல் நானே (இயேசுவே) உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்து கொள்ளும் என்று சொல்வதினால் யேகோவாவாகிய நியாயாதிபதியே இயேசுக் கிறிஸ்து என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

யேகோவா ஒளி - இயேசு ஒளி

ஆண்டவரும் அவருடைய பிரசன்னமும் வெளிச்சமாகவே காட்டப்பட்டுள்ளது.

கர்த்தர் என் வெளிச்சம் *(சங்கீதம் 27:1)*

கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சம் *(ஏசயா 60:19,20)*

கர்த்தராகிய தேவரீர் என் விளக்காயிருக்கிறீர் *(2 சாமுவேல் 22:29).*

இயேசுக் கிறிஸ்து பூமியில் இருந்த நாட்களில் யேகோவாவே வெளிச்சம் என்று சொல்லாமல் நானே ஒளி (Eigo Eimi) என்றார். அத்துடன் நில்லாமல் ஒளியானது (யேகோவாவாகிய ஒளியாகிய இயேசு) உலகத்தில் வந்திருந்தும் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது என்றார் *(யோவான் 3:19) கர்த்தராகிய யேகோவா ஒளியானால் அந்த ஒளியாகிய யேகோவா உலகத்தில் வந்து நானே ஒளி என்று சொன்னது இயேசுவும் யேகோவாவும் ஒன்று என்பதை வெளிப்படுத்துகிறதல்லவா?* நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார் *(யோவான் 9:5)* இயேசுவுக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது *(யோவான் 1:4)* எந்த மனுஷனையும் பிரகாசிக்கச் செய்கிற ஒளியே மெய்யான ஒளி *(யோவான் 1:9) யேகோவா ஒளியாய் இருப்பது போலவே இயேசுவும் ஒளியாய் இருக்கிறார் (ஏசாயா 60:19,20, வெளி 21:23; 22:5).*

யேகோவா கன்மலை - இயேசு கன்மலை

கன்மலை என்பது பல பொருளில் சிந்திக்கக் கூடியது. ஆனால், அதுவே தேவனுக்குச் சொல்லப்படும்போது அது தேவனுடைய ஆறுதல், தனித்தன்மை, பலம் ஆகியவற்றைக் குறிக்கம். தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு என்னென்ன செய்தார் என்பதை மோசே ஜனங்களுக்

குச் சொன்னபோது இரண்டு பெயர்களை உபயோகித்தார். ஒன்று யேகோவா, மற்றொன்று கன்மலை என்பது.

கர்த்தருடைய நாமத்தை பிரசித்தம் பண்ணுவேன்.... அவர் கன்மலை. அவர் சத்தியமுள்ள தேவன் (எபிரேய பதம் யேகோவா)

யஷுரன் தன் இரட்சிப்பின் கன்மலையை அசட்டை பண்ணினான்.

உன்னை ஜெனிப்பித்த கன்மலையை நினையாமற் போனாய். உன்னைப் பெற்ற தேவனை (யேகோவாவை) மறந்தாய் (உபாகமம் 32:3,4,15,18)

அவன் என்னை நோக்கி: நீர் என் பிதா, என் தேவன் (யேகோவா) என் இரட்சிப்பின் கன்மலை என்று சொல்லுவான் (சங்கீதம் 89:326).

கர்த்தரை (யேகோவாவை) கெம்பீரமாய்ப் பாடி நம்முடைய இரட்சண்யக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக் கடவோம் வாருங்கள் (சங்கீதம் 95:1).

கர்த்தர் (யேகோவா) என் கன்மலையும் என் கோட்டையும், என் இரட்சகருமானவர் (2 சாமுவேல் 22:2) யேகோவா ஜீவனுள்ளவர். என் இரட்சிப்பின் கன்மலையாகிய தேவன் (யேகோவா) உயர்ந்திருப்பாராக (2 சாமுவேல் 22:47).

இஸ்ரவேலின் தேவனும் (யேகோவாவும்) இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லி உரைத்ததாவது *(2 சாமுவேல் 23:3)*

கர்த்தரையல்லாமல் தேவன் (யேகோவா) யார்? நம்முடைய தேவனையன்றி (யேகோவாவன்றி) கன்மலையும் யார்? (2 சாமுவேல் 22:32).

மேற்கண்ட வசனங்கள் யாவும் பழைய ஏற்பாட்டு யேகோவா எப்படிக் கன்மலை என்று அழைக்கப்பட்டார் என்பதை தெளிவுபடுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் இந்தக் கன்மலை என்ற பெயர் இயேசுவுக்குக் கொடுக்கப் படுவதி னால் மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசுவே யேகோவா என்பது விளங்கும்.

அந்தக் கன்மலை கிறிஸ்துவே *(1 கொரிந்தியர் 10:4)*

இந்த வசனத்தை விளங்கிக் கொள்ள யாத்திராகமம் **17:6** நெகேமியா **9:15** ஆகிய வசனங்களைப் படிக்க வேண் டும். பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவாகிய மேசியா இல்லை. அவர் வரவேண்டும் என்று எதிர்பார்த்தனர். பழைய ஏற்பாட்டில் யேகோவா கன்மலையாகக் காட்டப்ப டுகிறார். அந்தக் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள் என்று சொல்லும் போது, யேகோவாவாகிய கன்மலையே இயேசுக் கிறிஸ்து என்பதைப் பவுல் அப்போஸ்தலர் காண முடிந்தது.

இதோ இடறுதற்கான கல்லையும் தவறுதற்கான கன்ம லையையும் சீயோனில் வைக்கிறேன். அவரிடத்தில் விசுவா சமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை. (ரோமர் **9:33**) என்று பவுல் எழுதும்போது யேகோவாவைச் சொன்னாரா அல்லது இயேசுவைச் சொன்னாரா? யேகோவா கன்மலையானால் அந்த கன்மலை இயேசுவே, கிறிஸ்தவர் கள் இடறவில்லை. **யூதர்களும் யேகோவா சாட்சிகளுமே இடறுகிறார்கள்.**

யேகோவா மீட்பர் - இயேசு மீட்பர்

கர்த்தரிடத்தில் கிருபையும் அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு; அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிர மங்களினின்றும் மீட்டுக் கொள்வார் (சங்கீதம் 130:7,8).

இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் (யேகோவா) சொல்லுகிறதாவது (ஏசாயா 48:17).

இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர் *(ஏசாயா 54:5).*

யேகோவாவாகிய இரட்சகர் **"உன் பிராணனை அழி வுக்கு மீட்டு"** *(சங்கீதம் 103:4)* என்று தாவீது சொல்வதினால் யேகோவா மீட்பர் என்பது மெய். இந்த யேகோவா இஸ்ர வேலரை மட்டும் மீட்காமல் உலகத்தின் பாவங்களிலிருந்து சர்வ ஜனங்களையும் மீட்கும்படியாகத் தம்மைப் பலியாக்க மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசுவாகவும் இருக்கிறார்.

> இவருடைய (இயேசுவினுடைய) இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டா யிருக்கிறது *(எபேசியர் 1:7).*

> தம்முடைய சொந்த இரத்தத்தினாலே... நித்திய மீட்பை உண்டு பண்ணினார் *(எபிரெயர் 9:12).*

யேகோவாவாகிய மீட்பர் இயேசு கிறிஸ்துவாகிய மீட் பராக உலகத்தில் வந்தார். ஆமென். யேகோவா வேறு இயேசு வேறு அல்ல. தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். *அல்லேலூயா!*

வேதாகமத்தில் ஆண்டவருக்கு இன்னொரு அருமை யான பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அது **மணவாளன் அல்லது புருஷன்** என்பது *(ரிக் வேதத்திலும் ஆண்டவருக்கு புருஷா என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது).*

உன் சிருஷ்டிகரே உன் நாயகர் *(ஏசாயா 54:5)*

அக்கலத்தில் நீ என்னை இனி பாகாலி என்று சொல்லா மல் ஈஷி என்று சொல்லுவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் *(ஓசியா 2:16).*

பாகாலி = **தேவன்**
ஈஷி = **புருஷன்**

இஸ்ரவேலருக்குத் தேவனாகிய யேகோவா நாயகனாக இருந்தது போலக் கிறிஸ்து இயேசு சபைக்கு நாயகனாக

இருக்கிறார். இயேசுக் கிறிஸ்துவே சபையின் நாயகன் என்பதை மாற்கு *2:18,19ல்* அறிவித்திருக்கிறார்.

மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளிலும் இது வெளிப்படுகிறது (மத்தேயு *25:1*).

பவுல் அப்போஸ்தலர், நான் உங்களைக் கற்புள்ள **கன்னிகையாகக்** கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்திருக்கிறபடியால்... *(2 கொரிந்தியர் 11:2)* என்று எழுதுகிறார்.

புதிய எருசலேம் பரலோகத்தைவிட்டு இறங்கி வருவதைக் கண்ட யோவான் அதைத் தன் **புருஷனுக்காக** அலங்கரிக்கப்பட்ட மணவாட்டி என்கிறார் (வெளி *31:3*).

ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி *(வெளி 21:9)* என்கிறார்.

யேகோவா எப்படி மணவாளனாகிய புருஷனோ அப்படியே இயேசுவும் இருக்கிறார். யேகோவாவின் எந்த தன்மையிலும் அவர் குறைந்தவராக வேதம் சொல்லவில்லை. யேகோவா அரூபி, இயேசு சொரூபி, அவ்வளவுதான். யேகோவா சாட்சிக்காரர்கள் உணர்வார்களா?

யேகோவா மேய்ப்பன் - இயேசு மேய்ப்பன்

''கர்த்தர் என் மேய்ப்பர்'' (சங்கீதம் 22:1)

''இஸ்ரவேலின் மேய்ப்பரே'' *(சங்கீதம் 80:1).*

யேகோவா தன்னை மேய்ப்பன் என்று வலியுறுத்திச் சொல்லுவதை எசேக்கியல் *34ம்* அதிகாரத்தில் ஏராளம் காணலாம். இயேசுக் கிறிஸ்துவும் தன்னை **நல்ல மேய்ப்பன்** என்றும் *(யோவான் 11:10)* **ஒரே மேய்ப்பன்** என்றும் *(யோவான் 10:16)* சொல்லியிருக்கிறார். அப்போஸ்தலர்களில் பவுல் என்பவர் இயேசு கிறிஸ்துவை ஆடுகளுடைய

பெரிய மேய்ப்பன் என்றும் (எபிரெயர் 13:20) அப்போஸ்தலனாகிய பேதுரு, பிரதான மேய்ப்பன் (1 பேதுரு 5:4) என்றும் மேய்ப்பரும் கண்காணியும் (1 பேதுரு 2:25) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பழைய ஏற்பாட்டு மேய்ப்பனாகிய யேகோவா புதிய ஏற்பாட்டில் இயேசுக் கிறிஸ்துவாகத் தன்மை வெளிப்படுத்துகிறார்.

யேகோவா சிருஷ்டி கர்த்தர்
இயேசு சிருஷ்டி கர்த்தர்

ஆதியாகமம் 1:1ல் ஆதியிலே தேவன் (யேகோவா) வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று காணப்படுவதால் யேகோவா சிருஷ்டி கர்த்தர் என்பது விளங்கும்.

தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார் என்று எலிகூ சொன்னபடியினால் (யோபு 33:4) சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவருக்கும் பங்கு உண்டு என்று காணலாம். **சமுத்திரம் அவருடையது. அவரே அதை உண்டாக்கினார்! வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று** (சங்கீதம் 95:5) என்று காணப்படுவதினாலும், **நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது** (சங்கீதம் 102:25) என்று காணப்படுவதினாலும், **நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்கரை நினை** என்று (பிரசங்கி 12:1) காணப்படுவதினாலும் **பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய (யேகோவாவாகிய)** அநாதி தேவன் (ஏசாயா 40:28) என்று காணப்படுவதினாலும் சகல சிருஷ்டிப்புக்கும் காரணராயிருக்கிறவர் கர்த்தர் (யேகோவா) என்று விளங்கிக் கொள்ளலாம்.

புதிய ஏற்பாடும் இயேசுக் கிறிஸ்துவை சகல **சிருஷ்டிக்கும் காரணர்** என்று காட்டுவதினால் யேகோவாவே இயேசுக் கிறிஸ்து என்பது விளங்கும். ஆதியிலே வார்த்தை இருந்தார். அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தார். அந்த வார்த்தை

தேவனாயிருந்தார். அவர் (இயேசு) ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று உலகமோ அவரை அறியவில்லை (யோவான் *1:12,3,10*).

மேற்கண்ட வசனங்களில் காணப்படும் அவர் **வார்த்தை, ஜீவன், ஒளி** என்ற பதங்கள் யாவும் இயேசுவைக் காட்டும் வார்த்தைகளாகும். பவுல் அப்போஸ்தலர் இதே காரியங்களை எடுத்துரைக்கும்போது,

அவருக்கள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தின பேரானவர். எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி. அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். (கொலோசெயர் *1:16, 17,18*).

மேற்கண்ட வசனங்களில் பவுல் ஒரே ஒருவரைக் குறித்தே எழுதுகிறார். அந்த ஒருவரே சகலவற்றையும் உண்டாக்கினவர். சபைக்குத் தலையானவர், ஆதி, மரித்தோரிலிருந்து எழும்பின முதற்பேறானவர். எபேசியர் *5:23*, யோவான் *1:1*, *1* கொரிந்தியர் *15:20* ஆகிய வசனங்களின்படி இயேசுவே இவைகள் யாவும் என்பதையும் நன்றாக விளங்கிக் கொள்ளலாம்.

யேகோவா சாட்சிக்காரர்கள் யேகோவா வேறு இயேசு வேறு என்று ஒரு சில வசனங்களை மட்டும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, வசனத்தில் பழக்கமில்லாத

கிறிஸ்தவர்களை தங்கள் மார்க்கத்திற்குத் திருப்பி இயேசுக் கிறிஸ்துவை மறுதலிக்கச் செய்கிறார்கள்.

தேவன் தமது சுய இரத்தத்தினாலேயே சம்பாதித்துக் கொண்ட தமது சபை (அப்போஸ்தலர் 20:28) என்று வசனம் சொல்லுகிறதே! தமது சுய இரத்தத்தைச் சிந்தி அதன் மூலமாக இரட்சிப்படைந்தவர்களைக் கொண்ட சபையைச் சம்பாதித்த தேவன் (யேகோவா) இயேசு என்பதை இவர்களால் மறுக்க இயலுமா?

> மாம்சத்தில் வந்த இயேசுக் கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அனேக வஞ்சகர் உலகத்தில் தோன்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான். கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நடக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால் அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான். (2 யோவான் 9-11).

யேகோவா சாட்சிக்காரர்களுக்குச் சபை கிடையாது. அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர் மேய்ப்பர், போதகர் என்ற தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியர் கிடையாது. சபை ஆராதனை கிடையாது. Kingdom Hall என்று ஒரு பெயரில் கிறிஸ்தவ விசுவாசிகளை எப்படி யேகோவா சாட்சிக்காரர்களாக்குவது என்ற பயிற்சி தரப்படுகிறது. இவர்களுக்கு ஜெபஜீவியம் கிடையாது. ஜெபிக்கவும் மாட்டார்கள். பழைய ஏற்பாட்டு உபதேசமோ புதிய ஏற்பாட்டு உபதேசமோ எதுவும் கிடையாது. இவர்கள் பைபிளைத் தூக்கிக் கொண்டு வீடு வீடாய் சந்திக்கக் கிளம்பி விடுகிறார்கள். வேதத்தைக் கற்றுத் தருபவர்கள் போல இயேசுக்

கிறிஸ்துவை மறுதலிக்கச் செய்து விடுவார்கள். இப்படிப் பட்டவர்கள் உங்களிடம் வந்தால் முதலாவது அவர்கள் எந்த சபை என்று கேளுங்கள். பின்பு ஜெபம் செய்யச் சொல்லுங்கள். இந்த இரண்டிலும் அவர்கள் தடுமாறுவார் கள். பின்பு அவர்களை உங்கள் போதகர்களிடம் சென்று அனுமதி சீட்டு வாங்கிக் கொண்டு வந்து சந்திக்கச் சொல் லுங்கள். சரியாய்ப் போய்விடும்.

இயேசுக் கிறிஸ்துவைத் தேவன் அல்ல என்று சொல்லு வதற்குக் காரணம் என்ன?

1. என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்

யோவான் *14:28*லுள்ள இவ்வசனத்தை வைத்து யேகோவா பெரியவர், இயேசு சிறியவர் என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவதினால் இயேசு தம்மையே குறைத்து மதிப்பிட்டார் என்று பொருளல்ல. அடிமையின் ரூபமெ டுத்து மனுஷ சாயலான தேவன் பூமியிலிருக்கும்போது, தன் மனுக் கோலத்தைக் காட்டிலும் பிதாவின் தன்மை பெரியது என்று சொன்னாரேயன்றி தான் பிதாவுக்குச் சமமானவர் என்பதில் கொஞ்சமும் மறந்துவிடவில்லை. அதே யோவான் *14*ம் அதிகாரத்தில் பிலிப்புவிடம் இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண் டான். அப்படியிருக்கப் பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய் (யோவான் *14:7,8*) என்று கேட்டதை மறந்துவிடக் கூடாது. இந்தப் பதில் பிதாவும் குமாரனும் ஒன்றே என்பதை மிகவும் தெளிவுபடுத்துகிறது. என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கி றான். (யோவான் *12:45*) என்று இயேசு சொன்னது இதை இன்னும் உறுதிப்படுத்துகிறது. பிதா என்பதும் கர்த்தரு டைய கிரியைகளின் தன்மைகளாகும். குமாரனுடைய கிரி யைத் தன்மைகள் பிதாவின் கிரியைத் தன்மைகளுக்குக் கீழ்ப்பட்டதேயாயினும் தேவன் ஒருவரே! கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் அவரே!

2. கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார் *(1 கொரிந்தியர் 11:3)*

இந்த வசனத்தை முழுவதும் வாசித்தால் ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரிக்குப் புருஷன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன் என்று எழுதியிருப்பதைக் காணலாம். இதிலிருந்து

மனிதன் - கிறிஸ்து
ஸ்திரி - மனிதன்
கிறிஸ்து - தேவன்

என்று மூன்று ஒத்திட்டுப் பார்த்தலை அறிய இயலும். மேற்கண்ட மூன்றில் முதல் இரண்டு காரியங்களை யேகோவா சாட்சிக்காரர்கள் பொருட்படுத்துவதில்லை. கிறிஸ்து தேவன் ஆகிய ஒன்றைப் பிடித்துக் கொள்வார்கள். கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாய் இருக்கிறார். இதிலிருந்தே தேவன் கிறிஸ்துவை விடப் பெரியவர் இல்லையா என்று கேட்பார்கள். இந்த மூன்றிலும் யாருக்கும் யார் பேரிலும் அதிகாரம் கிடையாது. இப்பூவுலகில் இருக்கும் போது மனிதருள் மனிதராகக் காணப்படும்படிக்கு, கிறிஸ்து தம்மை பிதாவின் தலைமைக்குக் கீழ்படுத்திக் கொண்டார். இதனால் இயேசு சிறியவரோ, பிதா பெரியவரோ அல்ல. இயேசுவே பிதா, பிதாவே இயேசு.

சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சலகத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார் *(1 கொரிந்தியர் 15:28).*

மேற்கண்ட வசனத்தையும் யேகோவா சாட்சிக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாக பாவிப்பார்கள்.

கீழ்ப்படுத்துதல் என்ற வார்த்தை குறைவை அல்லது தாழ்வைக் குறிக்கும் சொல் அல்ல. கீழ்ப்படுத்தினதால்

தேவனைவிட இயேசு தாழ்ந்தவரல்ல. அல்லது தேவனுக்குச் சமமாயிருப்பதற்கு அருகதையற்றவர் என்று பொருளாகி விடாது. பாவத்திற்குக் காரணம் கீழ்படியாமை, ஆதியில் தூதன் பாவம் செய்து பிசாசாக மாறினான். பின்பு மனிதன் பிசாசுக்குக் கீழ்ப்படிந்து பாவியானான். கீழ்ப்படியாமையின் பாவத்தை நீக்கக் கீழ்ப்படிதலுள்ள ஒருவர் தேவை. மரண பரியந்தம் கீழ்ப்படிகிற ஒருவர் தேவை. மாம்சத்தில் வெளிப்பட்ட யேகோவா (இயேசு) அதை நிறைவேற்றினார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். *(1 தீமோத்தேயு 3:16)* இதைத் தொடர்ந்து எபிரேயர் *10:4-7* வரையிலம் ரோம் *5:16-19* வரையிலும் வாசித்துத் தெளிவு பெறுதல் வேண்டும். தேவன் தமது சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட சபை என்று *(அப்போஸ்தலர் 20:28)* சொல்லப்பட்டபடி இரத்தம் சிந்தி நம்மை மீட்டுக் கொண்ட தேவனாகிய யேகோவாவே கிறிஸ்து என்பதை மறந்துவிடக் கூடாது. இயேசுக் கிறிஸ்து தாமாகவே தம்மைக் கீழ்ப்படுத்திக் கொண்டாரேயன்றி வேறு யாரும் அவரைக் கீழ்ப்படுத்தவில்லை.

4. ''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ... *(யோவான் 3:16)* இன்னும் யோவான் *3:18, 1:14,18* ஆகிய வசனங்களிலும் இந்த ஒரே பேரான என்ற வார்த்தைகள் உண்டு. இதை வைத்து இயேசு உண்டாக்கப்பட்டவர் என்று நினைத்துவிடக் கூடாது. ஆங்கில வேதாகமத்தில் begotton என்ற வார்த்தையானது Monas Genes என்ற இரண்டு வார்த்தைகளால் ஆன வார்த்தையாகும். Monos என்றால் ஒரே, தனி என்று பொருள்படும். Genes என்றால் தன்மையுடையவறென்று பொருள்படும். ஒரு மிருகம் தன்னைப் போன்ற மிருகத்தைப் பெற்றுத் தருகிறது. அதே மிருகம் தான் வசிக்க ஒரு பள்ளத்தையோ புதரையோ உண்டாக்குகிறது. ஒரு பறவை தன்னைப் போன்ற குஞ்சுப் பறவையை தன் முட்டையிலிருந்து பெற்றுத் தருகிறது. அதே பறவை தான் வசிக்கக் கூடு ஒன்றை உண்டாக்குகிறது. ஒரு மனிதன் தன்னைப் போன்ற ஒரு சிலையை உண்டாக்க முடியும். உண்டாக்கப்பட்ட சிலை

மனிதனல்ல. உண்டாக்கப்பட்ட கூடு குஞ்சுப் பறவை யல்ல. உண்டாக்கப்பட்ட புதர், பள்ளம் மிருகம் அல்ல. அதேபோல் தேவனாகிய யேகோவா எல்லாவற்றையும் உண்டாக்கினார். ஆனால், அவர் இயேசுவை உண்டாக்க வில்லை. அவர் ஆதியிலே தேவனோடு இருந்தார். உலகத் தின் பாவங்களைச் சுமந்து தீர்ப்பதற்குத் தேவன் தம்முடைய ஒரே தன்மையை வெளிப்படுத்தும்படிக்கு மாம்சத்தில் பிறந் தார். கன்னிகையின் கர்ப்பத்தில் அவர் உண்டாக்கப்படா மல், உதித்தார்.

5. தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளா கத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே *(1 தீமோத்தேயு 2:5,6)* என்ற வசனத்தில் உள்ள மனுஷனாகிய என்ற வார்த்தையை யேகோவா சாட்சிக்காரர் கள் பிடித்துக் கொள்வார்கள். அதேபோல் ரோமர் *5:12,21* வரையிலுள்ள வசனங்களிலம் மனிதன் என்ற வார்த்தை காணப்படுகிறபடியினால் இயேசு மனிதனே, தேவன் அல்ல என்பது இவர்களின் வாதம்.

வேதாகமம் இயேசுவை மனிதனாகக் காட்டுவது போலவே தேவனாகவும் காட்டுவது, இவர்களின் கண்களுக் குத் தோன்றாது. மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்த வார்த்தை *(யோவான் 1:14)* ஆதியில் தேவனாகவும் தேவனு டனும் *(1:1)* இருந்ததை அவர்கள் அறியார்க்ள். தோமா இயேசுவை என் மனிதனே என்று சொல்லாமல் என் ஆண்டவனே என் தேவனே *(யோவான் 20:28)* என்று சொன்னதும் இவர்களுக்கு மறந்துவிடும். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக இவருக்குள் (இயேசு வுக்குள்) வாசமாயிருப்பதும் இவர்களுக்குத் தெரியாது. *(கொலோ 2:9)* மகாதேவனும் இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்து *(தீத்து 2:13)* என்ற வசனத்தையும் படித்திருக்க மாட்டார்கள். நம்முடைய தேவனும் இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்து *(2 பேதுரு 1:1)* என்ற வசனம் இவர்கள் வேதத்தில் இல்லையோ என்னவோ?

பிதாவாகிய தேவன் குமாரனை நோக்கி: தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது (எபிரேயர் 1:8) என்று சொன்னதும் இவர்கள் பார்வைக்கு மறைந்துவிட்டது போலும். மனுஷன் மூலமாகத் தான் அப்போஸ்தலனாகவில்லை, இயேசுக் கிறிஸ்துவினாலும் தேவனாலும் என்று பவுல் கலாத்தியர் 1:1ல் சொல்லும்போதும் மனுஷருடன் இயேசுவை ஒப்பிடாமல் தேவனாகவே காண்பதும் இவர்களுக்கு விளங்காது. இயேசுக் கிறிஸ்து நூற்றுக்கு நூறு நம்மைப் போல மனிதன். அதே சமயத்தில் அவர் நூற்றுக்கு நூறு யேகோவா, தேவ குமாரன், இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தர் அல்பாவும் ஒமெகாவுமானவர் என்பதை மறந்துவிடக் கூடாது.

நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே! (மாற்கு 10:18) என்று இயேசு சொன்னதை வைத்து, பார்த்தீர்களா, பார்த்தீர்களா இயேசுவே சொல்லிவிட்டார் என்று வாதிடுபவர்கள் உண்டு. இந்த சம்பவத்தைக் கூர்ந்து கவனித்தால், ஒருவன் ஓடிவந்தான். அது அவனுடைய வாஞ்சையையும் ஆர்வத்தையும் காட்டுகிறது. முழங்காலிட்டான், அது அவனுடைய பணிவையும் மரியாதையையும் காட்டுகிறது.

நல்ல போதகரே என்று அழைத்தான். மனிதனில் ஒருவனாகிலும் நல்லவன் இல்லை என்பதை ரோமர் 3:10-12, பிரசங்கி7:20 ஆகிய வசனங்கள் மூலம் அறியலாம். தேவன் ஒருவரே நல்லவர் என்பதை அந்த மனிதன் அறிந்திருந்தான். இவர் தெய்வப் போதகர். ஆகையால் நல்ல போதகரே என்று அழைத்ததைக் கேட்டதும், என்னைத் தெய்வமென்று அறிந்து கொண்டதினால் அப்படிச் சொல்கிறானோ என்று இயேசு அப்படிக் கேட்டார்.

அப்போஸ்தலர் 3:14-22, கொரிந்தியர் 5:21, எபிரேயர் 4:15, 7:26, 1 பேதுரு 2:22, 1 யோவான் 3:5 ஆகிய வசனங்கள் இயேசுவை பரிசுத்தர், பாவமற்றவர் என்று காட்டும் வசனங்களாகும். மனிதன் பிறப்பிலேயே பாவியாயிருக்கிறான்.

இயேசு தேவனாயிராவிட்டால் அவனை பார்த்து உன் சிலுவையை எடுத்துக் கொண்டு தேவனைப் பின்பற்று என்று சொல்லியிருப்பார். ஆனால், மாறாக என்னைப் பின்பற்று என்றே சொன்னார். இயேசுக் கிறிஸ்து பூமியில் வாழ்ந்த நாட்களில் தான் தேவனாக இருந்தும் அதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாழ்த்தினபடியினால் மனிதனுக்கு மனிதனாகவும் அதே சமயத்தில் தேவனுடைய தற்சொரூபமாகவும் தம்மை வெளிப்படுத்தினார்.

யேகோவா சாட்சிகள் என்ற இக்கூட்டம் சார்லஸ் டேஸ் ரஸ்ஸல் (Charles Taze Russell) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இவருடைய கொள்கை என்னவெனில் இயேசு ஒரு சிறு கடவுள். யேகோவா இவரை மாம்சத்தில் பிறக்கும்படிச் செய்தார். இயேசு யேகோவாவினால் உண்டாக்கப்பட்டவர் என்பதே.

இதை நிரூபிக்க இவர் பைபிளில் சில வசனங்களைப் பொறுக்கியெடுத்தும், சில வசனங்களில் சில மாறுதல்கள் செய்தும் தமக்கென்று ஒரு பைபிளை உருவாக்கி தன்னுடையது உண்மை, மற்றதெல்லாம் பொய் என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.

இக்கூட்டத்தாருக்குச் சபை கிடையாது. சபை உபதேசம் கிடையாது. ஜெபம் கிடையாது. பரிசுத்த ஜீவியத்தைப் பற்றியும் இக்கூட்டத்தாருக்கு அக்கறை கிடையாது. வேத அறிவு இல்லாத கிறிஸ்தவர்களின் வீடுகளுக்குச் சென்று, தங்கள் புத்தி சாதுர்யத்தினால் தங்கள் கொள்கைகளைப் பரப்பி தங்கள் கூட்டத்தைப் பெரிதாக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுவார்கள்.

யேகோவாவின் அருட் செய்தி என்ன? அவருடைய சித்தத்தின்படி பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு எப்படிக் கிடைத்தது? மீட்பர் யார்? யேகோவா மாம்சத்தில் பிறந்தாரே! அவர் யார்? யேகோவாவின் சித்தத்தில் ஆசாரிப்புக் கூடாரம், தேவாலயம், சபை இவைகளைக் குறித்த சித்தம்

என்ன? சபைக்கு யேகோவா தந்த உபதேசம் என்ன? பரலோகம், நரகம் இவைகளைக் குறித்து வேதம் சொல்லும் உண்மையென்ன? இரட்சிப்பு எவ்வாறு மனிதனுக்கு அருளப்படுகிறது போன்ற கருத்துகளை இவர்கள் பிரசங்கிக்க மாட்டார்கள். மாறாக, இயேசு மனிதன் என்று நிரூபிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

கிங்டம் ஹால் (Kingdom Hall) இவர்கள் கூடும் இடத்திற்கு பெயர். அங்கு ஆராதனையோ ஆராதிப்போ அபிஷேகமோ கிடையாது. கிறிஸ்தவர்களை எப்படி யேகோவா சாட்சிகளாக மாற்றுவது என்பது பற்றிச் சொல்லிக் கொடுப்பார்கள்.

வேதாகமத்தில் இயேசுக் கிறிஸ்து நூற்றுக்கு நூறு தேவனாகவும், நூற்றுக்கு நூறு மனிதனாகவும் காணப்படுகிறார். தேவனாகக் காட்டப்படும் வசனங்களை விட்டுவிட்டு, அவர் மனிதனாகக் காட்டப்பட்டுள்ள வசனங்களை மட்டும் பொறுக்கியெடுத்து, இயேசுக் கிறிஸ்து மனிதனே என்று சாதிக்கப் பாடுபடுவார்கள். பரிசேயரும் வேதபாரகரும் இயேசுக் கிறிஸ்துவை அழிக்கப் பாடுபட்டது போல, யேகோவா சாட்சிகளும் முயற்சித்து வருகிறார்கள்.

இயேசுக் கிறிஸ்துவை யாராலும் அழிக்க இயலாது. ஏனெனில் இவரே மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன். தேவனே ஆவியானவர். ஆவியானவரே இயேசுக் கிறிஸ்துவாக வெளிப்பட்டவர்.

நானே அவர் (Ego eimi) என்று நீங்கள் விசுவாசியாதிருந்தால் உங்கள் பாவங்களில் சாவீர்கள் *(யோவான் 8:24)* என்று இயேசுக் கிறிஸ்து சொன்ன வசனத்தை இவர்கள் தங்கள் கொள்கைக்காக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

நான் போய் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை உங்களுக்கு அனுப்புவேன் என்று இயேசு சொன்னார். இயேசு மனிதரானால் ஒரு மனிதன் பரலோகத்திற்குப் போய் பரிசுத்த ஆவியை அனுப்ப இயலுமா?

பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து பறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார் (யோவான் 15:26) என்று இயேசு சொன்னார். பரிசுத்த ஆவியானவர் மனிதனைக் குறித்து சாட்சிக் கொடுப்பாரா? அப்படிக் கொடுப்பாரென்றால் ஏன் இயேசுக் கிறிஸ்து ஒருவரைக் குறித்து மட்டும் சாட்சி கொடுக்க வேண்டும்? எல்லா மனிதர்களைக் குறித்தும் ஆவியானவர் சாட்சி கொடுக்க மாட்டாரா? அப்படியானால் இயேசு எப்படி எந்த விதத்தில் மற்ற மனிதர்களினின்றும் வித்தியாசமானவர்.

இயேசுக் கிறிஸ்துவைக் குறித்து: ''அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலைத்திருக்கிறது'' (கொலோசெயர் 1:17) என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த இயேசுக் கிறிஸ்துவை எதில் சேர்ப்பது? தேவனிலா அல்லது மனிதனிலா? மனிதனில் என்றால் அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவரானது எப்படி?

பல இடங்களில் இயேசுக் கிறிஸ்து தம்மை யேகோவா என்று திருஷ்டாந்தங்களுடன் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த இயேசுவை யேகோவா என்று ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் அவரவர்களுடைய இஷ்டம். இயேசு பொய் சொல்ல மாட்டார். இயேசுவை யேகோவா அல்ல என்று சொல்பவர்களே பொய்யர். பொய்யர் அனைவரும் இரண்டாவது மரணமாகிய எரிகிற அக்னிக் கடலிலே பங்கடைவார்கள்.

யேகோவா மேசியாவாக உலகில் வரப் போவதைக் குறித்து அனேகத் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருக்கிறார்கள். புற ஜாதியினருக்கும் இது தெரிந்திருந்தது.

கிறிஸ்து என்னப்பட்ட மேசியா வருகிறார் என்று அறிவேன். அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் (யோவான் 4:25) என்று சமாரிய நாட்டு ஸ்திரி

இயேசுவிடமே சொன்னதிலிருந்து இதை விளங்கிக் கொள் ளலாம். என்றாலும் இயேசுக் கிறிஸ்து மாம்சத்திலிருந்து காலங்களில் எல்லாவற்றையும் வெளிப்படுத்தி விட வில்லை.

இன்னும் அனேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை இப்பொ ழுது நீங்கள் தாங்க மாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்து வார்.

அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்ட யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதிலிருந்து எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்ப டுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடைய வைகள். அதினாலே அவர் என்னுடையதிலிருந்து எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன் (யோவான் 16:13,14,15) என்ற வசனங்கள் சிந்தனைக்குரியவைகள்.

பரிசுத்த ஆவியானவர் வரும்போது, தாம் கேள்விப்பட் டதை என்கிறார். ஆவியானவர் என்பது வெறும் ஆவியல்ல. ஆள் தத்துவமானவர் என்பது இங்கே விளங்குகிறது. வெறும் ஆவி கேட்க இயலாது. ஆள் தத்துவமானவரே கேட்க இயலும். அப்படியானால் யாரிடம் கேட்டார்? என்ன கேட்டார்? மேலும் என்னுடையதிலிருந்து என்றும், பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகளென் றும் இயேசுக் கிறிஸ்து சொல்லுவதினால், பிதா, குமாரனா கிய இயேசுக் கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூன்று நிலைகளிலும் யேகோவாவாகிய தெய்வம் தமது சித்தத்தின் திட்டங்களை வகுத்து உலகிற்கு வெளிப்படுத்துகின்ற அழ கைக் காணலாம். இத்திட்டங்களைப் பூர்வகால முதல் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகளைக் கொண்டு பிதாக்களுக்குத் திருவுளம் பற்றினார். இக்கடைசி காலத்தில் இயேசுக் கிறிஸ்துவின் மூலமாய் பரிசுத்த ஆவியா

னவர் சகல சத்தியங்களுக்குள்ளும் நம்மை வழி நடத்துகிறார்.

	யேகோவா	
பிதா	குமாரன்	பரிசுத்த ஆவியானவர்
இஸ்ரவேலருக்கு	இஸ்ரவேலருக்கும் புறஜாதியாருக்கும்	சபைக்கு (கிறிஸ்துவின் சரீரம்)

இம்மூவரும் ஒன்றாய் (யேகோவாவாக) இருக்கிறார்கள். இயேசுக் கிறிஸ்து, பரமேறு முன்பு சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அவர்களைச் சீஷராக்கி, அவர்களுக்குப் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே (நாமங்களிலே என்று சொல்லவில்லை) ஞானஸ்நானம் கொடுக்கச் சொன்னார்.

எனவே, யேகோவா சாட்சிகள் என்று சொல்லித் திரிகிறவர்கள் முதலாவது வேதத்தை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். இரண்டாவது யேகோவாவின் மூன்று தன்மைகளை விளங்கிக் கொள்ள வேண்டும். மூன்றாவது மனம் திரும்பி இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டு, அதற்கு அடையாளமாகப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்று சாட்சிகளாய் ஜீவிக்க வேண்டும்.

யேகோவா

நானே தேவன் என்பதற்கு நீங்கள்
எனக்கு சாட்சிகள் (ஏசாயா 43:12)

இயேசு

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும்

சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் *(அப்போஸ்தலர் 1:8)*.

ஆவியானவர்:

அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். *(எபேசியர் 1:14)*

பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய யேகோவாவுக்கு சாட்சிகளாயிருப்பீர்களாக. ஆமென்.

நாங்கள் இயேசுவே கர்த்தர்
என்று அறிக்கை செய்கிறோம்

(பவுல்)

யேகோவாவைப் பின்பற்றுகிறவன் யூதன். இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் கிறிஸ்தவன்.

யூதனையும் யூதனல்லாதவனையும் தமக்குள் ஒன்றுபடுத்திக் கொள்கிறவர் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து.

இயேசுக் கிறிஸ்துவுக்கே மகிமையும் கனமும் துதியும் உண்டாவதாக. ஆமென்.

இப்புத்தகத்தை வாசித்தவர்கள் தங்கள் கருத்துக்களை எங்களுக்கு எழுதினால் வரவேற்கிறோம். எதிர்ப்புத் தெரிவிக்கிறவர்கள் வேத ஆதார வசனங்களுடன் எழுதுங்கள். நன்றி.

ஆசிரியர்

வாசியுங்கள்

சுத்திகரிக்கும் அக்னி

மாதாந்திர பத்திரிகை

PUBLISHERS

AGNI MINISTRIES INC.

P.O. Box - 8659, Chennai - 41.

Phone : 044-4917519

e-mail : agni@md3.vsnl.net.in